# பாண்டிய நாட்டுப் பெரும் புலவர்

டாக்டர் மா. இராசமாணிக்கனார்



T14767
R005D07
T.14767

...ங் கம்பெனி, சென்னை-1

# பாண்டிய நாட்டுப் பெரும்புலவர்

# பாண்டிய நாட்டுப் பெரும்புலவர்

ஆசிரியர் :
டாக்டர் மா. இராசமாணிக்கனார்,
M.A., L.T., M.O.L., Ph.D.,
தமிழ்ப் பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
6, கொண்டி செட்டித் தெரு, சென்னை–1

பதிப்புரிமை] 1955 [விலை அணா 15

முதற்பதிப்பு—அக்டோபர், 1953
இரண்டாம் பதிப்பு—1954
மூன்றும் பதிப்பு—1955

APPROVED FOR CLASS USE—NON-DETAILED STUDY
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to Part I-B of the
Fort St. George Gazette dated 19-5-1954, Page 120]

Kabeer Printing Works, Madras (2980)

# முகவுரை

**பாண்டிய நாட்டுப் பெரும்புலவர்** என்னும் பெயருடன் வெளிவரும் இத்துணைப்பாடநூல், (1) இன்றுள்ள மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த பாலவனத்தம் குறுநில மன்னரான **பாண்டித்துரைத்தேவர்,** அவரால் ஆதரிக்கப் பெற்ற பெரும்புலவர்களான (2) **அரசஞ்சண்முக னர்,** (3) **ரா. இராகவையங்கார்,** (4) **திரு. நாராயணையங்கார்** என்பவர் வரலாறுகளைக் கொண்டது.

பாண்டித்துரை புலவர்களை ஆதரித்த வள்ளல்; சிறந்த தமிழ்ப் புலவர்; செய்யுளியற்றும் ஆற்றல் பெற்றவர். இவரால் ஆதரிக்கப் பெற்ற புலவர் மூவரும் உயர்ந்த நூலாசிரியர்கள்; உரையாசிரியர் கள்; சிறந்த சொற்பொழிவாளர்கள்; ஆராய்ச்சி யாளர்கள்; பல்கலை விற்பன்னர்கள்.

பேராசிரியர் **மு. இராகவையங்கார்** அவர்கள் எழுதியுள்ள செந்தமிழ் வளர்த்த தேவர்கள், ஆராய்ச்சித்தொகுதி என்னும் இருநூல்களும், மகாவித்துவான். ரா. இராகவையங்கார் அவர்கள் எழுதிய சேதுநாடும் தமிழும் என்னும் நூலும் பாண்டித்துரைத் தேவர் வரலாறு எழுதப் பெருந் துணை புரிந்தன. மகா வித்துவான். ரா. இராக வையங்கார் வரலாற்றுக் குறிப்புக்களை எனக்குத வியவர் அப்பேராசிரியர் திருமகனுர் வித்துவான் **இராமாநுஜையங்கார்** ஆவர். யான் எழுதி யனுப்பிய பிரதியை இவரும் **பேராசிரியர் மு. இராகவையங்கார்** அவர்களும் நன்கு பார்வை

யிட்டு வேண்டும் திருத்தங்களைச் செய்து உதவினார்கள். திரு. நாராயணையங்கார் வரலாற்றுக் குறிப்புக்களை உதவியவர் அப்பேராசிரியர் திருமகனார் உயர்திரு. **அப்பனையங்கார்** அவர்கள். அரசஞ்சண்முகனார் வரலாற்றுக் குறிப்புக்களை எனக்குதவியவர்கள் **சா. இராக்கப்ப பிள்ளை, M. சின்னசாமிப் பிள்ளை, M. சுப்பிரமணிய முதலியார்** என்னும் அறிஞர்களாவர். இம்முத்திறத்தாரும் இவ்வரலாறுகளையும் பார்வையிட்டு உதவினார்கள். இவரனைவர்க்கும் என் உளமார்ந்த நன்றி உரியது. பாண்டித்துரைத் தேவரது படத்தைப் புகைப்படம் எடுக்க இசைவு தந்த மதுரைத் தமிழ்ச் சங்க அதிகாரிகட்கும் புலவர் மூவருடைய திருவுருவப் படங்களை உதவியருளிய மேற்சொல்லப்பட்ட அறிஞர் முத்திறத்தார்க்கும் என் நன்றி உரியது.

நாம் வாழும் இவ்விருபதாம் நூற்றாண்டில் நம் தாய்மொழியை வளர்த்த இப்பெருமக்கள் வரலாறுகளை நாம் அறிதல் நமது கடமையன்றோ? தமிழ் வளர்ச்சியில் ஆர்வமுள்ள இக்கால மாணவருலகம் இதனை நன்கு வரவேற்கும் என்று நம்புகிறேன்.

தியாகராாசர் கல்லூரி,
மதுரை.

**மா. இராசமாணிக்கம்**

# உள்ளுறை


பக்கம்

I. பாண்டித்துரைத் தேவர்—

1. சேதுபதிகளும் தமிழ் வளர்ச்சியும் ... 1
2. பொன்னுச்சாமித் தேவர் ... 6
3. இராமநாதபுரத்தில் புலவரவை ... 11
4. தமிழ்த் தொண்டு ... 16
5. நற்பண்புகள் ... 22

II. அரசஞ் சண்முகனுர்—

1. சோழவந்தான் ... 27
2. இளமையும் கல்வியும் ... 30
3. நாடறிந்த தமிழ்ப்புலவர் ... 35
4. நற்பண்புகள் ... 46

III. மகாவித்துவான் ரா. இராகவையங்கார்—

1. இளமைப்பருவம் ... 53
2. புலமையும் பாராட்டும் ... 59
3. சேது சம்ஸ்தான மகாவித்துவான் ... 64
4. தமிழ்த்தொண்டு ... 77
5. குண நலன்கள் ... 87

பக்கம்

IV. திரு. நாராயணையங்கார்—


1. பாண்டிய நாடும் தமிழும் ... 93
2. பிறப்பும் வளர்ப்பும் ... 96
3. கல்விப் பயிற்சி ... 99
4. தமிழ்ப்பணி ... 103
5. குண நலன்கள் ... 107



பாண்டித்துரைத் தேவர்

# பாண்டிய நாட்டுப் பெரும்புலவர்

## I. பாண்டித்துரைத் தேவர்
(கி. பி. 1867–1911)

### 1. சேதுபதிகளும் தமிழ் வளர்ச்சியும்

**சேது நாடு**

**சேது** என்பது இராமன் கடல்மேல் இட்ட அணை என்று நூல்கள் கூறுகின்றன. இச் சேதுவைத் தன்னகத்தே பெற்ற நாடு **சேதுநாடு** எனப்படும். அஃது இராமேசுவரம், இராமநாதபுரம், பரமக்குடி முதலிய நகரங்களைத் தன்னகத்தே பெற்ற கீழ்க் கடற்கரைப் பகுதியாகும். இன்றைய சிவகங்கை ஜமீனும் பழைய காலத்தில் சேது நாட்டுடன் சேர்ந்திருந்தது. சேதுநாட்டின் தலை நகரம் **முகவை** எனப்படும் **இராமநாதபுரம்** ஆகும்.

சேதுநாட்டில் இராமேசுவரம், நவபாஷாணம், திருப்புல்லாணி, திருவுத்தரகோசமங்கை, திருப்புத்தூர், திருவாடானை, திருக்கோட்டியூர் முதலிய சமயச் சிறப்புடைய தலங்கள் இருந்துவருகின்றன. இவற்றுள் இராமேசுவரம், திருவுத்தரகோசமங்கை, திருவாடானை என்பன சைவத் திருப்பதிகள்; திருபுல்லாணி, நவபாஷாணம், திருக்கோட்டியூர் என்பன வைணவத் திருப்பதிகள்.

**சங்ககாலச் சிறப்பு**

இச்சேதுநாடு இற்றைக்குச் சற்றேறக்குறைய 1800 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மணம் கமழ்ந்த நாடாக இருந்தது என்பது பின்வரும் உண்மைகளால் தெளிவாகும்: நற்றிணை என்னும் சங்க நூலில் ஒரு செய்யுளைப் பாடிய நல்லந்தை யார் என்னும் புலவர் திருக்கோட்டியூரைச் சேர்ந் தவர். நெடுந்தொகையிலும் குறுந்தொகையிலும் ஒவ்வொரு பாட்டைப் பாடியுள்ள அள்ளூர் நன்முல்லையார் சிவகங்கையைச் சார்ந்த அள்ளூரி னர். நற்றிணையில் ஒரு செய்யுளைப் பாடிய வெள் ளைக்குடி நாகனார் சேதுநாட்டு வெள்ளைக்குடி என் னும் ஊரினர். நெடுந்தொகையிலும் குறுந்தொகை யிலும் பல பாக்களைப் பாடிய ஒக்கூர் மாசாத்தியார் திருக்கோட்டியூரை அடுத்த ஒக்கூரினர். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய கைந்நிலை என்னும் நூலைப் பாடியவர் புல்லங்காடர் என்பவர். புல்லங்காடு என்பது புல்லாரணியம்; அஃதாவது, திருப்புல்லாணி என்னும் திருப்பதியாகும்.

**இடைக்காலச் சிறப்பு**

இராமேசுவரம் முதலிய சேதுநாட்டுச் சைவத் திருப்பதிகள் நாயன்மார்களால் பாடப்பெற்றவை. அவ்வாறே சேதுநாட்டு வைணவத்தலங்கள் ஆழ் வார்களால் பாடப்பெற்ற சிறப்புடையவை. பிற் காலச் சோழருள் விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் என் னும் மூவர் அவைக்களத்தில் பெரும்புலவராக விளங்கி, அம்மூவர் மீதும் உலாப்பாடிப் புகழ்பெற்ற

ஒட்டக்கூத்தர் பிறந்த 'மலரி' என்பது இச் சேதுநாட்டைச் சேர்ந்ததாகும் என்று ஒரு சார் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்*.

**பிற்காலச் சிறப்பு**

சேதுநாட்டைச் சேர்ந்த வேம்பற்றூர், புலவர் பலரைப் பெற்றெடுத்த திருப்பதியாகும். அப்பதியிலே பிறந்த செவ்வைச் சூடுவார் என்பவர் தமிழில் பாகவத புராணத்தைப் பாடினர். பெரும்பற்றப்புலியூர் நம்பி என்ற மாதவபட்டர் பழைய திருவிளையாடலைப் பாடினர். சௌந்தரியலகரியைத் தமிழிற் பாடிய கவிராஜ பண்டிதரும் இவ்வூரினரே. நெல்லைக் கோவையைப் பாடிய சாமி கவிகாளருத்திரர், அழகர் கலம்பகம் பாடிய கவிகுஞ்சர பாரதி முதலிய புலவர் பெருமக்கள் இப்பதியினரே யாவர்.

திருச்செந்திற் பிள்ளைத்தமிழ், சீவகசிந்தாமணிச் சுருக்கம் இவற்றைப் பாடிய பகழிக்கூத்தர் சேதுநாட்டுச் 'சன்னசி' என்னும் சிற்றூரினரே. அரிச்சந்திர புராண விருத்தம் பாடிய வீரை ஆசுகவிராயர் சேதுநாட்டு 'வீரை' என்னும் சிற்றூரினர். படிக்காசுப் புலவர் முதலிய புலவர் பலரை ஆதரித்த சீதக்காதி என்ற முஸ்லிம் வள்ளல்

---

* "சேதுநாடும் தமிழும்," பக். 9. "பேரளத்தை அடுத்த 'பூந்தோட்டம்' என்பதன் பழைய பெயர் 'மலரி' என்பதாக இருக்கலாம். அங்கு ஒட்டக்கூத்தரால் கட்டப்பெற்ற கலைமகள் கோவில் இன்றளவும் சிறந்து விளங்குகின்றது. அக்கோவிலைச் சூழச் செங்குந்த முதலிகள் இற்றைக்கு 60 ஆண்டுகட்கு முன்வரை வாழ்ந்திருந்தனர் என்றும், பின்னர்ப் பல்வேறு நாடுகளுக்குக் குடியேறினர் என்றும் அவ்வூரார் கூறுகின்றனர்," என்பது பிறிதொருசார் ஆராய்ச்சியாளர் கூற்று.

சேதுநாட்டைச் சேர்ந்த கீழைக்கரையினர் என்பதை மறத்தலாகாது. மீசலவண்ணக் களஞ்சியப் புலவரும், முகைதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழும், இராசராசேசுவரி பஞ்சரத்தினமும் பாடிய சவ்வாதுப் புலவரும் சேதுநாட்டினரேயாவர்.

**சேதுபதிகள்**

இராமன் அணைகட்டி முடிந்தவுடன் அவ்வணையைக் காக்கும்படி அப்பெருமான் மறவர் தலைவர் ஒருவரை நியமித்த செய்தி திருப்புல்லாணி மகாத்மியத்தில் கூறப்பட்டுள்ளது. அம்மறவர் தலைவர் வழியினரே சேதுபதிகள் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இச்சேதுபதிகள், "சேது காவலர்" என்று தம்மைக் கூறிக்கொள்வதிலிருந்தும் இவ்வுண்மை வெளியாகும். இவர்கள் பன்னெடுங்காலமாக இந்நாட்டை ஆண்டுவந்தவராயினும், இவர்தம் நாடு பாண்டிய நாட்டகத்தில் உள்ள காரணத்தால், அப்பேரரசர்க்கு அடங்கிய சிற்றரசராகவே இருந்துவந்தனர்.

சோழர்கள் சேதுநாடு உள்ளிட்ட பாண்டிய நாட்டுப் பகுதிகளைச் சில சமயங்களில் கைப்பற்றி ஆண்டனர். அக்காலங்களில் சேதுபதிகள் சோழர்க்கு அடங்கிய சிற்றரசர்களாக இருந்து வந்தனர்; விஜயநகர ஆட்சிக் காலத்தில் மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களுக்கு உறுதுணையாக வாழ்ந்தனர்; பிற்காலத்தில் ஆங்கில ஆட்சிக்கு அடங்கினர்; எனினும், முதலில் ஆங்கிலேயரை எதிர்த்த காரணத்தால், கி. பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சேதுநாடு தன் அளவில் சுருங்கியது.

**சேதுபதிகளும் தமிழ் வளர்ச்சியும்**

பாண்டிய நாடே செந்தமிழ் நாடு என்று நீண்ட காலமாகப் பாராட்டப்பட்டுவந்ததாதலின், அந்நாட்டின் ஒரு பகுதியாகிய சேதுநாடும் செந்தமிழ் வளர்த்த நாடு என்பதில் ஐயமில்லை அன்றோ? சேதுபதிகள் மறவர் மரபினர் ஆதலின், வீரத்தில் இணையற்று விளங்கினர்; அவ்வாறே தம் தாய்மொழியாம் தமிழில் மிகச் சிறந்து விளங்கினர். கி. பி. 1645 முதல் 1670 வரையில் சேது நாட்டு அரசராக விளங்கிய தளவாய் ரகுநாத சேதுபதியின் சம்ஸ்தானப் புலவராக இருந்த **அமிர்த கவிராயர்** என்பவர் **ஒருதுறைக் கோவை** என்னும் நூலைப் பாடினர்; "நாணிக்கண் புதைத்தல்" என்னும் அகப்பொருள் துறையில் நானூறு செய்யுட்களைப் பாடி முடித்தார்; முதலிரண்டு அடிகளில் சேதுபதியின் சிறப்புக்களைக் கூறிப் பின்னிரண்டு அடிகளில் அகப்பொருள் துறை அமையப் பாடினர். சேதுமன்னர் புலவரைப் பாராட்டிப் **பொன்னுங்கால்** என்னும் ஊரை அவருக்கு மானியமாக விட்டனர்; அத்துடன் ஒரு செய்யுளுக்கு ஒரு பொன் தேங்காய் வீதம் நானூறு செய்யுட்களுக்கு நானூறு பொன் தேங்காய்களை உருட்டினர் என்றும் கூறுவர்.

இவ்வாறு இச்சேதுபதிகளிடம் நிலமானியம் பெற்ற புலவர் பலராவர்: ஊருணிக் கோட்டையிலும், கமுதை முதலிய இடங்களிலும் இக்காலத்தில் வாழும் புலவர் மரபினர் சேதுபதிகள் அளித்த நிலமானியத்தை இன்றளவும் அனுபவித்துவருகின்றனர். தம் காலத்துச் சேதுபதிமீது **தளசிங்க மாலை** என்னும் நூலைப் பாடி, **அழகிய சிற்றம்**

பலக் கவிராயர் மிதிலைப்பட்டி என்ற ஊரினைப் பரிசாகப் பெற்றார். இவர் வழியினர் இன்றும் அதனை அனுபவித்து வருகின்றனர். இசைப் பதங்கள் பாடுவதில் வல்லவரான மதுரகவி என்பவர் சேது நாடாண்ட மங்களேசுவரி இராணி யாரைப் பாடிக் காக்கைக்குளம் என்ற ஊரைப் பரிசிலாகப் பெற்றனர்.

சுருங்கக் கூறின், பல நூற்றாண்டுகளாகச் சேதுபதிகள் தம் தாய்மொழியாகிய தமிழைப் போற்றிவந்தனர்; சங்ககாலப் பாண்டியரைப் போலவே கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தனர்; தம்மை அடுத்த புலவரை ஆதரிக்கும் தண்ணளி நிறைந்திருந்தனர்; பாரி, பெரும்புலவர்கட்குப் பல ஊர்களை நல்கியது போலத் தக்க புலவர் பெருமக்களுக்குப் பல ஊர்களைத் தானமாக வழங்கினர். இத்தகைய செயற்கருஞ் செயல்களால், சேது பதிகள் தமிழ் இலக்கிய நூல்களில் அழியாப் புகழ் பெற்றனர்.

## 2. பொன்னுச்சாமித் தேவர்

### இராணியார் ஆட்சி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் இராமசாமி சேதுபதி என்பவர் பட்டத்திற்குரிய பிள்ளையின்றி இறந்தார். அதனால் அவருடைய மனைவியார் பர்வதவர்த்தினி நாச்சி யாரே நாட்டு ஆட்சியை ஏற்று நடத்தினர். அக் காலத்தில் அவர்க்கு அமைச்சராய் இருந்து உதவியவர் அவரது தமையனார் கோட்டைச்சாமித் தேவர் என்பவர்.

## பொன்னுச்சாமித் தேவர்

தமக்குப் பிறகு தம் தங்கை மைந்தர் இருவருள் ஒருவரைச் சேதுபதியாக்க வேண்டுமென்று இராணியார் விரும்பினர். அத் தங்கையார் சிவஞானத் தேவர் என்பவரை மணந்து இராமநாதபுரத்து தென் கிழக்கே பதினறு கல் தொலையிலுள்ள **புது மடம்** என்னும் சிற்றூரில் வாழ்ந்தார். இராணியாரது விருப்பம் தெரிந்தவுடனே சிவஞானத் தேவர் தம் குடும்பத்துடன் இராமநாதபுரம் அரண்மனையை அடைந்தனர். 1847-ஆம் ஆண்டு மே மாதம் 24-ஆம் நாள் சிவஞானத் தேவரின் இரண்டாம் மகனர் **முத்து ராமலிங்க சேதுபதி** என்ற திருப்பெயருடன் அரசரானர். அப்பொழுது அவர் சிறுவராய் இருந்தமையின், அவரது தந்தையார் 'சீமை பேஷ்கார்' என்ற அலுவற் பதவியை ஏற்று நாட்டாட்சியைக் கவனிக்கலானர். அவரது மூத்த மகனரான பொன்னுச்சாமித் தேவர் தம் தந்தையாருடனிருந்தே அரசியல் அலுவல்களைக் கவனித்து வந்தார். அவருக்குப் பதினேழு வயது நடக்கும் பொழுது தந்தையார் காலமானர். உடனே இராணியார் கட்டளைப்படி பொன்னுச்சாமித் தேவர் 'சீமை பேஷ்கார்' பதவியைத் தாமே ஏற்று நடத்தலானர்.

## சிறந்த ஆட்சியாளர்

பொன்னுச்சாமித் தேவர் இளைஞராக இருந்தபோதிலும் தமிழறிவிலும் அரசியலறிவிலும் சிறந்து காணப்பட்டார். இவர் சேது நாட்டிற்கு வரவேண்டிய வசூலை ஒழுங்காக வசூலிக்க ஏற்பாடுகள் செய்தார்; ஆங்காங்குக் குழப்பம் விளைவித்துக்கொண்

டிருந்த மறவர் தலைவர்களை அடக்கினர் ; குடிகளுக்குத் தேவையான ஏரி, குளங்கள், கால்வாய்கள் முதலியவற்றைச் செப்பனிட்டார். இத்தகைய சீர்திருத்தங்களால் நாட்டு வருவாய் மிகுதிப்பட்டது. குடிகளும் இவரைப் பாராட்டினர். அக்காலத்தில் இராணியார் கொண்ட சுவீகாரம் செல்லாது என்று சேதுபதி மரபினர் சிலர் வழக்குத் தொடுத்தனர். பொன்னுச்சாமித் தேவரது நுண்ணறிவினால் இருதிறத்தாரும் சமாதானம் செய்துகொண்டனர். சில ஆண்டுகளில் கோட்டைச்சாமித் தேவர் காலமானர். இராணியார் நமது பொன்னுச்சாமித் தேவரையே அமைச்சராக நியமித்தனர். அப்பொழுது தேவருக்கு வயது இருபது.

## அறிஞர் அறிமுகம்

சுவீகார வழக்கின் தொடர்பாகத் தேவர் பல முறை சென்னை செல்லல் நேர்ந்தது. அறிவிற் சிறந்த தேவர் சென்னையில் சிறந்த வழக்கறிஞர்களாக இருந்த ஜான் புரூஸ் நார்ட்டன், ஜே. டி. மெயின் முதலியோருடன் நட்புக் கொண்டார். அவ்வறிஞர்கள் தேவருடைய உலகியலறிவையும், அரசியலறிவையும் பாராட்டி இவரிடம் மிக்க ஈடுபாடு கொண்டனர். இவர் சென்னையில் தங்கியிருந்த பொழுது தமிழ்ப் புலவர்கள் இவரை விட்டபாடில்லை. மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை முதலியோர் இவரிடம் வந்து அளவளாவிப் பரிசு பெற்றுச் செல்வது வழக்கம். தேவர் புலவர்களைக் கேட்கும் கேள்விகளும், இவரே செய்யுளியற்றும் திறனும் கண்டு புலவர்கள் இவர்பால் மிக்க மதிப்புக் கொண்டனர்.

**புலமை மிகுந்த சகோதரர்கள்**

பொன்னுச்சாமித்தேவர் தமிழிற் புலமைபெற்றிருந்தாற் போலவே அவர் தம்பியாரான சேதுபதியும் சிறந்த புலவராக விளங்கினர். அரண்மனைக்கெதிரே கட்டப்பட்டிருந்த பொன்னுச்சாமித் தேவரது மாளிகையில் எப்பொழுதும் புலவர்கள் கூடிய வண்ணமாக இருந்தனர். திருக்குறள், இராமாயணம், பாரதம், இவை பற்றிய சொற்பொழிவுகளும், ஆராய்ச்சியும் தேவர் அவையில் நடைபெற்றுவந்தன. **சதாவதானம் முத்துசாமி ஐயங்கார்*** போன்ற பெரும் புலவர்கள் அங்குக் கூடி ஆராய்ச்சி நடத்துவது வழக்கம். அக்கூட்டங்களில் அடிக்கடி சேதுபதியும் கலந்துகொள்வது வழக்கம். இச் சேதுபதி தம் தந்தையார் சிவஞானத் தேவரின் நினைவாக இராமநாதபுரத்தில் அமைத்த சிவஞானபுரத்து முருகக் கடவுள் மீது இயற்றிய பாக்கள் பல. 'வள்ளி மணமாலை' என்ற பெயரில் 208 வெண்பாக்களைக் கொண்ட நூல் ஒன்று இவரால் பாடப்பட்டது. சரச சல்லாப மாலை, முருகர் அநுபூதி, நீதி போத வெண்பா, பிரபாகர மாலை முதலிய செய்யுள் நூல்களும் இவ்வேந்தரால் பாடப்பட்டன.

சகோதரர் இருவரும் தம் பிறப்பகமும் கடற்கரை ஊருமான புது மடத்திற்கு ஒரு முறை சென்றனர். அனைவரும் கடற்கரையிற் கூடி ஒரு மணி நேரத்திற்குள் பல செய்யுட்களைப் பாடினர். அவை அனைத்தும் 'சமுத்திர விலாசம்' என்ற பெய

---

* இப் பெரியாரைப் பற்றிய விவரங்கள் ரா. இராகவையங்கார் வரலாற்றில் காண்க. இப் பெரியார் பெரும்புலவர் மு. இராகவையங்காரின் அருமைத் தந்தையாராவர்.

ருடன் வெளியிடப் பட்டன. அந்நூலுள் தேவருடைய பாடல்களும் சேதுபதி பாடிய பாடல்களும் இருக்கக் காணலாம்.

**பெயர் பெற்ற வித்துவான்கள்**

பழநிப் பதியில் பிறந்தவரும் தம் முகக் கண்கள் இல்லாதவரும் ஆகிய **மாம்பழக் கவிராயர்** பொன்னுச்சாமித் தேவரால் போற்றிப் பாராட்டப் பட்டவர். தேவர் அவருக்குக் 'கவிச் சிங்கம்' என்ற பட்டம் சூட்டி வரிசைகள் பலவும் வழங்கினர். பழைய நூல்களை அச்சிட விரும்பித் தம்மிடம் வந்த பெரும் புலவரான தில்லையம்பூர்ச் சந்திரசேகர கவிராயர் என்பவரைத் தேவர் வரவேற்றுத் **தனிப்பாடல் திரட்டு** பதிப்பிக்கப் பொருள் உதவி அளித்தார். ஒருமுறை தேவர் திருவரங்கத்தில் தங்கியிருந்தபோது வித்துவான் தியாகராச செட்டியாரை வரவழைத்து, அவருடன் நெடு நேரம் அளவளாவித் தக்க முறையில் அவரைச் சிறப்பித்தார்; மற்ருெரு முறை ஆறுமுக நாவலரைத் தமது அவைக்கு வரவழைத்து, திருக்குறள், திருக்கோவையார் போன்ற நூல்களை அச்சிடப் பொருளுதவி செய்தார்.

**தேவர் குண நலன்கள்**

இங்ஙனம் தமிழ் வள்ளலாக விளங்கிய பொன்னுச்சாமித் தேவர் நோய்வாய்ப்பட்டு 1870-இல் காலமானர். அவர்க்கு ஆண் மக்கள் மூவர் இருந்தனர். மூத்தவர் **கோட்டைச்சாமி** என்பவர். இரண்டாம் மகனர் **சீமைச்சாமி** என்பவர்; மூன்ரும் மகனரே மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த **பாண்டித்துரைத் தேவர்.**

*தந்தையார் இறந்த பொழுது இவர் மூன்று வயதினராக இருந்தார்.

பொன்னுச்சாமித் தேவர் தெளிந்த அறிவு நலம் படைத்தவர்; எதிரிகளை முறியடிக்கும் சூழ்ச்சித் திறன் வாய்ந்தவர்; குடிகள் நலனையே அரசாங்க நலனாகக் கருதியவர்; அரசியல் சட்டதிட்டங்களையும் நீதி மன்றச் சட்ட திட்டங்களையும் நுணுகி ஆராய்ந்தவர்; தம் தாய் மொழியாகிய தமிழ் நன்முறையில் வளரவேண்டும் என்ற ஆர்வம் உடையவர்; அவ்வார்வத்தாற்றான் வழக்கிற்காகச் சென்னை சென்றிருந்த போதிலும், அங்கும் தம்மை நாடி வந்த புலவர்கட்கு மனம் விரும்பிப் பரிசில் நல்கினார்; ஆறுமுக நாவலர் போன்ற புலவர் பெருமக்களைக் கொண்டு நூல்களைப் பதிப்பிக்கச் செய்தார். இத்தகைய தமிழ் வள்ளலின் திருமகனாராகப் பிறந்த பெரும் பேற்றினாற்றான் பாண்டித்துரையின் திருவுள்ளத்தில் பல நூற்றாண்டுகளாகத் தமிழ் வளர்ந்த மதுரையில் சங்கத்தைத் தோற்றுவிக்கும் எண்ணம் தோன்றியது.

## 3. இராமநாதபுரத்தில் புலவரவை

### கல்வி கற்றல்

பொன்னுச்சாமித் தேவரின் மைந்தர் மூவருள் கண்டோர் கண்களைக் கவரத்தக்க வசீகரத் தோற்றமுடையவர் பாண்டித்துரையே ஆவர். தந்தையாரை இழந்த இவர் தாயாரால் பெரிதும் பேணி வளர்க்கப் பட்டார். நுண்ணறிவிற் சிறந்த பொன்னுச்சாமித் தேவரின் கல்வியார்வம் இவரிடத்தும்

* இவரது பிறப்பு: 21–3–1867.

காணப்பட்டது. இவர் தந்தையார் தாம் இறக்குந் தறுவாயில் தம் சொத்துக்களை நிர்வகிக்கும்படி சேஷாத்ரி ஐயங்கார் என்பவரை (ஏஜெண்டாக) நியமித்திருந்தார். அப்பெரியவரே இப்பிள்ளைகள் மூவரையும் வளர்த்து வந்தார்; உரிய பருவத்தில் கல்வி கற்க விட்டார்.

## உற்ற நண்பர்கள்

பாண்டித்துரை அழகர் ராஜு என்ற தமிழ்ப் புலவரிடம் தமிழும், வழக்கறிஞர் வேங்கடேச சாஸ்திரியார் என்பவரிடம் ஆங்கிலமும் கற்றுவந்தார். பள்ளியில் பூச்சி-சீநிவாச ஐயங்கார் என்பவரும் அரங்கசாமி ஐயங்கார் என்பவரும் இவர்க்கு உற்ற நண்பர்களாக இருந்தனர். இம்மூவரும் இணைபிரியாது இறுதிவரை வாழ்ந்தனர். பூச்சி-சீநிவாச ஐயங்கார் இசைப்பயிற்சி மிக்கவர். அவர் கூட்டுறவால் பாண்டித்துரை இசையறிவைப் பெற்றார்.

## பாலவனத்தம் ஜமீந்தார்

பாண்டித்துரை தமது பதினெட்டாம் வயதில் ஜமீன் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டார்; ஜமீன் சம்பந்தமான வேலைகளை மிக்க கருத்துடன் கவனித்து வந்தார்; குடிகள் நலத்தில் கண்ணுங்கருத்துமாக இருந்தார்; எஞ்சிய நேரங்களில் சதாவதானம் முத்துசுவாமி ஐயங்காரிடம் தமிழ் நூல்களைக் கற்கலானார்; கம்பராமாயணம் முழுமையும் முறையாகக் கேட்டு முடித்தார்; பின்பு மதுரை இராமசுவாமி பிள்ளை என்பவரிடம் காஞ்சிப் புராணம், தணிகைப் புராணம், திருக்குறள் முதலிய நூல்களைப் பாடங்கேட்டார். பிறகு இவர் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த பழநிக்குமாரத்

தம்பிரானிடம் சைவசித்தாந்த சாத்திரங்களைப் பாடங்கேட்டார். இத்தகைய தமிழ்ப் பயிற்சியால் இவர் தமிழ் இலக்கிய அறிவும், சைவசாத்திர அறிவும் மிக்கவரானார்; இடையிடையே கிடைத்த ஓய்வில் சிறந்த ஆங்கில நூல்களைப் படித்து ஆங்கிலத்தில் பேசவும் எழுதவும் வல்லவரானார்.

**பாஸ்கர சேதுபதி**

பொன்னுச்சாமித் தேவரின் தம்பியாரான முத்துராமலிங்க சேதுபதிக்குப் பிறந்த மைந்தரே **பாஸ்கர சேதுபதி**. இவர் 1868-ஆம் ஆண்டில் பிறந்தவர்; பாண்டித்துரைக்கு ஓராண்டு இளையவர். ஆதலால் பாண்டித்துரையின் வளர்ச்சியே ஏறத்தாழ இவரது வளர்ச்சி என்று சொல்லலாம். இவரும் சதாவதானம் முத்துசாமி ஐயங்காரிடம் கல்விகற்றவர்; பாண்டித்துரையைப் போலவே கவிபாடும் ஆற்றல் பெற்றவர். இவ்விருவரும் உடன்பிறந்த சகோதரர் இருவருடைய மேன்மக்களாதலால், மிக்க மன ஒற்றுமையுடன் வாழந்து வந்தனர்.

பாஸ்கரர் சேதுவேந்தரானதும் பூச்சி-சீநிவாச ஐயங்கார் சேது சமஸ்தான இசைப்புலவரானார். வேந்தரைக் காண வரும் இசைப் புலவர்களைப் பரிசோதித்து, அவரவர்க்குத் தக்கவாறு பரிசு நல்கும்படி சிபாரிசு செய்வது இவர்தம் வேலைகளுள் ஒன்றாகும். சேது வேந்தரிடம் இயற்றமிழ்ப் புலவராக விளக்கம் பெற்றவர் **மகா வித்துவான் ரா. இராகவையங்கார்** ஆவர்.* நாள்தோறும் சேது வேந்தர் முன்னிலையில் பாண்டித்துரைத் தலைமையில்

* இவரது விரிவான வரலாறு இந்நூலுள் வேறிடத்துக் காண்க.

இராகவையங்காரது இயற்றமிழும் சீநிவாச ஐயங்காரது இசைத்தமிழும் பொலிவு பெற்றன; இயல் இசை ஆராய்ச்சிகளும் சொற்பொழிவுகளும் நடைபெற்றன; இடையிடையே வந்த புதிய புலவர்கள் அவையில் சோதிக்கப் பெற்றனர்; தம்தம் தகுதிக்கு ஏற்பப் பரிசில் பெற்றுச் சென்றனர்.

**சோமசுந்தர விலாசத்தில்**

இராமநாதபுரம் அரண்மனைக்கு எதிரில் பொன்னுச்சாமித்தேவரது மாளிகையை அடுத்துப் பாண்டித்துரை தமக்கென்று ஒரு புதிய மாளிகையை எற்படுத்திக்கொண்டார். இவர் மதுரைச் சோமசுந்தரக் கடவுள்மீது எல்லையற்ற பக்தி கொண்டவர் ஆதலால், தமது புதிய மாளிகைக்குச் **சோமசுந்தர விலாசம்** என்று பெயரிட்டார். அவ் வளமனையில் புலவர் பலர் அடிக்கடி கூடுதல் வழக்கம். அங்கு நாள்தோறும் தேவர் சிவபூசை செய்து முடிப்பர். பூசையின் முடிவில் இவரது நண்பர் பூச்சி-சீநிவாச ஐயங்கார் இன்னிசை அரங்கு நடைபெறும். காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு சோமசுந்தர விலாசம் சங்க காலத் தமிழ்ச் சங்கமாகக் காணப்படும். பலதிறப்பட்ட ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் நடைபெறும்; புதிய செய்யுட்கள் பாடப்படும்; ஏதேனும் ஒரு பொருள் பற்றி வாதங்கள் நடைபெறும்; சில சமயங்களில் சேதுபதியே இங்கு எழுந்தருள்வது உண்டு. இக் கூட்டங்களிலெல்லாம் இவர்களோடு பயின்ற ஒரு சாலை மாணவரான **திரு. நாராயணையங்காரும்** உடனிருந்தார்.*

* இப்பெரியாரது வரலாறும் இந்நூலுள் பிறிதோரிடத்தில் விளக்கமாகத் தரப்பட்டுள்ளது.

தேவர் தமது பேரவையிற் கூடிய புலவர்கட்கு முன் திருக்குறட் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்; இங்ஙனமே பெரியபுராணம், கந்தபுராணம், காஞ்சிப் புராணம், திருவிளையாடற் புராணம், கம்பராமாயணம் போன்ற பெருநூல்களிலுள்ள சிறந்த பொருள்களைப் பற்றி விரிவுரை ஆற்றினர்; சில சமயங்களில் சிறு பிரபந்தங்கள் பற்றிப் பேசுதலும் உண்டு. இவ்வாறு தேவரே சொற்பொழிவாற்றியதோடு நில்லாமல், நாடோறும் வந்த புலவர்களைப் பல பொருள்களைப் பற்றியும் பேசுவித்தார். சில சமயங்களில் தேவர் விரும்பிய நூல்களைப் புலவர்கள் செய்யுள் செய்யுளாகப் படித்தார்கள்; பொருள் நுட்பங்களை ·ஆராய்ந்தார்கள்; புலவர்கள் கூறிய பலதிறப்பட்ட கருத்துக்களைக் கேட்ட பின்னர் தேவர் தமது நுண்ணறிவால் தெளிந்த புதிய பொருள்களைக் கூறி அவையோரை மகிழ்வித்ததுண்டு. தேவர் கம்பராமாயணத்திலும் பெரிய புராணத்திலும் சைவசித்தாந்த சாத்திரங்களிலும் நன்கு பழகியவர். அம்மூன்றிலும் இவர் பெற்றிருந்த அறிவு வியக்கற்பாலது.

## இராமநாதபுரத்தில் புலவரவை

சங்ககாலத்தில் பாண்டியநாட்டுத் தலைநகரான மதுரையில் நடைபெற்ற தமிழ்ச் சங்கம், பாண்டியர் தலைமையில் எத்தகைய சிறப்புடன் நடைபெற்று வந்தது என்று நாம் கருதுகின்றோமோ, அத்தகைய சிறப்புடன் பாஸ்கர சேதுபதி, பாண்டித்துரை ஆகியோர் காலத்தில் இராமநாதபுரத்தில் புலவரவை தமிழ் வளர்ச்சியில் ஈடுபட்டிருந்தது என்று கூறுதல் பொருத்தமாகும்.

# 4. தமிழ்த் தொண்டு

## தமிழ்வளர்ச்சிக்கு உதவவேண்டும்

தேவர் தமிழ் வளர்ச்சியைத் தம் வளர்ச்சியாகக் கருதியவர். தமிழ் வளர வேண்டும் என்று மேடைகளிற் கூறிவிட்டு அதன் வளர்ச்சிக்குச் சிறிதும் பொருளுதவி செய்யாத தமிழ்ச் செல்வர் பலரைப் போலத் தேவர் இருந்துவிடவில்லை. அப் பெரியார் தாம் சொன்னதை நடத்திக்காட்டிய உத்தமர்; "தமிழ் நாட்டுச் செல்வர்கள் தாய்மொழி வளர்ச்சிக்குப் பொருளுதவி புரியவேண்டும்; தமிழை நன்கு கற்றுத் தமிழில் பல அரிய நூல்களை எழுதும் ஆசிரியர்களை அத்துறையில் ஊக்கப் பொருளுதவி செய்ய வேண்டும்; அச்சிடப்படாத அரிய பழந்தமிழ் நூல்களை ஆராய்ந்து அச்சிட முன் வரும் அருந்தமிழ் ஆசிரியர்களை அணைத்து ஆதரவு நல்குதல் வேண்டும்; பண்டைக்காலப் பாண்டியர் போலவும் குறுநில மன்னர் போலவும் இக்காலக் குறுநில மன்னரும் செல்வரும் தமிழை வளர்க்க முன்வர வேண்டும்; ஒவ்வொரு செல்வரும் தமது செல்வத்தில் மிகச் சிறிய பகுதியைத் தம் தாய் மொழி வளர்ச்சிக்கு உதவ மகிழ்ச்சியோடு முன் வரவேண்டும்," என்று தேவர் பல சொற்பொழிவுகளில் எடுத்துரைத்தனர்; தாமே முன்னின்று புலவர்க்குப் பொருளுதவியும் புரிந்தனர்.

## நூல்கள் வெளியிடப் பொருளுதவி

பண்டைப் பெரும்நூல்களை அரும்பாடுபட்டு அச்சிட்டு வெளிப்படுத்திய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களுக்குத் தேவர் பொருளுதவி செய்தார்; மதுரை—இராமசாமிப் பிள்ளை என்பவ

ருக்குப் பொருளுதவி செய்து சைவத் திருமுறைகளை அச்சிடுவித்தார்; சுன்னுகம் குமாரசாமிப் பிள்ளை, சபாபதி நாவலர் முதலியோர் வெளியிட்ட இலக்கண இலக்கிய நூல்களுக்கும் மனமுவந்து பொருளுதவி செய்தார்.

**தாமே நூல்களை வெளியிடல்**

இங்ஙனம் பிறர்க்குப் பொருளுதவி செய்து நூல்களை வெளியிடுமாறு செய்ததன்றி, தேவர் தாமே முயன்று சில நூல்களை வெளிப்படுத்தினுர்; அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும் பற்றிப் பல நூல்களில் பாடப்பட்டுள்ள செய்யுட்களையெல்லாம் தொகுத்துப் **பன்னூல் திரட்டு** என்னும் பெயருடன் வெளியிட்டனர்; இவ்வாறே சைவ சமயத் தொடர்பான பாக்களை முறைப்படுத்தி **சைவமஞ்சரி** என்னும் பெயருடன் அரிய நூல் ஒன்றினை வெளிப்படுத்தினர்.

**சொற்பொழிவாளர்**

தேவர் சென்னை, மதுரை, தூத்துக்குடி, சிதம்பரம் முதலிய நகரங்களுக்குச் சென்றபொழுதெல்லாம் அரிய சொற்பொழிவுகள் ஆற்றி வந்தனர். செல்வத்திலே பிறந்து செல்வத்திலே வளர்ந்த அச்சீமான் பொருட் செல்வத்துடன் தமிழ்ச் செல்வத்தையும் சிறக்கப் பெற்றிருந்தமையைக் கண்ட தமிழ் மக்கள் வியப்புற்றனர்; அவரது செந்தமிழ் நடையையும், பண்பட்ட பேச்சு முறையினையும், இடையிடையே நகைச்சுவை தோன்றப் பேசும் திறனையும் கண்டு களிப்புற்றனர். இங்ஙனம் தேவர் தம் அறிவாலும், பொருளாலும், நாவாலும்

நன்முறையில் தமிழ்த் தொண்டினைச் செய்து நாட்டில் நற்றமிழை நலமுறப் பரப்பிவந்தார்.

**தமிழ்ச்சங்கத் தோற்றம்**

பாண்டியர் நெடுங்காலமாகத் தமிழ் வளர்த்த மதுரையில், காலப்போக்கினாலும் பல்வேறு மரபுகளைச் சேர்ந்த அரசர்களது ஆட்சியாலும் தமிழ் வளம் குன்றியிருத்தலைக் கண்ட தேவர் மனம் நொந்தார்; மீண்டும் மதுரையை உயர்ந்த தமிழ் வளர்க்கும் நகரமாகச் செய்யவேண்டும்' என்று விரும்பினார்; 1901-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ஆம் நாள் மதுரையில் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தார். அவ்விழாவில் நாடெங்குமிருந்த பெருந்தமிழ்ப் புலவர்களான டாக்டர் உ. வே. சாமிநாதையர், ரா. இராகவையங்கார், வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார், வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், மறைமலை அடிகள், அரசஞ் சண்முகனார், திருமணம் செல்வகேசவராய முதலியார், M. S. பூர்ணலிங்கம் பிள்ளை முதலியோர் கலந்து கொண்டனர். சேது மன்னர் முன்னிலையில் புலவரும் செல்வரும் கூடிய பேரவை சிறப்புற நடைபெற்றது. சேதுபதி உயர்நிலைப் பள்ளியை ஒட்டி இருந்த தனிக் கட்டிடங்களில் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. **சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தகசாலை, நூலாராய்ச்சிச்சாலை** என்பன அன்றே தோற்றமெடுத்தன. அன்றுமுதல் மூன்றுநாள் சங்கத் தோற்ற விழாச் சிறப்புற நடந்தேறியது. புலவர் பலர் சொற்பொழிவாற்றினர்.

**உட்பிரிவுகள்**

**சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையில்** பிரவேச பண்டிதம், பால பண்டிதம், பண்டிதம் என்னும் மூன்று வகுப்புக்கள் தொடங்கப்பெற்றன. அவ் வகுப்புக்களில் படிக்கவந்த மாணவர்க்கு உண்டியும் உறையுளும் இலவசமாக வழங்கப்பட்டன. செந்தமிழ்ப் புலமை நிரம்பப்பெற்ற பெரும் புலவர்கள் ஆசிரியராக நியமிக்கப்பெற்றனர். திரு. நாராயணையங்கார் அக்கலாசாலைக்குத் தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார்.

**பாண்டியன் புத்தகசாலைக்குச்** சேது வேந்தரும் தேவரும் அளித்த நூல்கள் மிகப்பல. நாட்டின் பல பகுதிகளிலிருந்து கவனிப்பாரற்றுக் கிடந்த பனையோலை நூல்கள் இப்புத்தகசாலைக்கு அளிக்கப்பெற்றன. நாட்டில் வேறெங்கும் கிடைக்க இயலாத பழைய நூல்கள் இப்புத்தகசாலையில் இடம்பெற்றுள்ளன.

**நூலாராய்ச்சிச்சாலைக்கு** சேது அரசவைப் புலவரான ரா. இராகவையங்கார் தலைவராக நியமனம் பெற்றார். அப்பெரியார் புத்தகசாலையிலுள்ள நூல்களை ஆராய்ந்து வந்தார்; பழைய ஏட்டுப் பிரதிகளைத் திருத்தம் செய்து நூல்வடிவில் வெளியிட முயன்று வந்தார்; சங்கத்தின் திங்கள் வெளியீடாகச் 'செந்தமிழ்' என்னும் சீரிய திங்கள் தாள் தோற்றமெடுத்தது. தேவருடைய சிறந்த நண்பரும் மதுரை வழக்கறிஞரும் ஆகிய டி. சி. சீநிவாச ஐயங்கார் தேவருக்கு உதவியாக இருந்து தமிழ்ச்சங்க நடைமுறையைக் கவனிக்கலானார். இச்சங்கத்தின் தோற்றத்தையும் இது மேற்கொண்ட ஆக்க வேலைகளையும் அறிந்த தமிழகத்

தார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. தமிழ் வளர்ப்பதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட வள்ளல் பாண்டித்துரைத் தேவர் மதுரை வடக்கு வெளி வீதியிலிருந்த தமது பெரிய மாளிகையில் தமிழ்ச் சங்கத்தை அமைத்தார். இன்னும் அச்சங்கம் அப்பெரிய கட்டிடத்திற்றான் இருந்துவருகின்றது.

**அளப்பரிய தொண்டு**

சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை ஆண்டு தோறும் மாணவர் பலரைப் பண்டிதர்களாக்கி நாட்டுக்கு உதவிவருகின்றது. தமிழ்ச் சங்கத் தேர்வுகளுக்குத் தனி முறையிற் படித்துச் சென்று பட்டமும் பரிசுகளும் பெற்றோர் பலர். திருவிளை யாடற் புராணம், அகநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய அரிய நூல்களுக்கு உரை கண்டு அழியாப் புகழ் படைத்த நாவலர் **பண்டித** ந. மு. வேங்கடசாமி நாட்டார் அங்ஙனம் தனி முறையிற் சென்று பண்டிதத் தேர்வில் முதல் வகுப்பில் முதல்வராகத் தேறி, அத்தேர்வுக்குரிய தங்கத் தோடாவையும் பரிசாகப் பெற்றவர். இவ் வாறு மிகப்பலர் பெரும் புலமை எய்துதற்குக் காரணமாக இருந்துவருவன சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையும், மதுரைத் தமிழ்ச் சங்கமுமேயாம்.

இக்கலாசாலையில் திரு. நாராயணையங்காரிடம் படித்துப் புலமை எய்தியோர் பலர். அப்பலர் இன்று பல கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளி களிலும் தமிழ்ப் புலவராக இருந்துவருகின்றனர். பாட்டனிடமிருந்து மைந்தரும், அம்மைந்தரிட மிருந்து பேரரும் தோன்றிக் குடும்பம் பெருகுதல் போல நமது ஆசிரியரிடம் கல்விகற்ற மாணவர்

பல்வேறு மாணவரை நாடெங்கும் உண்டாக்கி யுள்ளனர். அம்மாணவர் தம் தொண்டின் அறிகுறி யாக மாணவர் பலரை உண்டாக்கிவருகின்றனர். ஐயங்காரிடம் படித்த மாணவர் பொதுவாகத் தமிழகத்திலும், சிறப்பாக மதுரை, இராமநாத புரம், திருநெல்வேலி மாவட்டங்களிலும் பரவி யிருந்து தமிழ்ப்பணி ஆற்றுகின்றனர். இங்ஙனம் இவர் அனவரது தமிழ்த்தொண்டிற்கும் அடிப் படையாக அமைந்தது பாண்டித்துரை அமைத்த தமிழ்ச்சங்கமே அன்றோ?

மகா வித்துவான் ரா. இராகவையங்கார், 'செந்தமிழி'ன் ஆசிரியராக இருந்து பல அரிய ஆராய்ச்சிகளை நிகழ்த்தியுள்ளார். பெரும்புலவ ராய நாவலர் சோமசுந்தர பாரதியார், திரு. நாராயணையங்கார், அரசஞ் சண்முகனுர் முதலி யோர் வரைந்துள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகளும் பலவாகும். "செந்தமிழ்" தோன்றியிராவிடில், கடந்த ஐம்பது ஆண்டுகளாக வெளிவந்த அரிய கட்டுரைகள் பல வெளிவருவதற்கு வாய்ப்பில்லை அன்றோ? அச்சாகாத பழைய நூல்கள் சிலவும் 'செந்தமிழி'ல் வெளியிடப்பெற்றன. இங்ஙனம் இச் 'செந்தமிழ்'த்தாள் அரை நூற்றுண்டாகத் தமிழகத்தில் செய்துள்ள தமிழ்த்தொண்டு அளப் பரியதாகும். இவற்றை நினைக்க நினைக்க, தேவ ரின் திருப்பெயர் தமிழர் உள்ளங்களில் நிலைத் திருக்கும் அன்றோ?

### தேவரது மறைவு

தேவர் தமிழுக்கு மேலும் பல ஆக்க வேலை களைச் செய்ய விரும்பினர். அரசாங்கத்தின் பெரும்பொருள் உதவிகொண்டு தொடங்கப்பெற்ற

தமிழ்ப் பேரகராதி வேலையை நடத்த ஒரு செயற் குழு நியமிக்கப்பட்டது. நமது தேவர் அக்குழுவில் ஓர் உறுப்பினராக நியமனம் பெற்ருர். அப்பேரக ராதியைச் சிறந்த முறையில் வெளிப்படுத்த வேண்டும் என்பது தேவரது அவா. ஆயின், இரக்கமற்ற கூற்றுவன் 1911-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ஆம் நாளன்று அவரது ஆருயிரைக் கொள்ளைகொண்டான். தமிழ் வளர்ச்சியில் நாட் டங்கொண்டவர் அனைவரும் அவரது பிரிவால் பெருந்துயர் அடைந்தனர்.

## 5. நற்பண்புகள்

### கடவுள் பக்தி

பாண்டித்துரைத் தேவர் தம் தந்தையாரைப் போலவே கடவுள் பக்தியில் சிறந்து விளங்கினர். இவர் நாள்தோறும் சிவபூசை செய்த பிறகே காலைச் சிற்றுண்டி உட்கொள்வது வழக்கம். இவர் மதுரைச் சோமசுந்தரக் கடவுள்மீதும் அங்கயற் கண்ணிமீதும் எல்லையற்ற பக்தி கொண்டவர். அவ்விருவர்மீதும் இவர் அவ்வப்போது பாடிய பாடல்கள் சில உண்டு. இவர் வழிவழிச் சைவ ராயினும், இவரால் ஆதரிக்கப் பட்டவருள் பெரும் பாலோர் வைணவரே ஆவர். இதிலிருந்து இவரது சமய சமரச மனப்பான்மையை நன்கு அறியலாம்.

### நாட்டுப் பற்று

தேவர் நாட்டுப் பற்று மிக்கவர்; இந்திய நாடு விடுதலை பெறவேண்டும் என்பதில் பேரவாக் கொண்டவர்; வ. உ. சிதம்பரம் பிள்ளை தொடங்கிய சுதேச கப்பல் கம்பெனிக்குத் தம்மால் இயன்ற

பொருளுதவி செய்தவர்; தாமே அக்கம்பெனிக்குத் தலைவராய் இருந்தும் சிறிதுகாலம் அதனை வெற்றி பெற நடத்தினவர்.

**சொற்பொழிவு இனிமை**

தேவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த அறிவு படைத்தவர்; ஆதலால் தமிழ்க் கவிகளை மேனாட்டுக் கவிகளோடு ஒப்பிட்டுப் பேசுவதில் திறன் மிக்கவராய் இருந்தார். இவருக்குப் பல நூறு செய்யுட்கள் மனப்பாடம் ஆதலின், இவர் தமது சொற்பொழிவில் அச்செய்யுட்களில் சில வற்றைத் தக்க மேற்கோள்களாக எடுத்தாளும் பொழுது, அவையோர் இவரது நினைவாற்றலை வியந்து மகிழ்வர். இவர் பேசும் ஒவ்வொரு வாக் கியமும் பொருள் பொதிந்ததாக இருக்கும். இப் பெரியார் குறித்த நேரத்தில் தமது சொற்பொழி வைத் தொடங்கிக் குறித்த நேரத்தில் முடிப்பது வழக்கம்.

**தாய்மொழிப் பற்று**

தாம் பிறந்து வளர்ந்த பாண்டிய நாடு சங்க காலப் பாண்டிய நாடாக விளங்கவேண்டுமென் பது தேவரது அவா. அதனாற்றான் இவர் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்த மதுரையில் சங்கத்தைத் தோற்றுவித்தார்; ஏறத்தாழ இரண்டு லட்ச ரூபா மதிப்புள்ள தமது மாளிகையைத் தமிழ்ச் சங்கம் வைத்து நடத்த உதவினார்; தாமே அதற்குத் தலைவராக இருந்து, அதன் வளர்ச்சியில் ஈடுபட் டார்; தமது மாளிகையிலும், சேது வேந்தர் அரண்மனையிலும் அதுகாறும் குவிந்திருந்த நூல்கள் அனைத்தையும் சங்க நூல்நிலையத்திற்கே

தானமாக அளித்தார்; புலவர் பலரை நாடெங்கும் அனுப்பித் தமிழ் ஏடுகளைச் சேர்ப்பித்தார். 1903-ஆம் ஆண்டில் "செந்தமிழ்" என்னும் திங்கள் தாளையும் தோற்றுவித்தார்.

## புலவரைப் போற்றுதல்

"காற்றைப் பிடித்துக் கடத்தி
லடைத்தக் கடியபெருங்
காற்றைக் குரம்பைசெய் வார்செய்கை
போலுமற் காலமெனுங்
கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண
காங்கெயர் கோனளித்த
சோற்றுச் செருக்கல்ல வோதமிழ்
மூன்றுரை சொல்வித்ததே,"

என்று அடியார்க்கு நல்லார் பாடிய செய்யுளைத் தேவர் அடிக்கடி கூறுவது வழக்கம். 'தமிழில் வல்ல ஒரு புலவன் சோற்றுக் கவலையின்றி இருப்பானாயின், அவன் பலர்க்கும் தமிழ் கற்பிப்பான்; தமிழ் நூல்களை இயற்றுவான்; இங்ஙனம் அவனால் தமிழ் வளர்ச்சி யுறும். அவனுக்குச் சோற்றுக் கவலை இல்லாமல் செய்ய ஒரு வள்ளல் தேவை. இந்த உண்மையை உணர்ந்த பண்டைக்கால வள்ளல்கள் முத்தமிழ்ப் புலவர்களை ஆதரித்த காரணத்தால்தான், இயல்–இசை–நாடகம் என்னும் முத்தமிழும் நன்முறையில் வளர்ச்சியுற்றன. அவ்வள்ளல்களைப் பின்பற்றியே இக்காலக் குறுநில மன்னரும் பெருநிலக்கிழவரும் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தல் வேண்டும்; அவர்களைக் கொண்டு தமிழை வளம்பெற வளர்த்தல் வேண்டும்,' என்பது தேவர் கருத்து. இவர் இதனைப் பேரவைகளில் அடிக்கடி கூறிவந்தார்; தாம் கூறி வந்ததை

இப்பெருமகனர் தம்மளவிற் பின்பற்றி வந்தார். இவரது நன்னேக்கத்தை இந்நாட்டுச் செல்வர் கைக்கொண்டு புலவர்களை ஆதரிக்கப் புகுவாராயின், நமது தாய்மொழி மேலும் வளர்ச்சியுறும் என்பதில் ஐயமில்லை. தமிழ்ச் செல்வர்க்கு இத் தகைய மனப்பான்மை உண்டாகும் நன்னளே தமிழ் வளர்ச்சியுறும் பொன்னுளாகும்.

### சீரிய பண்புகள்

தேவர் சினம் அறியாத செம்மல்; பகைவரையும் நண்பராக்கும் பண்பினர்; மிக்க சீற்றத்துடன் வருபவரும் இவரைக் கண்டவுடன் சீற்றம் அடங்கி அமைதி பெறுவர். அனைவரிடமும் அகம் மலர முகம் மலர்ந்து பேசும் இவரது நல்லியல்பினை இவருடன் பழகியவர் இன்றும் கூறிப் பாராட்டுதலைக் கேட்கலாம். பிறருடைய துன்பங்களை உணர்ந்து அவருக்கு உதவி செய்யும் பண்பு இவர்பால் காணப்பட்டது. தம்மை நாடி வருபவரை, "முதலில் வயிற்றுக் கடவுள் பூசை நடக்கட்டும்; பின்பு வந்த காரியத்தைக் கவனிக்கலாம்," என்று கூறி, உண்பிப்பது இவரது வழக்கம். தம்மைப் போலவே பிறரையும் எண்ணும் பெருந்தகைமை இவரிடம் சிறந்து விளங்கியது. இச்சீரிய பண்புகளே தமிழ் நாட்டுப் புலவர் பெருமக்கள் எல்லோரையும் தேவர்பால் ஈர்த்தன.

இப்பெருமகனுருடைய சீரிய பண்புகளும் செந்தமிழ்ப் பற்றும், கடவுள் உணர்ச்சியும் உங்கள் உள்ளங்களில் தோன்றி வளர்வனவாகுக. இப் பண்புகளே உங்களை இத்தமிழகத்து நன்மக்கள் ஆக்கவல்லவை.



அரசஞ் சண்முகனார்

# II. அரசஞ் சண்முகனர்*

(கி. பி. 1868—1915)

## 1. சோழவந்தான்

**வைவயை ஆறு**

பல நூற்றுண்டுகள் சங்கம் வைத்துத் தமிழாராய்ந்து அழியாப் புகழ்பெற்ற பாண்டியநாட்டு வடபகுதியின் வளத்துக்கு உயிர் நாடியாக விளங்குவது வைகையாறு. சோழநாட்டிற்குக் காவிரியாறு செவிலித்தாயாக விளங்குதல் போலப் பாண்டிய நாட்டு வடபகுதி மக்களுக்கு இவ் வையையாறு செவிலித்தாயாக விளங்குகிறது. மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து தோற்ற மெடுக்கும் இவ்வையை யாறு, பண்டுதொட்டே புலவர் பெருமக்களால் போற்றப்பட்டு வந்தது; மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள அகில், சந்தனம், முதலிய மணம் மிகுந்த மரத்துண்டங்களையும், தன் இரு கரைகளிலும் இருந்த மரங்களிலிருந்து தன்மீது உதிர்ந்த மணமிகு மலர்களையும் தாங்கிக்கொண்டு செல்லும் தன்மையது; அதனுல் தண்ணீரை மணமிகு நீராகப் பெற்றது என்று பல நூற்றுண்டுகளுக்கு முன்னரே பரிபாடல் முதலிய நூல்களில் பாராட்டப் பெற்றது. இஃது அக்காலத்தில் வான் பொய்ப்பினும் தான் பொய்யாது நீரைக் குடிகளுக்கு வழங்கிவந்த காரணத்தால், "வையையென்னும் பொய்யாக் குலக்கொடி" என்று சங்கப் புலவர்களால் பாராட்டப்பெற்றது.

---

* இது சோழவந்தான் சா. இராக்கப்ப பிள்ளை, M. சின்னசாமிப் பிள்ளை, M. சுப்பிரமணிய முதலியார் இவர்களால் பார்வையிடப் பெற்றது.

இங்ஙனம் வடபாண்டி நாட்டை வளமுடைய தாக்கிவந்த இவ்வையை யாறு ஆங்கிலர் ஆட்சிக் காலத்தில் அணைகட்டித் தேக்கப்பட்டது; இதன் நீர் மதுரை மாவட்டத்திலுள்ள ஆற்று வளமற்ற மேலூர் முதலிய பகுதிகளுக்குக் கால்வாய்கள் உருவத்தில் பாய்ந்து செல்லுகிறது. அதனுல் இன்றைய வையை யாற்றுப் பெரும்பகுதி மணற் காடாகக் காட்சியளிக்கிறது. ஆயினும்,

"ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்"

என்னும் முதுமொழிக்கு இணங்க, இவ்வையை யாறு தன்னை நாடிவரும் மக்களைத் தன் ஊற்றுப் பெருக்கால் உண்பிக்கிறது. இன்றுள்ள வையை யாற்றின் பெரும்பகுதியில் ஆங்காங்கு ஊற்றுக் கால்வாய்களைக் காணலாம். அவற்றுள் பல சலவைத் தொழிலாளரால் ஆக்கப்பட்டவை. காலைமுதல் மாலை வரையில் அச்சலவைத் தொழிலாளர் துணி துவைக்கும் ஓசையும், கரையோரங்களில் உள்ள ஊர்களில் வாழும் மக்கள் ஊற்றுக்களில் சென்று நீராடும் காட்சியும், மகளிர் அணி அணியாகச் சென்று குடங்களில் நீரை முகந்து செல்லும் சிறப்பும் வையையின் பயனை நன்கு விளக்கி நிற்கின் றன. அஃதாவது, தன்னை நாடி வந்தவர்க்கெல் லாம் அவரவர் விரும்பியவாறு வரையாது வழங்கி வள்ளலெனப் பெயர் வாங்கிய ஒருவன், தன் வளம் சுருங்கிய காலத்திலும் தன்னை நாடி வந்தவர்களுக் குத் தன்னுல் இயன்றதை உதவும் தன்மையைப் போல, நீரோட்டமற்ற வையை தன் ஊற்றுப் பெருக்கால் மக்களை உண்பிக்கும் திறம் எண்ண எண்ண உள்ளம் குழைகின்றது.

**சோழவந்தான்**

வையை ஆற்றுப் பெருக்கால் வளமுற்ற ஊர்கள் வடபாண்டி நாட்டில் பல. ஆற்றில் நீரில்லாத இக்காலத்திலும் அதன் வாய்க்காற் சிறப்பினுல் அவ்வூர்கள் வளம் பெற்றுள்ளன. அத்தகைய வளமிகு ஊர்களில் ஒன்று **சோழவந்தான்** என்பது. "பிற்காலச் சோழருள் புகழ்பெற்ற முதற் பராந்தகன், முதல் இராசராசன், முதல் இராசேந்திரன் போன்ற பேரரசருள் ஒரு சோழன் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து **வந்து** தங்கிய காரணத்தால் அவ்வூர் **(சோழ(ன்)வந்தான்** எனப் பெயர் பெற்றது," என்று ஒருசார் அறிஞர் கூறுவர். "அங்ஙனம் வந்த **சோழன்** அவ்வூரின் வளமையைக் கண்டு **உவந்தான்** (மகிழ்ந்தான்) ஆதலின் அவ்வூர் 'சோழன் உவந்தான்' எனப் பெயர் பெற்றது; அப் பெயர் நாளடைவில் மரூஉ வழக்காகச் 'சோழவந்தான்' என வழங்குகிறது," என்று வேறு ஒருசார் அறிஞர் கூறுவர். "சோழரை வென்று வாகைசூடிய காரணத்தால், சோழர்க்கு யமன்' என்று பொருள்படும் '**சோழாந்தகன்**' என்னும் பெயரே இவ்வூருக்கு இடப்பெற்றது. இக் கருத்துப்பற்றியே சோழனை வென்ருனூரென்பது இக்கலாத்துச் சோழவந்தான் என மருவியது" என அரசஞ் சண்முகனூர் கூறியுள்ளார்.

உண்மை எதுவாயினும் ஆகுக. இன்று அவ்வூருக்கு வழங்கும் பெயர் **சோழவந்தான்** என்பதே. அவ்வூர் வளப்பம் மிக்குடையது; நன்செய் நிலங்களை மிகுதியாகப் பெற்றுள்ளது; தென்னந் தோப்புக்களை மிகுதியாக உடையது; கொழுமையுள்ள காய்கறிகள் பயிராகும் வளமுடைய நிலப்பகுதிகளை

உடையது. இங்ஙனம் மருதவளம் மிக்குடைய அப்பதியை, கி. பி. 16-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த தளவாய்-அரியநாத முதலியார் தம் வாழ்க்கைக்கு உகந்த இடமாகக் கொண்டார்; தம் இனத்தவ ராகிய தொண்டை மண்டல வேளாளர் பலரை அங்குக் குடியேற்றினுர். அவர்கள் வாழ்ந்த பகு தியைச் சுற்றிலும் கோட்டை ஒன்று கட்டப் பட்டது. அக்கோட்டை 'முதலியார் கோட்டை' எனப் பெயர் பெற்றது. அக்கோட்டையின் பகுதி கள் அழிந்தன போக எஞ்சியுள்ளவை இன்றும் காணப்படுகின்றன.

## 2. இளமையும் கல்வியும்

### ஆசிரியர் பிறப்பு

சோழவந்தானில் மேலே சொல்லப்பட்ட தொண்டைமண்டல வேளாளர், பாண்டிய நாட்டி லேயே பல நூற்றுண்டுகளாக வாழ்ந்துவரும் பாண்டி வேளாளர், பலவகைத் தொழிலாளர் என் பவர் வாழ்ந்து வருகின்றனர். நாம் வாழும் இந்த இருபதாம் நூற்றுண்டில் இணையற்ற இலக்கணப் புலவராக வாழ்ந்து மறைந்த **அரசஞ் சண்முகனர்** என்பவர் இச்சோழவந்தானில் பிறந்தவராவர். இவர் பாண்டி வேளாளர் மரபினர்; **அரசப்ப பிள்ளை** என்பவருக்குத் தலைமைப் புதல்வராய்த் தோன்றியவர்.*

அரசப்ப பிள்ளை மிகுந்த கல்வி உடையவர் அல்லராயினும், ஊரார் மதிக்கத் தக்க நிலையில் ஒழுக்கமுடைமை, உண்மையுடைமை, நடுவு நிலைமை, சிவபத்தி முதலிய பண்புகளிற் சிறந்

* இவர் பிறப்பு 15–9–1868.

திருந்தார். அவருக்கு ஓரளவு நிலம் இருந்தது. அதன் வருவாயைக் கொண்டு அவர் இனிது வாழ்ந்துவந்தார்.

அவர் மனைவியார் மதுரையின் தென்பாலுள்ள பனையூரில், ஞானியார் வீரபத்திர பிள்ளையவர்கட்குப் புதல்வியாவர். இவரது பெயர் **பார்வதியம்மை** என்பது; தலைமுறை தலைமுறையாக வரும் சைவப்பற்றில் திளைத்தவர்; கணவரைத் தம் உயிராகக் கருதியவர்; கணவர் கருத்தறிந்து நடக்கும் இயல்பினர்; உற்றூர் உறவினரைப் பேணுதலில் மிக்க கவலை கொண்டவர்; தம்மைச் சேர்ந்தவரிடம் மிக்க அன்பு காட்டியும், தம் கணவரைச் சேர்ந்த உறவினரிடம் குறைந்த அன்பு காட்டியும் நடக்கும் அறிவற்ற பெண்கள் சிலர் போல நடவாது, இருதிறத்து உறவினரிடமும் ஒரே வகை அன்பினைக் காட்டிவந்தவர்; இத்தகைய நல்லியல்புகளால் உற்றூர் உறவினர் பாராட்ட, இல்லறம் என்னும் நல்லறத்தை இனிது நடத்திவந்தார். இத்தகைய நல்லியல்புகள் வாய்ந்த அவ்வம்மையார் பெற்ற அருமைப் புதல்வரே நமது அரசஞ் சண்முகனூர்.

சண்முகனூர் தம் அருமைப் பெற்றூேர்களால் பெரிதும் பேணி வளர்க்கப்பட்டார். கண்ணை இமைகள் காப்பது போலப் பெற்றூேர் நமது சண்முகனூரைப் பாதுகாத்து வளர்த்தனர். ஐந்தாம் ஆண்டு தொடங்குவதற்கு முன்னரே சண்முகனூர் தம் மழலைச் சொற்களால் பெற்றூேரையும் மற்றூேரையும் மகிழ்வித்தனர்; ஆடல் பாடல்களில் திளைத்தனர். ‘விளையும் பயிர் முளையிலே தெரியும்,’ என்னும் பழமொழிக்கேற்ப, அவர் பிற்காலத்தில்

சிறந்து விளங்கத்தகும் ஒருவர் என்பதை அவருடைய சுறுசுறுப்பு நன்குணர்த்தியது.

**கல்வி கற்றல்**

ஐந்து வயது தொடங்கப் பெற்றதும் சண்முகனர் தொடக்கநிலைப் பள்ளியிற் பயிலத் தொடங்கினர்; ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களை நாடோறும் நன்கு கற்று ஆசிரியர்க்குத் தம் நுண்ணறிவைப் புலப்படுத்தினர். அவருக்குக் கல்வியில் இருந்த ஊக்கத்தைக் கண்ட ஆசிரியர் **அழகர்சாமி தேசிகர்** என்பவர் மிக்க மகிழ்ச்சி அடைந்து, அவருக்குப் பிற பிள்ளைகளுக்குக் கற்பிக்காத பல புதிய பாடங்களையும் கற்பிக்கலானர்; தமிழில் உள்ள ஆத்திசூடி, வெற்றி வேற்கை, மூதுரை முதலிய நூல்களைக் கற்பித்தார்; பின்னர் நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம், இனியவை நாற்பது முதலிய நீதி நூல்களை ஒன்றன்பின் ஒன்ருகப் பாடஞ் சொன்னர்; நிகண்டையும் கற்பித்தார். இவ்வாறு சண்முகனர் சில ஆண்டுகட்குள் நீதி நூல்கள் பலவற்றையும், அந்தாதி, உலா, கலம்பகம், பிள்ளைத் தமிழ், முதலிய பிரபந்தங்கள் பலவற்றையும் மிகுந்த கவலை காட்டிப் படித்துத் தேறினர்.

**புலமை எய்துதல்**

சோழவந்தானில் கிண்ணிமங்கலம் ஸ்ரீ அருளானந்த சுவாமிகள் மடாலயம் என்ருெரு மடம் உண்டு. அம்மடாலயத்தில் சிவப்பிரகாச சுவாமிகள் என்பவர் சண்முகனர் காலத்தில் வாழ்ந்துவந்தார். அப்பெரியார், தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றவர்; சைவ சித்தாந்த சாத்திரங்

களிலும் அழுத்தமான படிப்புடையவர். அவருடைய கல்விப் பெருக்கத்தையும், சைவப் பற்றையும், சிறந்த ஒழுக்கத்தையும் கண்ட ஊரார் அவரிடம் மிக்க மதிப்புக் கொண்டனர். முதியோர் சிலர் அவரிடம் சமய சாத்திரங்களைக் கற்றனர். சுவாமிகள் சோதிடக் கலையிலும் வல்லவராக இருந்தமையால் சிலர் அவரிடம் அக்கலையறிவு பெற்றுவந்தனர்.

நமது சண்முகனர் பல்கலைக்குரிசிலாகிய சிவப்பிரகாச சுவாமிகளிடம் திருக்குறள், பஞ்சகாவியம், நளவெண்பா, தணிகைப் புராணம், காஞ்சிப் புராணம், நைடதம், பிரபுலிங்க லீலை, திருவிளையாடற் புராணம், பெரிய புராணம் முதலிய இலக்கியங்களையும்; நன்னூல், யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம், தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும்; சைவ சித்தாந்த சாத்திரங்களையும்; நக்கீரனர், பரிமேலழகர் முதலாயினுருரைகளையும் கருத்தூன்றிக் கற்கலானர். இங்ஙனம் இவர் கல்வி கற்பதில் பேரார்வம் காட்டிவருகையில்—இவரது பதினரும் வயதில்—இவரது அருமைத் தந்தையார் காலமானர். அதனல் இவரே குடும்பத்தை ஏற்று நடத்த வேண்டியவரானர்; குடும்ப வேலைகள் ஒழிந்த மற்ற நேரங்களிலெல்லாம் சுவாமிகளிடம் சென்று பெருநூல்களைப் பாடங் கேட்டுவந்தார்.

## நூல் இயற்றல்

சண்முகனர் இளமை முதலே இலக்கணப் பயிற்சியிலும், செய்யுள் செய்வதிலும் பெருவிருப்பம் காட்டினர்; ஒவ்வொரு நிகழ்ச்சியையும் குறித்து

ஒவ்வொரு செய்யுள் பாடுதல் இவருக்கு மிகவும் எளிதாக இருந்தது. இங்ஙனம் அவ்வப்போது பல தனிச் செய்யுட்களைப் பாடிவந்த இவர், தமது பதினெட்டாம் வயதில் முருகக் கடவுள்மீது **மாலை மாற்று மாலை** என்னும் சித்திரகவி நூல் ஒன்றைப் பாடி முடித்தார்; அதனைத் தம் ஆசிரியரிடம் காட்டினுர். ஒவ்வொரு செய்யுளாகப் படித்துவந்த ஆசிரியர், நூலின் இரண்டாம் காப்புச் செய்யுளில் உள்ள, "வேறலம்" என்னும் முதல் மொழிக்குப் பொருள் யாது என வினவினுர். சண்முகனுர், புன்முறுவலோடு, "யாம் நின் அடிமையே யன்றி வேறு அல்லேம்?" என்று இரு பொருள்பட விடை பகர்ந்தனர். அதனைக் கேட்டு மகிழ்ந்த ஆசிரியர் அகமிக மகிழ்ந்து, "அப்பா, சண்முகம், நீ எதிர் காலத்தில் நாடு போற்றும் நற்புலவனுவாய்," என்று ஆசி கூறினர். பின்னர்ச் சண்முகனுர் தமது இருபதாம் வயதில் **ஏகபாத நூற்றந்தாதி** என்னும் ஓரடிப் பாட்டாகிய ஏகபாத நூலைப் பாடி முடித்தார்.

**கலை பல கற்றல்**

இங்ஙனம் செய்யுட்கள் பல செய்துகொண்டும், குடும்ப வேலைகளைப் பார்த்துக்கொண்டும் சண்முகனுர் தமிழ் இலக்கண இலக்கியங்களையும், சைவ சித்தாந்த சாத்திரங்களையும், சோதிட நூல்களையும், ஓரளவு மருத்துவ நூல்களையும் பயின்று வந்தார்; அக் காலத்தில் தம் ஆசிரியரைத் தேடி வந்த அருந் தமிழ்ப் புலவர் பலருடன் அறிமுகம் பெற்ருர்; அவரவரிடம் காணப்பட்ட சிறப்பியல்புகளை அறிந்து கொண்டார். அப்புலவர்களும்

இவரது இலக்கணப் புலமையையும் செய்யுள் இயற்றுந் திறனையும் கண்டு பெரிதும் வியந்து பாராட்டினர். இங்ஙனம் சண்முகனுர் தமது ஐந்தாம் வயது முதல் இருபதாம் வயதுவரை சோழவந்தானிலேயே வாழ்ந்து புலமை எய்தினுர்.

## 3. நாடறிந்த தமிழ்ப்புலவர்

### உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர்

தமிழ்ப் புலமை நிரம்பப் பெற்ற சண்முகனுர் மதுரையிலுள்ள சேதுபதி உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியரானுர். அப்பொழுது அவருக்கு வயது இருபத்திரண்டு. இளமை முறுக்கும் தமிழில் இருந்த ஆர்வமும், நகை முகத்துடன் திறம்படப் பேசும் ஆற்றலும் ஒருசேரப் பெற்ற இவர், உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு, அவர்கள் பாராட்டத்தக்க முறையில் தமிழ்ப் பாடங்களைக் கற்பித்து வந்தார். செய்யுளை இசையோடு படிப்பதும் அதன் உயிர்நாடியான கருத்தினை நன்கு விளக்குவதும், அக்கருத்துக்கு ஏற்ற பல மேற்கோள்களை எடுத்துக் காட்டுவதும் கண்ட மாணவர், இவரது ஆழ்ந்த புலமையை ஓரளவு அறியலாயினர்; அறியவே, இவரைப் பெரிதும் விரும்பிப் போற்றலாயினர்.

### ஆசிரியர் சொற்பொழிவுகள்

சண்முகனுரது புலமை மாணவர்களால் மதுரைமாநகரில் பரவலாயிற்று. அக்காலத்தில் அப்பெருநகரில் இருந்த சங்கங்கள் ஒன்றன்பின் ஒன்ருக அவரை அழைத்துப் பேசுமாறு செய்தன. அவருடைய பேச்சுப் பண்பட்ட புலவரது பேச்

சாக அமைந்திருந்ததைக் கண்ட மாநகரப் பெரு மக்கள், "ஒரு சிறந்த பெரும் புலவரை நமது மாநகரம் பெற்றுள்ளது. இவர் இலக்கணம், இலக்கியம், சைவ சாத்திரங்கள், சோதிடம், மருத்துவம் முதலிய பல கலைகளில் வல்லுநராகக் காண்கின்றார்; பேச்சாற்றலிலும் சிறந்து விளங்குகின்றார். இவரை நன்முறையில் பயன்படுத்திக்கொள்வோம்," என்று எண்ணினர். அது முதல் மதுரை மாநகரில் அடிக்கடி கூட்டங்கள் கூட்டப்பட்டன. சண்முகனர் பல பொருள்கள் பற்றிப் பேசினர். அதுகாறும் தமிழ்ச் சுவை குன்றியிருந்த மாநகரத்தில் மக்களிடையே தமிழார்வம் தலைகாட்டத் தொடங்கியது.

**மதுரைத் தமிழ்ச் சங்கம்**

பாண்டித்துரைத் தேவர் மதுரையில் தமிழ்ச் சங்கம் ஒன்றை 1901-ஆம் ஆண்டில் நிறுவினர். அவ்விழா மூன்று நாள் சேதுபதி உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில் சிறப்புற நடந்தது. தமிழகத்தின் பல பகுதிகளிலும் இருந்த பெருந்தமிழ்ப் புலவர் பலர் அவ்விழாவில் கலந்துகொண்டு, மூன்று நாட்களிலும் அரிய சொற்பொழிவுகள் ஆற்றினர். நமது சண்முகனரும் பாண்டியநாட்டுப் பழமை, அதன் பெருமை, தமிழ் மொழியின் வரலாறு, தமிழ் மொழி வளர்ச்சிக்குரிய வேலைகள், தமிழ்ச் சங்கத்தின் இன்றியமையாமை என்பன மக்கள் மனத்தில் பதியும்படி மிகத் தெளிவாகப் பேசினர். அவரது சொற்பொழிவைக் கேட்ட சேது வேந்தரும் பாண்டித்துரைத் தேவரும் தமிழ்ப் பெரும் புலவரும் அவருடைய தமிழறிவையும் பேச்சாற்றலையும் வியந்து பாராட்டினர்.

**தமிழ்ச் சங்கத்தில் ஆசிரியர்**

பாண்டித்துரைத் தேவர் நிறுவிய அம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில், பிரவேச பண்டிதம், பால பண்டிதம், பண்டிதம் என்னும் மூன்று வகுப்புகள் தொடங்கப்பெற்றன. அச்சங்கத்தில் நமது சண்முகனாரைப் பேராசிரியராக அமர்த்தவேண்டும் என்று பாண்டித்துரைத் தேவர் விரும்பினார். அவர் தமது விருப்பத்தைச் சண்முகனாரிடம் தெரிவித்தார். நமது ஆசிரியர் தேவரது விருப்பத்திற்கு இணங்கிச் சேதுபதி உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் பதவியிலிருந்து விலகி, மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையில் தமிழ்ப் பேராசிரியரானார்.

தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஐயந்திரிபறக் கற்றறிந்த பேரறிஞர் ஆதலின், சண்முகனார் பிரவேச பண்டிதம் முதலிய மூன்று வகுப்புகளுக்கும் உரிய இலக்கண இலக்கியங்களைச் சாதாரண அறிவு படைத்த மாணவரும் எளிதில் அறிந்து கொள்ளும்படி கற்பிக்கலானார். செய்யுட்களை இசையுடன் பாடிக் காட்டிப் பொருள் விரிக்கும் திறத்தைக் கண்ட மாணவர்கள், அவரது இசையிலும் பொருள் விரிக்கும் திறனிலும் ஈடுபட்டனர்; தம்மைத் தமிழ்த் துறையில் வாழ்விக்க வந்த பேராசிரியராகவே அவரைக் கருதினர்.

சண்முகனார் இங்ஙனம் பேராசிரியத் தொழில் புரிந்துகொண்டே மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாக அக்காலத்து வந்துகொண்டிருந்த 'செந்தமிழ்' என்னும் திங்கள் தாளிலும், 'விவேகபானு', 'தமிழகம்', 'ஞானசாகரம்', 'ஞானசித்தி' முதலிய திங்கள் இதழ்களிலும் இலக்கண இலக்கி

யம்பற்றிய பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை அவ்வப் போது எழுதி வந்தார். இக்கட்டுரைகளைப் படித்த தமிழகத்து அறிஞர் பலர் நமது சண்முகனூரது ஆழ்ந்த புலமையையும் ஆராய்ச்சி வன்மையினை யும் பாராட்டி அவருக்குப் பல கடிதங்கள் வரைந் தனர். இக்கட்டுரைகளால் சண்முகனூர் புகழ் தமிழ் அறிஞரிடையே பரவலாயிற்று.

**சொற்பொருள் விரித்தல்**

சண்முகனூர் அடிக்கடி தேவரைச் சென்று காண்பது வழக்கம். தேவரும் பல சமயங்களில் அவரை அழைத்து அளவளாவுதலும் உண்டு. ஒரு நாள் புலவர் பலருடன் தேவர் அளவளாவிக்கொண் டிருந்த சமயம் சண்முகனூர் அங்குச் சென்றூர். தேவர் அவரை அன்புடன் நோக்கி, "உடல் நலம் உயிர் நலம்" என்னும் பொருள்பற்றிச் சொற் பொழிவாற்றும்படி வேண்டினூர். சொல்லின் செல் வராகிய சண்முகனூரின் சொற்பொழிவைக் கேட்டுக் கேட்டு மனங்களித்த புலவர்கள் அவரைப் பேசு மாறு வேண்டினர். நமது ஆசிரியர், புன்முறுவ லோடு சொற்பொழிவாற்றத் தொடங்கினூர்; "வாக் குண்டாம் நல்ல மனமுண்டாம்" என்னும் ஔவை யார் இயற்றிய காப்புச் செய்யுளை விளக்கிக் கூறத் தொடங்கி, அச்செய்யுளின் பிற்பகுதியிலுள்ள

"பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு."

என்ற அடிகளுக்குக் கீழ்வருமாறு பொருள் விரிக்க லானூர்: "'திருமேனி' என்பதற்குக் குப்பை மேனியென்றும், 'தும்பி' என்பதற்குச் சிறு தும்பை, பெருந்தும்பை என்றும், 'கையான்'

என்பதற்குப் பொற்றலைக் கையான் என்றும், 'பாதம்' என்பதற்குச் சிறு செருப்படை பெருஞ் செருப்படை என்றும் கூறலாம். இவற்றை முறையே பொடிசெய்து, துப்பு-பவளம் போன்ற, ஆர்-தேனில், முப்பூவைக் கொண்டு முறையே கலந்து உண்பவர்க்கு வாக்குண்டாம் நல்ல மன முண்டாம்; அன்றியும் மாமலராலாகிய இலக்குமி யின் அருளுடன் கண்ணொளியும், உடல் நலனும் குன்ருது வளர்ச்சியுறும்.'' இவ்விரிவுரையைக் கேட்ட தேவரும் புலவரும் புதையலைக் கண்டோன் புதுமகிழ்வு எய்துதல்போலப் பெரிதும் இன்புற்ற னர்; ஆசிரியரது நுண்ணறிவைப் பலவாறு பாராட் டினர்.

## ஆசிரியரது நாவன்மை

நமது நாவலர் சண்முகனுர் மதுரையின் கீழ்த் திசையிலுள்ள மாரியம்மன் தெப்பக் குளத்திற்கு ஒரு நாள் சென்றிருந்தார்; குளத்தில் நீராட விழைந்து ஒரு படியில் கால் வைத்தனர். பாசி படிந்திருந்த அப்படியில் அவர் கால் வைத்தவுடன், கால் வழுக்கிக் குளத்தில் விழுந்துவிட்டார். நல்ல காலம்! அப்பொழுது அவ்வழியே சென்றுகொண் டிருந்த உத்தம பாளையம் பெருநிலக் கிழவர் சுப்பிர மணிய முதலியார் நம் ஆசிரியர் விழுந்ததைக் கேள்வியுற்று ஓடிவந்தார்; தம் கையைக் கொடுத் துப் புலவரைக் கரையேற்றினுர். அப்பெருநிலக் கிழவர் காலத்தினுற் செய்த இந்த நன்றியைச் சண்முகனுர் மறக்கவில்லை; 'உயிர் காத்த உப காரி' என்னும் தலைப்பில் முதலியார் செய்த உதவியை வெளிப்படுத்தினுர்.

மேற் சொல்லப்பட்ட நிகழ்ச்சியிலிருந்து முதலியாருக்கும் சண்முகனுருக்கும் முன்னுள்ள நட்பினும், பின்னும் பெருநட்புத் தோன்றி நாளும் வளரலாயிற்று. நல்லார் இணக்கம் ஆதலின் அவர் தம் நட்பு வளர்பிறைபோன்று வளர்ந்துவந்தது. ஒரு நாள் இருவரும் உலாவச் சென்றனர். அப்பொழுது பகலவன் தன் சுடுகிரணங்களால் பாரினை எரிப்பவன் போலக் காணப்பட்டான். வெய்யிலின் வெம்மை தாங்கமுடியாத முதலியார் புலவரை நோக்கி, "புலவர் பெருமானே, கம்பர் நெடுஞ்சுவர் வைத்ததாகவும், தாம் அச்சுவருக்குரிய வேலியென்பாளிடம் கூலி பெறும்வரை, 'நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே!' என்று பாடியதாகவும், அவர் கூலி பெற்றுச் செல்லும்வரை அச்சுவர் நின்றதாகவும் கம்பர் வரலாற்றில் கூறப்பட்டுள்ளதே! அஃது உண்மையானுல், கம்பரைப் போன்ற பெருமை வாய்ந்த நீங்களும் நாம் உலாவி மீளும்வரை வெய்யிலின் கொடுமை தாழும்படி ஒரு செய்யுளைப் பாட வேண்டுகிறேன்," என்று கூறிப் புன்னகை புரிந்தார். முதலியார் கூற்றைக் கேட்ட புலவர் புன்முறுவல் பூத்து, "போய் வரும் அளவும் பொழி முகிலே" என்று ஈற்றடி அமையும்படி ஒரு செய்யுளைப் பாடினர். சண்முகனுர் உண்மைக் கவிஞர் அல்லவா? அவர் பாடி முடித்தவுடனே சிறிது தூறல் உண்டாயிற்றும். முதலியார் இவ் வியத்தகு நிகழ்ச்சியைக் கண்டு சிறிது நேரம் செயலற்று நின்ருர்; உண்மைப் புலவர்களின் மொழி பொய்க்காது என்பதைக் கண்கூடாக அறிந்தார். அவர் இந்நிகழ்ச்சியைப் பலரிடம் கூறிப் புலவரது நாவன்மையைப் பாராட்டினுர்.

## ஆதீனத் தொடர்பு

நமது தமிழ்நாட்டில் திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், திருவண்ணுமலை, கோயிலூர், மதுரை என்னும் இடங்களில் சைவத் திருமடங்கள் இருந்து சில நூற்ருண்டுகளாகச் சைவத்தையும் தமிழையும் வளர்த்துவருகின்றன; இவற்றுள் பெருஞ் சிறப்புடையது திருவாவடுதுறை ஆதீனம். இவ்வாதீனத்தில் வாழ்ந்த துறவிகளும் புலவர்களும் தமிழிற் செய்துள்ள நூல்கள் பல. அவருட் சிவஞான முனிவர் என்னும் பெரியார் இவ்வாதீனத்திலிருந்து காஞ்சிப்புராணம் முதலிய செய்யுள் நூல்களையும் சிவஞானபோதம், நன்னூல் முதலிய நூல்களுக்கு விரிவுரையும் எழுதி வெளியிட்டார். முனிவர் காலத்திற்கும் முற்பட்டவரான சங்கர நமச்சிவாயர் என்பவர் நன்னூலுக்கு விருத்தியுரை எழுதினர்.

இங்ஙனம் தமிழ்த் தொண்டும் சிவத்தொண்டும் ஆற்றிவந்த அவ்வாதீனத்தில், நமது சண்முகனர் காலத்தில் திருப்பெருந்திரு அம்பலவாண தேசிக சுவாமிகள் என்பவர் ஆதீனகர்த்தராக இருந்தார். அவர் வடமொழியிலும் தமிழ்மொழியிலும் புலமை சான்றவர்; இருமொழிப் புலவர்களையும் வரவேற்றுப் பரிசளித்து வந்தவர். அப்பெரியார் நமது சண்முகனரது தமிழ்ப் புலமையைக் கட்டுரைகள், நூலுரைகள் வாயிலாகவும் பிறர் சொல்லக் கேட்டும் அறிந்து அவரைக் காண விழைந்தார்; தமது ஆதீனத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்தார். அவ்வழைப்பை ஏற்ற ஆசிரியர் பாண்டியநாட்டை விட்டுச் சோழ நாடு சென்று நேரில் ஆதீனகர்த்தரைக் கண்டார்; அவரது பொன்னுர் மேனியையும்

முகப் பொலிவையும் கண்டும், இனிய சொற்களைக் கேட்டும் அவரிடத்தில் ஈடுபாடு கொண்டார். ஆதீனகர்த்தர் புலவரைப் பலவாறு சோதித்து, அவரது புலமையின் ஆழத்தை உள்ளவாறு உணர்ந்து அகமிக மகிழ்ந்தார்; ஆசிரியருக்குப் பொன்னுடை போர்த்துச் சிறப்பித்தார்; சின்னுள் தம்முடன் இருக்கச்செய்து வெண் பொற்காசுகள் வழங்கித் தம்மூர் செல்ல விடையளித்தார்; ஆதீனத் திற்கு அடிக்கடி வந்து பாடங் கற்பித்துப் போகும் படி வேண்டினுர். இங்ஙனம் சண்முகனர் அவ் வாதீனத்தில் பெற்ற சிறப்புக்கள் பலவாகும்.

**அரிய விருத்தியுரை**

'பாயிரம்' என்பது ஒரு நூலுக்கு எழுதப் படும் முகவுரை. அதனில் ஆசிரியன் பெயர், நூல் எழுந்த காரணம், நூலில் கூறப்பட்டுள்ள செய்தி கள் முதலியன குறிக்கப்பட்டிருக்கும். தொல்காப் பியம் என்னும் இலக்கணத்திற்கு இத்தகைய பாயிரம் ஒன்று இருக்கின்றது. அதனை இயற்றிய வர் தொல்காப்பியர் காலத்தில் வாழ்ந்த பனம்பா ரனுராவர். அப்பாயிரத்தைக் கேட்டவர் அதங் கோட்டு ஆசான் ஆவர்.

நமது சண்முகனர் அப்பாயிரத்திற்கு விரி வான உரை ஒன்று எழுதத் தொடங்கினர். இவர் ஒன்றை எழுதுவதற்குமுன் அதனைப்பற்றிய பல வற்றையும் ஆராய்ந்து எழுதும் பழக்கம் உடைய வர்; அப்பழக்கப்படி இப்பாயிர விருத்தி எழுதத் தொல்காப்பியம் முழுமையும் பலமுறை படித்து ஆராய்ந்தார். தொல்காப்பியம் கடல் போன்றது; ஆயிரத்து அறுநூற்றுப் பத்துச் சூத்திரங்களைக்

கொண்டது. ஆதலால் அதனை நன்கு ஆராயச் சண்முகனர்க்குச் சில ஆண்டுகள் பிடித்தன. இடைவிடாத இந்த உழைப்பினுல் அவரது உடல் நலம் கெட்டது. அவர் நோய்வாய்ப்பட்டார்.

ஒருநாள் இரவு, நோயுற்றுப் படுத்திருந்த அவரது கனவில் பெரியவர் ஒருவர் தோன்றினர்; 'வையை யாற்றின் தென்பால் உள்ள நாகமலைக்கு வருக,' என்று அழைத்தார். புலவரும் வையையாறு கடந்து நாரணபுர வழியே உடன் சென்ருர். நாக மலைக்கு அருகில் சென்றதும், அப்பெரியார் நமது அருந்தமிழ்ப் புலவரை அகம் குழைய நோக்கி, 'உமது உடலுக்கு மருந்து வேண்டுமா? உயிருக்கு மருந்து வேண்டுமா?' என வினவினர். புலவர் கனிவுடன், 'உயிருக்கே மருந்து உதவுதல் வேண்டும்' என்று உரைத்தார். அது கேட்டு மகிழ்ந்த பெரியார், அடுத்திருந்த தாமரை ஊற்றுக்கு அவரை அழைத்துச் சென்ருர்; அங்கிருந்த ஒரு மூலிகையைச் சுட்டிக் காட்டித் திடீரென மறைந்தார். புலவர் மூலிகையுண்டு, வியப்புற்று வீடுவந்து சேர்ந்தார்.

இக்கனவுக்குப் பிறகு புலவரது உடல்நிலை சிறிது சிறிதாக நலமுற்றது. பாயிர விருத்தியும் செவ்வனே எழுதப்பட்டு முடிவுற்றது. புலவர் அதனைத் தம் நண்பரான புலவர் பலருக்குக் காட்டினர்; அதனைச் செய்தித்தாள்கள் மூலம் வெளியிட்டனர். அதனைப் படித்த புலவர் சிலர் பொருமை கொண்டனர்; அவருடைய கருத்துக்களை மறுத்து எழுதினர்; அத்துடன் நில்லாது, பாயிர விருத்தியை வெளியிடலாகாது என்றும் ஆரவாரம் செய்தனர். பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது

அன்ருே? பிற நூல்களிலுள்ள குற்றங் குறைகளை எவர்க்கும் அஞ்சாது வெளியிடும் ஆற்றல் பெற்ற நமது புலவர், காழ்ப்புக் கொண்ட புலவரது சல சலப்புக்கு அஞ்சவில்லை அவர் அப்புலவர் தம் மறுப்புக்கு மறுப்புக் கொடுத்தார். நாடறிந்த பெரும்புலவர் பலர் நமது புலவரை ஆதரித்தனர். இறுதியில் எதிர்ப்புக் கரைந்தது. சண்முகனர் வெற்றி பெற்ருர். அவரது பாயிர விருத்தியை அரித்துவாரமங்கலம் **கோபாலசுவாமி ரகுநாத ராசாளியார்** என்னும் பெருநிலக் கிழவர் 1905-ஆம் ஆண்டு அரிமளநகரத்து வணிகர்களது பொரு ளுதவி கொண்டு அச்சிட்டு வெளிப்படுத்தினர். அன்றுமுதல் சண்முகனர் **முதுபெரும் புலவர்** என்று அறிஞர்களால் சிறப்பிக்கப்பட்டார்.

## பெயர் மாற்றம்

நமது புலவர் சண்முகனர் பாண்டியநாட்டு வேளாளர் மரபினராதலால் சண்முகம்பிள்ளை என்றே அழைக்கப்பட்டனர். ஆனல் அவர் காலத் தில் சென்னை-மயிலாப்பூரில் அ. சண்முகம் பிள்ளை என்று மற்ருெரு பெரும் புலவர் இருந்தார். அவரும் அடிக்கடி மதுரை வந்து செல்வதுண்டு. இவ்விரு வருக்குள் பெயர்க் குழப்பம் உண்டாகாது இருப் பதற்கே, நமது புலவர் தம் பெயருடன் தம் தந்தை யார் பெயரையும் சேர்த்து **அரசஞ்சண்முகனர்** என மாற்றி அமைத்துக்கொண்டார். இவரது வாழ்க்கையின் பிற்பகுதியில் இவர் அரசஞ்சண் முகனர் என்றே அழைக்கப்பட்டார்.

## சண்முகனர் செய்த நூல்கள்

இவர் செய்த நூல்கள் பல. அவற்றுள் பலருக்கும் தெரிந்தவை கீழ்வருவனவாகும்: (1) மாலை மாற்றுமாலை, (2) இன்னிசை இருநூறு, (3) மதுரை மீனுட்சியம்மை சந்தத் திருவடி மாலை, (4) திருவடிப்பத்து, (5) சிதம்பர விநாயகர் மாலை, (6) திருவள்ளுவர் நேரிசை, (7) திருக்குறள் சண்முக விருத்தி, (8) தொல்காப்பியப் பாயிர விருத்தி. இவை அச்சாகி வெளிவந்தவை. இன்றளவும் அச்சாகாத நூல்கள்: (1) ஏகபாத நூற்றந்தாதி, (2) முருகக் கடவுள் கலம்பகம், (3) பஞ்ச தந்திர வெண்பா, (4) மதுரைச் சிலேடை, (5) நவமணிக் காரிகை நிகண்டு, (6) நுண் பொருட் கோவை, (7) இசை நுணுக்கச் சிற்றுரை, (8) ஆகுபெயர் அன்மொழித்தொகை ஆராய்ச்சி என்பனவும், பின்னும் பலவுமாம். இவற்றுள் சில "செந்தமிழ்" முதலிய திங்கள் தாள்களில் வெளிவந்தமையாயினும், நூல் வடிவில் அச்சாகாதவை. இப்பின்னவை இன்றளவும் சண்முகனர் குடும்பத்தாரிடம் இருந்து வருகின்றன.

## முத்திறத்தாசிரியர்

மேலுமிவர் முத்திறத்தாசிரியராகவும் விளங்கினர். அஃதாவது, இவர் திருவள்ளுவரையும், தொல்காப்பியனரையும் போல நூல்கள் செய்தமையால், **நூலாசிரியராகவும்**; நக்கீரனரையும் பரிமேலழகரையும் போல உரைகள் செய்தமையால் **உரையாசிரியராகவும்**; குறுமுனியையும் அறுமுகனையும் போல ஆசிரியப்பதவி வகித்துப் போதித்தல்

பெறப் பட்டமையால் போதகாசிரியராகவும் கொள்ளப்படத் தக்கவராவர்.

**கதிரைவேற்பிள்ளை பாராட்டுரை**

கதிரைவேற்பிள்ளை என்பவர் யாழ்ப்பாணத்துப் பெரும் புலவருள் ஒருவர். அவர் சண்முகனுரைப் போல அஞ்சா நெஞ்சினர்; ஆற்றல் மிக்கவர். அப்பெரியார் சண்முகனுர் இயற்றிய நூல்களையும், வரைந்து வெளியிட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் நன்கு படித்து அவரது பெரும் புலமையை உள்ளவாறு உணர்ந்தார். அப்பெரியார் தாம் பேசிய பல கூட்டங்களில் சண்முகனுர் புலமையைப் பாராட்டிப் பேசலானுர்: "எம்முகத்தால் ஆகாதெனினும் சண்முகத்தால் ஆகும்," எனப் புகழ்வதுண்டு. அப்பெரும் புலவர் ஒருமுறை மதுரையிலிருந்த, நமது புலவர் பெருமானைக் கண்டு, தமது கரையற்ற அன்பு வெளிப்பட, மனங் கலந்து பழகி அளவளாவினர்.

## 4. நற்பண்புகள்

**விருந்தினரைப் போற்றல்**

'வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணுதான்' என்பது அநுபவமொழி. பாண்டி வேளாளராகிய அரசஞ் சண்முகனுர் அப்பழமொழியைத் தம் வாழ்க்கையில் மெய்ப்பித்துக் காட்டினுர். அவர் எளிய குடும்பத்தினராயினும், தாம் உண்ணும் பொழுது தம்மை நாடிவந்த உறவினர் அல்லது நண்பருடன் கூடி உண்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தார்; "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்னும் பழமொழியைத் தமக்கு உகந்ததாகக் கொண்டு, தமது எளிய வாழ்க்கை

யிலும் தமது உற்ருர் உறவினர்க்குத் தம்மாலி யன்ற அளவு உதவி செய்துவந்தார்; உணவு என் பது விரும்பி உண்ணப்படுவது—உடல் நலம் கருதி உண்ணப்படுவது என்பது நன்குணர்ந்தவர் ஆதலின், சத்துள்ள-விலை குறைந்த உணவுப் பொருள்களையே உண்டுவந்தார்.

ஈருடல்—ஓருயிர்

ஒரு வண்டியை இழுத்துச் செல்லும் இரண்டு மாடுகளும் உயரத்திலும் பருமனிலும் சுறுசுறுப் பிலும் ஒரே அளவினவாய் இருந்தால்தான் வண் டியை எவ்வித விபத்திற்கும் உள்ளாக்காது விரை வாக இழுத்துச் சென்று குறித்த காலத்தில் குறித்த இடத்தை அடைய முடியும். அதுபோலவே இல் லறம் நல்லறமாக நடைபெற வேண்டுமாயின், கணவனும் மனைவியும் கருத்தாலும் செயலாலும் ஒன்றுபட்டிருத்தல் வேண்டும் என்பது அறிஞர் கண்ட உண்மை. இவ்வுண்மையைச் சண்முகனர் வாழ்க்கை தெள்ளிதிற் காட்டியது. இவரது ஆரு யிர் மனைவியார் காளியம்மை என்பார், இவரது கருத்தறிந்து நடந்தனர். புலவர் பெருமானும் அவ் வம்மையார் கருத்தறிந்து நடந்து, அவரது முழு அன்பிற்கும் உரியவரானர். மனையில் எக்காரி யத்தைச் செய்வதாயினும் இருவரும் நன்கு யோசித்து ஓர் முடிவுக்கு வந்த பிறகே செய்வது வழக்கம்.

இத்தகைய மன வொற்றுமை இல்லாத வாழ்க்கை இன்ப வாழ்க்கை யாகாது. கணவன் விழைவுக்கு மாருக மனைவி நடப்பதும், அவ ளுக்குப் போட்டியாகக் கணவன் நடப்பதும் இல்லற

வாழ்க்கைக்கு ஏற்றதன்று. "கணவனும் மனைவியும் குடும்பப் பொறுப்பில் சம உணர்ச்சி உடையராதல் வேண்டும். நம்முடைய நாயன்மாரும் அவர் மனைவி மாரும் இத்தகைய பொறுப்பு உணர்ச்சியுடன் வாழ்ந்தமையால்தான் அவரது இல்லறம் நல்லற மாகத் திகழ்ந்தது. அவரும் பெறுதற்கரிய பேறு பெற்றனர். நம் நாட்டுப் பெரியோருடைய வாழ்க்கை வரலாறுகளை இம்முறையில் உணர்ந்து தமிழர் நடப்பராயின், அவரது இல்லற வாழ்க்கை இனிது சிறக்கும்," என்று சண்முகனூர் அடிக்கடி கூறுவதுண்டு.

**செய்ந்நன்றி யறிதல்**

> "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

என்பது பொய்யாமொழி; தமிழன் கண்ட பேரறம். சிறந்த தமிழராகிய சண்முகனூர் இதனை மறந்த வரல்லர். அவர் தம்மைத் தம் அவைப் புலவருள் ஒருவராக மதித்து அவ்வப்போது பொருளுதவி செய்தும் பொன்னுடை போர்த்தும் வந்த பாண்டித்துரைத் தேவரிடம் நன்மதிப்பும் நல்லெண்ண மும் கொண்டிருந்தார்; அவரது கொடைத் தன் மையையும் தமிழ்ப்பற்றையும் தம் பாயிரவிருத்தி யுள், 'நன்றி கூறல்' என்ற முகவுரைக்கண் கீழ் வருமாறு கூறினர்:

"முன்னரேயுள்ள நோய் முற்றி, வயிற்றினுள் நாபியின்கீழ்க் கழலையொப்பத் திரண்டு ஆவி போக்க முயன்றது. அக்காலைப் பல சுதேச மருத்து வரிடத்தும்பல ஆங்கில மருத்துவ ரிடத்துஞ் சென்று பிணி தீர்த்துக் காத்தல் வேண்டுமெனப் பெரிதும் வேண்டினேன். அவ

ரெல்லாரு மந்நோய் கருவிகொண்டு சேதிக்கற்பாற் றென்றும் அதுவும் முற்றியபடியால் இனிச் செய் யின் உயிர்க்கேடு செய்யுமென்றுஞ் சொல்லினர். பின்னர்ப் பிறநாடு சென்ருயினும் பிணிதீர்ப்பான் கருதி யானக் காலேச் சேதுபதி கலாசாலேயிற் கற்பிக்குந்தொழில் பெற்றிருந்தமையால், மதுரைத் தமிழ்ச்சங்கத்து அக்கிராசனுதிபதியும் பாலவனத் தம் ஜமீந்தாரும் உத்தமகுண மேருவும் வறியார்க் கொன் றீவதே யீகையெனக்கொண்ட பெருவள்ள லு மாகிய மகா-ா-ா. ஸ்ரீ **பாண்டித்துரைத் தேவரவர் களேக்** கண்டு நடந்தன வுரைத்தேன். உடனே அவர்கள் கலாசாலேயில் யான் பெற்றுவந்த ஊதி யத்தைத் ஓராண்டுவரை வேலேயின்றிப் பெறு மாருணைசெய் தளித்ததூஉமன்றி, இருநூறு வெண் பொற்காசும் பரிசிலாக அளித்தார்கள். அவர்கள் செய்த பேருதவியையான் என்றும் மறவேன்.''

—தொல்காப்பியப் பாயிரவிருத்தி, பக். 3-4

தம்மை மாரியம்மன் தெப்பக்குளத்திலிருந்து கரைசேர்த்து உயிர்காத்த உத்தமபாளேயம் பெரு நிலக் கிழவரைப் பாராட்டி 'உயிர்காத்த உபகாரி' என்று குரவர் வகையுட் கொண்டு ஏகபாத நூற்றந் தாதியுள்' தற்சிறப்புப் பாயிரத்துட் கொண்டுபோற் றினர். இவ்வாறே அவர் தம்மை அவ்வப்போது பெருமைப்படுத்திய பெருமக்களேப் பாராட்டிச் செய்த் தனிப் பாக்கள் பல.

**உண்மை நண்பர்**

இக்கால உலகில் நண்பர் பலதிறப்படுவர்: "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்" ஒரு வகையினர்; உள்ளொன்று வைத்துப் புற

மொன்று பேசுவதோடு நில்லாது, நம்மை அறியாது நமக்குக் குழிதோண்டும் நண்பரும் சிலர்; நமது தவறு கண்ட இடத்து வெறுத்து நம்மைவிட்டு நீங்கும் நண்பர் சிலர்; நம்மைத் தீய வழிகளில் புகுத்தி, நம்முடன் தாமும் சேர்ந்து தீமையில் இன்பம் துய்ப்பவர் சிலர். இன்பத்திலும் துன்பத்திலும் நம்மை விட்டு அகலாது நின்று, துன்பப் படும்போது ஆறுதலும் தவறு செய்யும்பொழுது அறிவுரையும் கூறி இறக்கும்வரை பிரியாது வாழும் நண்பர் மிகச்சிலர். இறுதியிற் சொல்லப்பட்ட நண்பரே 'உண்மை நண்பர்' என்று அறிஞர் கூறுவர். நமது அருந்தமிழ்ப் புலவர்பெருமான் தம் உள்ளம் கவர்ந்த உத்தம நண்பர்களோடுதான் பழகினுர்; அவருடன் நட்புக்கொண்ட நாளில் எவ்வித அன்பு காட்டினரோ அவ்வித அன்பையே இறுதி வரையிலும் காட்டி அவர்களோடு மன வொற்றுமையுடன் பழகிவந்தார். இதனுல் அவருடைய நண்பர்கள் அவரைத் தம் உண்மை நண்பர் எனப் பாராட்டி மகிழ்ந்தனர்.

**சிறந்த பக்திமான்**

சண்முகனுர் வழிவழிச் சைவராக வந்த பாண்டி வேளாளர் மரபினர். அவர் சிறுவயது முதலே தந்தையார் செய்துவந்த சிவபூசையில் கலந்துகொண்டார்; இளமையிலேயே அழுத்தமான சைவப்பற்றுடன் விளங்கினுர்;

"கற்றதனுல் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றுள் தொழாஅர் எனின்"

என்னும் திருக்குறளைத் தம் சொற்பொழிவுகளில் அடிக்கடி எடுத்துக் கூறுவர். **சிதம்பர விநாயகர் மாலை, முருகக்கடவுள் கலம்பகம், மதுரை**

மீனுட்சியம்மை சந்தத் திருவடிமாலை என்னும் நூல்களை உள்ளமுருகப் பாடியுள்ள அவரது சமயப் பற்றையும் கடவுட் பற்றையும் என்னென்று கூறுவது !

### அஞ்சா நெஞ்சம்

அரசஞ் சண்முகனர் அழுத்தமான தமிழறிவு பெற்றவர்; சங்ககாலத்து நக்கீரரைப் போலத் தமக்குத் தோன்றும் உண்மைகளை எடுத்துரைப்பவர். இவ்வஞ்சாமைக்குணமே அவரது பாயிர விருத்தியை அச்சாகச் செய்துள்ளது; பொருமை உள்ளம் படைத்த புலவர்களை நாவொடுங்கச் செய்தது. •அவர் தம்மை ஆதரித்தவர், தேவர் முதலிய பெரியோராயினும், கண்ணேட்டமின்றி நூலுரையின் குற்றங் குறைகளை அஞ்சாது சுட்டிக்காட்டும் இயல்புடையவர்.

### தமிழர் கடமை

சண்முகனர் தமது நாற்பத்தேழாம் வயதில் (11—1—1915-இல்) காலமானர். அவரது பிரிவால் வாடிய புலவர் பலர்; அழுது அரற்றிய அன்பர் பலர். அவர் மேலும் சில ஆண்டுகள் இருந்திருப்பின், பல அரிய செய்யுட்களும் பல ஆராய்ச்சி நூல்களும் வெளி வந்திருக்கலாம். அத்தமிழ்ப் பெரியாரால் போற்றி வளர்க்கப்பட்ட நமது தாய்மொழி மேலும் பல நூல்களைப் பெற்று வளம்பெற வேண்டுமன்றே? அவருக்கு நாம் செய்யும் கைம்மாறு யாது? இதுவரை அச்சாகாதுள்ள அவர் செய்த நூல்களை அச்சிடுவித்தலும் அவரைப் போலத் தமிழன்னைக்குத் தொண்டு செய்வதுமே தமிழராகப் பிறந்த நமது கடமையாகும்.



மகா வித்துவான் ரா. இராகவையங்கார்

# III. மகா வித்துவான் ரா. இராகவையங்கார்*
## (கி. பி. 1870—1946)

## 1. இளமைப் பருவம்

**தந்தையாரின் முன்னோர்**

நம் தமிழகத்துச் சிறந்து விளங்கும் வைணவத் தலங்களுள் நம்மாழ்வார் என்ற சடகோபர் அவதரித்துச் சீரும் சிறப்பும் பெற்ற புண்ணிய ஸ்தலம் **ஆழ்வார்திருநகரியாகும்.** அங்கு வடமொழியிலும், தென்மொழியிலும் வல்ல வைணவ ஆசாரியர்களும், பெரும் புலவர்களும் வாழ்ந்து வந்தனர். அப்பதியில் வாழ்ந்தவர்களுள் **நைத்ருவ காசிப கோத்திரத்தவரான** அந்தணர்கள் சிறப்பானவர்கள். அம்மரபினருக்கு அத்தலத்து எம்பெருமானார் ஜீயர் மடாதிபத்யம் உரியதாகும். அம்மரபினருட் சில குடும்பத்தினர் ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகட்கு முன் சேது நாட்டுக்கு வந்து குடியேறி வாழ்ந்தனர்.

**சேதுநாடு**

சேதுநாடென்பது இராமநாதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு மறவர் தலைவர்களான சேதுபதி மன்னர்களால் நெடுங்கால முதல் ஆளப்பட்டுவரும் நிலப்பகுதியாகும். இந்நாடு முன்பு இராமநாதபுரம், சிவகங்கைச் சீமைகளும், புதுக்கோட்டை, தஞ்சைப் பகுதிகளுமாக விரிந்திருந்தது. 'தேவை'

---

*இவ்வரலாற்றுக்கு வேண்டும் குறிப்புக்களை வழங்கிய அறிஞர் இம்மகா வித்துவான் தவப்புதல்வரான **வித்துவான் இராமாநுஜையங்காராவர்.**

என இலக்கிய வழக்குப் பெறும் இராமேசுவரமும், தனுஷ்கோடி என்ற புண்ணிய தீர்த்தத்துறையும் இச்சேது நாட்டைச் சார்ந்தவை.

**தாயாரின் முன்னோர்**

இச் சேதுநாட்டைப் பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் (கி. பி. 1763–95) **முத்து ராமலிங்க சேதுபதி** என்ற மன்னர் ஆட்சி புரிந்தனர். இவர் வீரம், நியாயம், தியாகம் என்னும் அருங்குணங்கள் அமைந்தவர்; தெய்வ பக்தியிலும், செங்கோல் ஆட்சியிலும் சிறந்தவர். இம்மன்னராட்சியில் முதலமைச்சராயிருந்தவர் முத்திருளப்ப பிள்ளை என்பவர். அவரை அடுத்து இரண்டாவது அமைச்சர் பதவியில் இருந்தவர் **கிருஷ்ணையங்கார்** என்பார். இவர் இரண்டாம் அமைச்சராக இருந்த காரணத்தால், ''சின்னப் பிரதானி'' என விசேடிக்கப் பெற்றுர். இராமேசுவரங் கோயிலில் மூன்றும் பிரகாரத்தில் முத்துராமலிங்க சேதுபதியின் உருவமும், அவருக்கு இருபுறங்களிலும் அவர் மந்திரிகளான முத்திருளப்ப பிள்ளை, கிருஷ்ணையங்கார் ஆகிய இருவர் உருவங்களும் கற்றூண்களில் அழகாக வகுக்கப்பட்டு விளங்குதலை இன்றும் காணலாம்.

சின்னப் பிரதானி கிருஷ்ணையங்காரின் மூத்த பேரர் **நாராயணையங்கார்** என்ற **பங்காருசாமி ஐயங்கார்**. இவருக்கு இருவர் புதல்வர்களும், ஒரு புதல்வியும் இருந்தனர். அப்புதல்வர் இருவருள் மூத்தவர் **கிருஷ்ணையங்கார்** என வழங்கும் திருநாமம் உடையவர்; அவர் வடமொழி தென்மொழிகளில் சிறந்த புலமை வாய்ந்தவர்; சமய

நூலாராய்ச்சி பெரிதும் உடையவர். மகாவித்துவான்கள் பாராட்டும் நுண்ணறிவோடு கூடிய வாத வன்மை பெற்றவர். அவர் முப்பத்திரண்டு அவதானங்கள்* புரிய வல்லவராதலின், 'துவாத்ரிம் சதாவதானி' என்று சிறப்பித்து வழங்கப்பட்டார். அப்பெரியார் இற்றைக்கு ஏறத்தாழ எண்பது ஆண்டுகட்கு முன் சேது நாட்டு அமைச்சரும் தமிழ் வள்ளலுமாகிய பொன்னுச்சாமித் தேவரது பாராட்டுக்குரிய அவைப் புலவராகத் திகழ்ந்தார்.

இப்பெரும் புலவருக்கு இளவலாகத் தோன்றியவர் **சதாவதானம் முத்துசுவாமி ஐயங்கார்** என்பவர். இவர் இளம் வயதிலே கன்னட நாட்டு அரசரான ஸ்ரீமும்முடி கிருஷ்ணராஜ உடையார் முன்னிலையில் கன்னட மொழியில் சதாவதானம் செய்தவர்; ஆதலால், பல்லக்கு, குடை, முத்துமாலை, பொற்குவை முதலியவற்றைப் பரிசிலாகப் பெற்றவர். இப்பெரியார் குருகைக் கலம்பகம், சந்திராலோகம், மணவாளமாமுனி நூற்றந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி அகவல் முதலிய நூல்களை இயற்றியவர். இவரது அவதானத் திறமையைத்

---

* ஓர் அவையில், புலவர் பலர் ஒரே காலத்தில் பலவகைப் பொருள்களை வைத்துச் செய்யுள் இயற்றும்படியும் வேறுபல செய்திகள் பற்றியும் அவதானம் செய்பவரிடம் கேள்விகள் கேட்பர். அவதானம் செய்பவர் அவை அனைத்தையும் கேட்டுக்கொண்டு, முடிவில் ஒவ்வொன்றுக்கும் விடை கூறுவர். இவ்வாறு கூறி வெற்றி அடைபவர் அவதானி என்னும் பட்டம் அவையோரால் வழங்கப் பெறுவர். ஒரே சமயத்தில் எட்டு வகைக் கேள்விகளுக்கு விடை கூறுபவர் **அஷ்டாவதானி** என்றும், பத்து வினுக்களுக்கு விடை அளிப்பவர் **தசாவதானி** என்றும், இவ்வாறே நூறு வினுக்களுக்கு விடை அளிப்பவர் **சதாவதானி** என்றும் பட்டம் வழங்கப் பெறுவர்.

திரிசிரபுரம் **மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை** அவர்களும் வியந்து பாராட்டியுள்ளார்.

## பெற்றேர்

இத்தகைய புலவர் பெருமக்களான கிருஷ்ணையங்கார், முத்துசுவாமி ஐயங்கார்* ஆகிய இருவருக்கும் பின் பிறந்த புதல்வியாரின் திருப்பெயர் **பத்மாஸனி அம்மாள்** என்பது. இவ்வம்மையார் பரமக்குடியை அடுத்த தென்னவராயன் புதுக்கோட்டை என்னும் சிற்றூரில் வாழ்ந்த **இராமானுஜையங்கார்** என்பவருக்கு மனைவியாயினர். இந்த இராமானுஜையங்கார், மேற்கூறிய ஆழ்வார் திருநகரி அந்தணர் மரபினர்; சிறந்த அறிஞர்; அன்பு, வாய்மை, ஈகை முதலிய நற்பண்புகளுக்கு உறைவிடமானவர். இவர் இல்லறம் என்னும் நல்லறத்தை இனிது நடத்திவருங்கால், ஆண்மக்கள் இருவர் பிறந்தனர். அவருள் மூத்தவர் **ஸ்ரீநிவாச ஐயங்கார்** என்பவர்; இளையவர் நமது மகா வித்துவான் **ரா. இராகவையங்கார்**† ஆவர்.

## இராமநாதபுரத்தில் கல்வி கற்றல்

இராகவையங்கார் ஐந்து வயதினராக இருந்த பொழுது இவரது அருமைத் தந்தையார் காலமானுர். உடனே இவரது இளைய அம்மானுகிய முத்துசுவாமி ஐயங்கார் தம் தங்கையாரையும், அவர்தம் மைந்தர்களையும் தம்மிடமே வருவித்துக்கொண்டு,

---

* திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறைத் தலைவரும், சிறந்த தமிழ்ப்பெரும் புலவருமாகிய **ராவ்ஸாஹிப் மு. இராகவையங்கார்** அவர்கள், இம் முத்துசுவாமி ஐயங்காரின் தவமைந்தர்.

† இவரது பிறப்பு 20—9—1870.

தமது மேற்பார்வையில் அவர்களைக் கல்வி கற்கச் செய்தார்.

இராகவரும் இவர் தமையனாரும் இராமநாதபுரத்தில் உள்ள சுவார்ட்ஸ் துரைமகனார் நிறுவிய புகழ் பெற்ற உயர்நிலைப் பள்ளியில் கல்வி கற்றனர். மூத்தவரான ஸ்ரீநிவாச ஐயங்கார் பள்ளிப்பாடங்களை நன்கு கற்று வகுப்புக்களில் முதல்வராகத் தேர்ச்சி பெற்றார். இளையவர் பள்ளிக் கல்வியுடன் ஓட்டப் பந்தயம் போன்ற உடற்பயிற்சி விளையாட்டுக்களில் முனைந்து நின்று பல பரிசுகளும் பெற்றனர். இவர் பெரும் புலவரான தம் தாய் மாமனுடன் ஐந்து வயது முதலே பழகிவந்த காரணத்தால், தமிழ் நூல்களை விரும்பிக் கற்கவும், அதனால் பிழையறத் தமிழ் நடையில் எழுதவும் பேசவும் வல்லவரானார்; தமிழ்ப் பாக்கள் இயற்றவும் திறமை பெற்றார்.

## ஊற்றுமலை ஜமீந்தாரிடம் பரிசு பெறுதல்

இராகவனார் மெட்றிகுலேஷன் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது, இவர் மனம் ஆங்கிலக் கல்வியில் முழுமையும் பற்றாமல் தமிழ்ப் பயிற்சியையே நாடியது; அதனால் பள்ளிப் படிப்பை விட்டுக் குடும்பத்தார்க்கு அறியாமல் வெளியேறினர். முதலில் இவர் திருநெல்வேலி சென்று அந்நகரில் பிரபல வழக்கறிஞராயிருந்த **கிருஷ்ணசாமி ஐயர்** என்பவரது உதவிகொண்டு, ஊற்றுமலை ஜமீந்தார் சமுகம் சென்றார். அப்போது அந்த ஜமீன் தலைவராயிருந்தவர் தமிழ் வள்ளலான **இருதயாலய மருதப்பத்** தேவர் என்பவர். அவர் நம் இராகவனாரது அம்மானாகிய முத்துசுவாமி

ஐயங்காருடன் முன்பே பலகாலும் பழகி, அவரது அவதான ஆற்றலை நன்கறிந்து பரிசளித்தவர். அவர்தம் மருகரே நம் இராகவனுர் என்பதை உணர்ந்த அப்பிரபு, இராகவனுரது தமிழ்ப் புலமையையும் கவிபாடுந் திறத்தையும் அறிந்து ஆதரவு காட்டினர். அப்போது இராகவனுர் அந்தப் பிரபுவின்மீது பாடிய பாக்கள் பல. அவற்றையெல்லாம் கேட்டுவந்த மருதப்ப தேவர், இவர்க்கு வேண்டிய பரிசுகள் வழங்கிப் பெரிதும் அபிமானித்துத் தம் ஆதரவில் சில காலம் தங்கியிருக்கச் செய்தார். தம் மருகர் அங்கிருந்த செய்தியை அம்மான் அறிந்து மகிழ்ந்து, ஜமீந்தார் அநுமதி பெற்று, இராமநாதபுரத்திற்கு இவரை அழைப்பித்துக்கொண்டார். இராகவனுரும் தம் முதற்பரிசுகளைத் தம் அம்மானிடம் காட்டி, அவரது நல்லாசியைப் பெற்ருர்.

**அம்மானிடம் பாடங் கேட்டல்**

தமது தங்கை மகன் எவரிடமும் முறையாகத் தமிழ்க் கல்வி கல்லாத நிலையிலேயே, கவி பாடும் ஆற்றல் பெற்று விளங்குவதை உணர்ந்த அம்மான், அன்று முதலே இவரைத் தம்மிடம் இருத்தி முறையாகத் தமிழ்ப்பாடம் கற்பிக்கலானுர். இராகவனுரும் தமிழ்ப் புலமை பெறவேண்டும் என்னும் பேராவல் கொண்டு பாடங்கேட்டனர்; இரண்டாண்டுகளுக்குள் இலக்கிய இலக்கண நூல்களைப் படித்துணர்ந்தார்; தமக்குக் கிடைக்காத பழைய தமிழ் நூல்கள் சிலவற்றை எழுதியும் படித்தார். இயல்பாகவே நுண்ணறிவு சிறக்கப்பெற்ற இவ் விளம் புலவர் தாம் படித்ததைப் பிறர்க்கு எடுத்துக் கூறுவதிலும் நயம்படப் பேசுவதிலும் வல்லவரானுர்.

## 2. புலமையும் பாராட்டும்

### சேதுபதி உயர்நிலைப் பள்ளி

இராமநாதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு சேது நாட்டை ஆண்டுவந்த சேதுபதிகள் தமது நாட்டில் பல பள்ளிகளைத் தோற்றுவித்தனர். அவற்றுள் இராமநாதபுரத்தில் உள்ள இராஜா உயர்நிலைப் பள்ளியும், மதுரையில் உள்ள சேதுபதி உயர்நிலைப் பள்ளியும் குறிப்பிடத்தக்கவை. சேதுபதி உயர்நிலைப் பள்ளி மதுரை மாநகரத்து மக்களுக்குப் பல ஆண்டுகளாகக் கல்வி புகட்டிவரும் நிலையமாகும்.

### உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர்

மதுரையிலுள்ள இவ்வுயர்நிலைப்பள்ளி நிறுவப் பட்ட சில ஆண்டுகளில், நம் இராகவனாரே அப் பள்ளியில் முதல் தமிழாசிரியரானார். அப்போது இவர்க்கு வயது பதினெட்டு. இவர் ஊற்றுமலை ஜமீந்தாரால் பாராட்டப் பெற்றதை முன்னரே அறிந்திருந்த மதுரைப் பெருமக்களும், பள்ளி ஆசிரியர்களும் இவரது கல்வித்திறனையும், கற்பிக்கும் ஆற்றலையும் கண்டு நன்கு மதிக்கலாயினர். இராகவனாரும் மாணவர் தகுதிக்கேற்பப் பாடங் கற்பிப்பதிலும், அவர்களோடு நெருங்கிப் பழகுவதிலும் ஊக்கம் மிக்கவராயிருந்தார்; மாணவர்களுக்குத் தம் சொற்பொழிவுகள் மூலமும் தமிழார்வத்தைத் தூண்டினர்.

### திருமணம்

இராகவனார் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் இரண்டு ஆண்டுகளே பணியாற்றினர். அதன்

பின்னர் இவர்க்குத் திருமணம் நடைபெற்றது. இவரது வாழ்க்கையைச் சிறப்பிக்கவந்த மாதரசியார் **ஜானகி அம்மாள்** என்பவர். அவ்வம்மையார் கணவர் கருத்தறிந்து கடனாற்றும் இயல்பினர். அதனால் அவ்வம்மையாருடன் நடத்திய இல் வாழ்க்கை, இராகவனார்க்கு இன்பமும் சிறப்பும் உடையதாயிற்று.

## திரிசிரபுரத்தில் தமிழாசிரியர்

திருமணத்திற்குப் பின்னர், இராகவனார் திரிசிரபுரத்தில் உள்ள தேசீய உயர்நிலைப்பள்ளி* தமிழாசிரியர் பதவி ஏற்றார். இராகவனார் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் பல்லோர் பாராட்டுக்கு உரிமை பெற்றிருந்தது போலவே, இப்பள்ளியிலும் அறிஞர் பலர் பாராட்டுப் பெற்றார். ஆங்கில மொழியே உயர்ந்தது என்னும் கருத்தில் ஆழ்ந் திருந்த மாணவர் பலர், இவருடைய சொற்பொழிவு களைக் கேட்டுத் தம் தாய் மொழியின் பெருமையை அறிந்து மதிக்கலாயினர். இவ்வாறே இவர் பல இடங்களில் செய்த சொற்பொழிவுகளால் நகரப் பொதுமக்களும் நற்றமிழில் நாட்டங்கொண்டனர். இந்திய அரசாங்கத்தின் கல்வெட்டுப் பரிசோதகராகச் சிறந்து விளங்கிய **து. அ. கோபிநாத ராயர்** முதலியோர் அக்காலத்தில் இவரிடம் மாணவராகப் பயின்றவராவர். அம்மாணவர்கள் தமிழார்வம் மிக்கவர்களாகி, நம் இராகவனாரிடம் வைத்திருந்த அன்பிற்கும், மதிப்பிற்கும் அளவில்லை.

---

* இப்பள்ளியை முதலில் தாபித்தவர் **ஸ்ரீ சேஷ ஐயங்கார்** என்ற பெரியார். அக்காலத்தில் இது National High School என்று பெயர் பெற்றது.

**பூண்டி-அரங்கநாத முதலியார்**

தொண்டை நாட்டைச் சார்ந்த **திருவுள்ளூர்** என்ற வைணவத் தலத்திற்கருகில் '**பூண்டி**' என்னும் சிற்றூர் உள்ளது. அவ்வூர் சமய உணர்ச்சியிலும், அறிவுத்துறைகளிலும் சிறந்து விளங்கிய பெருமக்களின் தோற்றத்தால் புகழ்பெற்றது. இவ்வூரில் வாழ்ந்த வேளாளர் மரபில் தோன்றியவரே, சென்ற நூற்றாண்டில் சென்னை அரசினர் கல்லூரியில் கணிதப் பேராசிரியராய் விளங்கிய **அரங்கநாத முதலியார்** என்பவர். இவர் கணிதம், ஆங்கிலம், தமிழ், வரலாறு, தத்துவம் முதலிய பல துறைகளிலும் தனித்தனியே சிறப்புற்று விளங்கினார்; அரசாங்கத்தாராலும் பெரிதும் நன்கு மதிக்கப் பெற்றுச் சென்னை ஷெரிப் (Sheriff) முதலிய பெரும் பதவிகளை ஏற்றுப் புகழ் பெற்றார்.

**கச்சிக் கலம்பகம்**

இவர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக இருந்த திருமணம் செல்வ கேசவராய முதலியாரின் தந்தை திருமணம் சுப்பராய முதலியார் என்பவரிடமும் தமிழ் நூல்களைக் கற்றுப் பெரும் புலமை எய்தினார்; அப்புலமையின் பயனாய்க் காஞ்சியில் கோயில்கொண்டுள்ள ஏகாம்பரநாதர்மீது கலம்பகம் ஒன்றைப் பாடினார். அதுவே **கச்சிக் கலம்பகம்** என்பது. அந் நூல் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் முதலிய புலவர் பெருமக்களால் நன்கு பாராட்டப் பெற்றது.

**நல்லார் இணக்கம்**

திரிசிரபுரம் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக இருந்த இராகவனார், பூண்டி அரங்கநாத முதலியாருடைய நன்மதிப்பைப் பெற விரும்பினர். அதனை அறிந்த நண்பர் சிலர், பெரிய பதவியிலுள்ள முதலியாருடன் அளவளாவுதலும், அவர் நன்மதிப்பைப் பெறுதலும் மிகவும் அருமையே என்று கூறினர். நம் இராகவனார் அவ்வுரைகளைப் பொருட்படுத்தாது தாமே நேரிற் சென்று, தடையேதும் இல்லாமல் முதலியாரவர்களை அவர்தம் மாளிகையில் கண்டு அளவளாவினர். தமிழ்ப் புலவர்களிடத்து முதலியாருக்கிருந்த அன்பின் திறத்தை, அருமையறியாத பிறர் எங்ஙனம் அறிவர்? இளைஞராயுள்ள இராகவனாருடைய நுண்ணறிவு, பேச்சுத் திறன், புலமை முதலியவைகளை, அளவளாவி வந்த சில விநாடிகளில் முதலியாரவர்கள் கண்டு மிகவும் உவந்தார்கள். இவற்றுடன் இராகவனாரது அழகிய முகவசீகரமும், நாவன்மையும் முதலியார் உள்ளத்தைப் பெரிதும் பிணித்தன. அப்போது நம் இராகவனார் தாம் பாடியிருந்த **திருவரங்கத்து வெண்பா மாலையிற்** சில பாடல்களைக் கூறி முதலியாரவர்களைப் பெரிதும் மகிழ்வித்தனர். முதலியாரவர்களும் தம் கச்சிக் கலம்பகத்தில் உள்ள அரிய பாடல்களை எடுத்துரைத்ததோடு, அக் கலம்பகத்தின் காப்புச் செய்யுளான,

> "தங்கச் சிலையேடுந் தந்தவெழுத் தாணியுங்கொள்
> துங்கக் கரிமுகத்துத் தூயவனென்—சங்கையொழித்
> தேடெழுத் தாணி யெடுத்தறியேன் இந்நூலைப்
> பாடவளிப் பான்நற் பதம்."

என்ற பாடலையும் கூறினர்.

அது கேட்ட இராகவனார் அச்செய்யுளில் அமைந்த சொல் நயம் பொருள் நயங்களைப் பெரிதும் பாராட்டினர். அந்நிலையில் முதலியார், "நூன் முகப்பில் யான் அமைத்த காப்பின் முதல் மங்கலச் சொல் பொருத்தமானதா?" என்று இவ்விளம் புலவரை உசாவ, உடனே நம் இராகவனார், "காப்புக்குத் தங்கம் இன்றியமை யாததும், அழகு தருவதுமாகும் அல்லவா? இதை விடச் சிறந்த மங்கலச் சொல் வேறு யாதுளது?" என்று கூறினர். இந்த வார்த்தைகளைக் கேட்டதும் முதலியாரவர்கள் வியந்து, மலர்ந்த முகத்துடன், "இந்த அருமை வார்த்தைகளை யான் ஒருபோதும் மறவேன்," என்று சொல்லிக் கொண்டாடினர். பின்பு முதலியார் நம் இராகவனாரிடம் தமக்குள்ள பெருமதிப்பைக் காட்டி 'நற்சான்றிதழ்' ஒன் றெழுதி, இவர் தங்கியிருந்த சென்னை விலாசத் திற்கே அனுப்பிவைக்கலாயினர். முன்பு இவர்க்கு ஊக்கமளியாதிருந்த நண்பர்கள், முதலியார் உதவிய நற்சான்றிதழைக் கண்டதும் நம் இராகவ னாரது அருமை பெருமைகளை உணர்ந்து கொண் டாடினர். இந்நிகழ்ச்சி 1891-ஆம் ஆண்டில் நிகழ்ந்ததாகும்.

## குடந்தையில் ஐயரவர்களது நட்பு

சங்கத் தொன்னூல்கள் பலவற்றையும், சிந்தா மணி போன்ற பெரிய காப்பியங்களையும், அரும் பாடுபட்டுப் பதிப்பித்து அழியாப் புகழ் பெற்ற டாக்டர் உ. வே. சாமிநாதையர் அக்காலத்தில் குடந்தை அரசினர் கல்லூரியில் தமிழாசிரியராய்ப் பணியாற்றிவந்தார். அவர் திரிசிரபுரம்—மகா

வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் மாணவர் என்பது யாவரும் அறிந்ததே. இராகவையங்கார், ஐயரவர்களைப் பார்த்து மகிழும் அவாவுடன் குடந்தைக்குச் சென்றார். அங்கு ஐயரவர்கள் இல்லத்தில் அவர்களைக் கண்டு அளவளாவி வந்தபோது, இவர் நுண்ணறிவு, கட்டுரை வன்மை, புலமைத்திறம் இவற்றை நன்கறியலாயினர். பின்பு ஐயரவர்கள் ஐயங்காரைக் கல்லூரிக்கே வந்து தம்மைச் சந்திக்குமாறு அழைத்தனர். அவர்கள் விருப்பப்படி இவர் கல்லூரியில் பார்க்கச் சென்றபோது திருவேங்கடக் கலம்பகம் ஐயரவர்களால் கற்பிக்கப்பட்டுவந்தது. ஐயரவர்கள் ஐயங்காரைக் கல்லூரியில் சந்தித்ததும், தம் வகுப்பிற்கே இவரை அழைத்துச் சென்றார் ; மாணவர்களுக்கு ஐயங்காரை அறிமுகஞ் செய்வித்ததோடு, அக்கலம்பகத்திலுள்ள சில செய்யுட்களை வகுப்பில் பொருள் விரித்துரைக்கும்படியும் கேட்டுக் கொண்டனர். அப்போது அறிதற்கரிய பொருள் அமைந்த பாடல்கள் சில, ஐயங்காரவர்களால் உரை கூறும்படி நேர்ந்தது. இராகவனார் அவற்றைத் தம் நுண்ணறிவால் எளிதிற் கண்டு, பாடற் பொருளைப் பற்பல எடுத்துக்காட்டுக்களுடன் அழகாக விரித்து மாணவர்க்கு விளக்கினர். இவற்றைக் கேட்டுணர்ந்த ஐயரவர்கள், இளைஞராயுள்ள இவரது அரும் புலமையை மாணவர்முன் பாராட்டிப் பெரிதும் மகிழ்ந்தார். அது முதலாக ஐயரவர்கட்கும், ஐயங்காருக்கும் இருந்த நெருங்கிய நட்பை யாவரும் நன்கறிவர்.

## 3. சேது சம்ஸ்தான மகாவித்துவான்

**பாஸ்கர சேதுபதி**

சேதுபதிகள் தம் தாய்மொழியாகிய தமிழை நன்கு வளர்த்துவந்த வள்ளல்கள்; தம் அவையை நாடி வந்த வடமொழிப் புலவர், தென்மொழிப் புலவர், இசைப் புலவர் முதலியவர்க்கு வரிசை அறிந்து பெரும்பொருள் வழங்கி அழியாப் புகழ் பெற்றவர். இங்ஙனம் வழி வழியாகக் கலை வளர்த்து வந்த சேதுபதிகள் சைவ சமய வளர்ச்சியிலும் ஊக்கங் காட்டிவந்தனர்; பிற சமயங்களிலும் பொது நோக்கங் கொண்டிருந்தனர். இத்தகைய பரந்த நோக்கமுடைய சேதுபதிகள் மரபினருள் **பாஸ்கர சேதுபதி** குறிப்பிடத் தக்கவராவர். அவர் அருங்கலை விநோதர்; ஆங்கிலப் புலமையும், நாவன்மையும் பெரிதும் படைத்தவர்; தம்மை நாடி வந்த பெரும் புலவர்களை ஆதரித்துப் பிற் காலத்துப் பாரி வள்ளல்போல் தம் கொடையால் வாழ்வித்தவர்.

**சம்ஸ்தான வித்துவான்**

பாஸ்கர சேதுபதி பட்டத்திற்கு வந்தது முதல் ஆண்டு தோறும் இராமநாதபுரத்தில் நடக்கும் விழாக்களில் நவராத்திரிப் பெருவிழா மிக்க சிறப் புடையதாக இருந்தது. அவ் விழாவிற்கு நம் தமிழ கத்துப் பல பகுதிகளிலிருந்தும் முத்தமிழ்த் துறை யின் முறை போகிய உத்தமப் புலவர்களும், வட மொழி மாணவரும், திரளாக வந்து, இராமநாத புரத்தில் கூடுவதும் அரசரால் தத்தம் தகுதிக் கேற்பப் பற்பல வரிசைகள் பெற்றுச் செல்வதும்

வழக்கம். அக்காலத்தில் சம்ஸ்தான வித்துவாஞக விளங்கியவர் சதாவதானம் முத்துசுவாமி ஐயங்கார். நவராத்திரி விழாக்களில் இளம் புலவர் பலர்க்குச் சோதனைகள் மூலம் திறமறிந்து பரிசுகள் வழங்குவதுண்டு. நம் இராகவஞரும் நவராத்திரிப் பெருவிழா ஒன்றில் சம்ஸ்தான வித்துவாஞயிருந்த தம் அம்மானுடன் தமிழறிஞர் கூட்டத்திற் கலந்துகொண்டார். அப்போது பல வித்துவான்கள் அரசர்மேல் பாமாலை சூட்டியவாறு, நம் இராகவஞரும் சேது வேந்தர்மீது கவிகள் பாடிப் பொருள் விளக்கமும் செய்து அரசரையும், அவையோரையும் உவப்பித்தனர்.

புலவர் பலர்க்கும் பொருளும் பொன்ஞடையும் சால்வைகளும் பரிசாக வழங்கப்பட்டன. அம்முறையில் இராகவஞரும் அரசரால் பரிசுபெற நேர்ந்தபோது, அறிவொளி பெற்றுத் தம் முன் நின்ற நம் புலவரை மன்னர் கண்டதும், அவரைப் பற்றி அவையில் உசாவலாயினர். சேது வேந்தர் நண்பரும், பெரிய வழக்கறிஞருமான திருநெல்வேலி கிருஷ்ணசாமி ஐயர், ஆஸ்தான வித்துவாஞன ஐயங்காரவர்களின் மருகர் இவர் என்றும், அரங்கநாத முதலியாரால் பாராட்டப் பெற்றவரென்றும், மதிநுட்பம் நூலோடுடையவர் என்றும் கூறி, அரங்கநாத முதலியார் அளித்த நற்சான்றிதழைப் புலவர் கையினின்றும் பெற்று, அதனை அரசர் காணக் கொடுத்தனர்.* அரசர் அரங்கநாத முதலியாரின் அருமை பெருமைகளை இளமை முதலே நன்கறிவர் ஆதலின், அவர் அவ்விதழை

* ஐயரவர்களை இராகவஞர் திருநெல்வேலியில் கண்டு அளவளாவிப் பழகியவர் என்பது முன்னரே கூறப்பட்டது.

மகிழ்வுடன் படித்தார். அவர் அதனைப் படித்து முடித்த நிலையில், சேதுபதியின் குல தெய்வமாய் அரண்மனையிற் கோயில் கொண்டு, நவராத்திரி விழாவிற்கு அதிதேவதையாகவுள்ள **இராஜ ராஜேச்வரி** தேவியின் கோயிற் பெருமணியோசை கணீரென எழுந்தது. அவ்விதழைப் படித்து முடிந்ததும், கோயில் மணியோசை எழுந்ததும் அரசர்க்கு உவப்பும் வியப்பும் விளைவித்தன. உடனே மன்னர் மலர்ந்த முகத்துடன் இவரைத் தம்மிடம் ஆஸ்தான வித்துவானாக இருக்கப் பணித்தனர். அன்று முதலே இவர் **சேது சம்ஸ்தான வித்துவான்** என்ற சிறப்புப் பெயருடன், அம் மன்னர் அவையை அலங்கரித்து விளங்கினர்.

முதுமைப் பருவத்தால் தளர்வுற்றிருந்த இவர் தம் அம்மானுக்கு இச்செயல் அளவிலா மகிழ்ச்சி அளித்ததென்று சொல்லவும் வேண்டுமோ? சதாவதானம் முத்துசுவாமி ஐயங்கார் கி. பி. 1894-ஆம் ஆண்டில் காலமானார். அதுமுதல் நம் இராகவனார் மன்னர் அவையில் தலைமைப் புலவராக விளங்கினர்.

**புறநாட்டுப் புலவர் பாராட்டு**

சேது வேந்தரால் விசேட காலங்களில் கூட்டப்படும் புலவரவைகளிளெல்லாம், நம் இராகவனாரால் தமிழின் அருமை பெருமைகளைப் பற்றியும், சேக்கிழார், கம்பர் போன்ற மகா கவிகள் இயற்றிய காப்பியங்களின் சிறப்புக்கள் பற்றியும் சொற்பொழிவுகள் அடிக்கடி நிகழ்ந்துவரலாயின. அக்காலத்து அரசரை நாடி வந்திருந்த புற நாட்டுப் புலவர்களுள், பெருஞ் சிறப்பு வாய்ந்த யாழ்ப்

பாணம் சபாபதி நாவலர், சிவ சம்புப் புலவர் போன்ருரும்; இவர் புலமைத் திறத்தோடு கூடிய சொல்வன்மையை உணர்ந்து பேருவப் படைந்து புகழ்மாலை சூட்டியதுண்டு.

**பூச்சி-ஸ்ரீநிவாச ஐயங்கார்**

நமது இராகவனூர் தமிழ்த் துறையில் தலைமைப் பதவியை ஏற்று விளங்கியது போலவே, இசைத் துறையில் சிறந்து, ஆஸ்தான வித்துவானுகத் திகழ்ந்தவர் பூச்சி—ஸ்ரீநிவாச ஐங்கார் என்பார். இவர் சாரீர இனிமையும், இசையறிவும் நிரம்பி யவர்; இசை வாணர் யாவராலும் போற்றப் படுபவர். நவராத்திரி விழாவொன்றில் சேதுபதி யின் பேரவையில், ஒரு முறை அவரது இசை யரங்கு நிகழ்ந்தது. அவர் தம் இன்னிசையால் அவையிலுள்ளவர் யாவரையும் இன்ப வாரியில் திளைக்கச் செய்தனர். மறுநாள் நம் இராகவனூரால் இராமாயணம் பற்றிச் சொற்பொழிவு ஒன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நம் இராகவனூர் கம்பர் கவி நயங்கள் பலவற்றை யாவரும் வியக்கும்படி, செவ்விய மதுரஞ் சேர்ந்த செந்தமிழ் நடையில் கடல் மடை திறந்தாற் போல விளக்கினர். அதனைக் கேட்ட அறிஞர் பலரும், "நேற்றும் இன்றும் யாங்கள் கேட்டு மகிழ்ந்த இய லிசை அமுதங்கள், சிந்தைக்கும், செவிக்கும் இனி யனவாய் என்றைக்கும் மறவாதபடி எங்களைப் பரவசப் படுத்தின", என்று பாராட்டினர். இவ்விரு பெரும் புலவர்களும் இராமநாதபுரத்திற்கே சிறந்த இரண்டு இரத்தினங்களாக யாவராலும் போற்றப் படலாயினர். இராமநாதபுரத்தில் உள்ள ஆங்கிலப்

பள்ளியில் இளமை முதலே இவ்விருவரும் ஒருசாலை மாணவர்களாகக் கற்றதோடு, ஒரு தெருப் பெரு மக்களாகவும் வாழ்ந்தனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

**பல்லக்கு மரியாதை**

பாஸ்கர சேதுபதி தம் ஆஸ்தானப் புலவராகிய இராகவனாரிடம் வைத்திருந்த பேரன்பிற்கும், நன் மதிப்பிற்கும் எல்லையாக, அம் மன்னர் இவர்க் களித்த பெரும் பரிசு **தந்தப் பல்லக்காகும்.** புலவர் பெரு மக்களுக்குப் பண்டைக்கால மன்னர் காட்டிவந்த மரியாதைகளுள் சிறந்தது இது என்பதை யாவரும் அறிவர். அம் முறையில் நவராத் திரி போன்ற அரண்மனை விழாக் காலங்களில் தம் அவைக்குச் சிவிகை ஊர்ந்து வந்து சிறப்பிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இஃது அரசரால் இவர்க்கு அளிக்கப்பட்டதாகும். இத்தகைய வள்ள லாரையும், அதற்கேற்ற தகுதி உடையாரையும் இக்காலத்துக் காண்பதும் அரிதன்றோ ?

**சுவாமி விவேகானந்தர் தரிசனம்**

பாஸ்கர சேதுப்பதி தாம் வெளியூர்களுக்கு விஜயம் செய்யும் போதெல்லாம் நம் இராகவனாரை யும் உடன் அழைத்துச் செல்வது வழக்கம். அவ் வாறே ஒரு சமயம் நம் இராகவர் சேது வேந்தருடன் சென்னை சென்றிருந்தார். அப்போது அந்நகர்க் கண் விவேகானந்த அடிகளும் விஜயம் செய்திருந் தனர். இந்து மதத்தின் உண்மைகளை எல்லாம் உள்ளங்கை நெல்லிக் கனி போலத் தெள்ளிதின் உணர்த்தும் அடிகளின் சொல்வன்மையில் ஈடு

பட்ட மன்னர், சில மாதங்கள் அடிகளுடன் நெருங்கிப் பழகலானுர். அப்போது மன்னருடன் நம் இராகவனுரும் அருகிருந்து அடிகளின் நல்லுரைகளைக் கேட்டு மகிழ்வதுண்டு. அடிகளுக்கு ஆருயிர் நண்பராய் அந்நகரில் அப்போதிருந்தவர், பச்சையப்பன் கலாசாலைத் தலைமை ஆசிரியர் **அழகிய சிங்கப்பெருமாளையங்கார்** என்பவர். இவ்வையங்கார் சேது வேந்தருடன் கற்ற ஒரு சாலை மாணுக்கராவர். அப்போது அடிகளும், அரசரும் அருந்தமிழ்ப் புலவரான நம் இராகவனுரும் அடிக்கடி வேதாந்தப் பொருள் பற்றிப் பெரிய சர்ச்சைகள் செய்வதுண்டு. இவற்றை யெல்லாம் கண்டு களித்த அழகிய சிங்கப் பெருமாளையங்கார் நம் இராகவனுரிடம் கொண்டிருந்த மதிப்பு அளவற்றதாகும்.

அமெரிக்காவில் உள்ள சிக்காகோ நகரில் நடைபெற்ற உலக சமயப் பெரியார் மகாநாட்டிற்கு விவேகானந்த அடிகள் செல்லப் பெரும்பொருள் கொடுத்துதவியவர் இச்சேது வேந்தர் என்பது உலகறிந்ததே. அடிகள் அங்கு இந்து மதத்தின் சிறப்பினை உலகறியச் செய்து இலங்கை வழியாகத் திரும்பி வந்தபோது, அவரை இந்தியாவிலே முதலில் வரவேற்ற மன்னர் இச்சேது வேந்தரே ஆவர். அப்போது அடிகளுக்கு இராமநாதபுரத்தில் அரசர் நடத்திய வரவேற்புவைபவம் தமிழ் நாடெல்லாம் கொண்டாடும் வண்ணமிருந்தது. அடிகள் தாம் அரசர்பாற் கொண்டுள்ள நன்றியறிதலை யாவரும் உவக்க எடுத்துரைத்தனர். இவ்வைபவத்தில் அரசருடன் நம் இராகவனுர் கலந்து கொண்டு

சிறப்பித்ததோடு, அடிகளின் பாராட்டுக்கும் உரியவராயினர்.

**பாஸ்கரரின் பெருமதிப்பு**

பேராசிரியர் அரங்காச்சாரியாரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட **ஸ்ரீ பாஷ்யம்** என்ற உயரிய நூலை இச்சேது வேந்தர் நம் இராகவனூர்க்கு அளித்தார். அந்நூலின் முன் இதழில் அவ்வேந்தர் ஆங்கிலத்தில் வரைந்த குறிப்புப் பின் வருமாறு: "என் உள்ளத்திற்குரிய நண்பரும், எனது ஆன்மாவுக்குரிய தோழரும், கண்ணன் வழிபாட்டில் என் சகோதரரும், உண்மை காண்பதில் என் மதிப்புக்குரிய நண்பரும், சம்ஸ்தானத் தமிழ் வித்வத் சிகாமணியுமாகிய பிரம்ம ஸ்ரீ. உபய வேதாந்த பிரவர்த்தகர் ஸ்ரீ. இராகவையங்கார் சுவாமிகளுக்கு அன்புடனும், மதிப்புடனும் இந்நூல் அளிக்கப்பட்டது." மற்றோர் சமயம், 'கந்த புராணச் சுருக்கம்' என்ற நூலில்,

> " நாற்கலையும் தேர்புலவர் நாணுவரே நீணிலத்தில்
> பாற்கரனைச் சாருமொரு ராகவனைப் பார்த்தலுமே."

என்றெழுதி, அந்நூலை அன்புடன் அளித்தனர். இங்ஙனம் அரசர் அளித்த பல நூல்களிலும், அவரால் வரையப்பட்ட வாசகங்கள் பல. இவை யாவும் மகா வித்துவானிடம் அவ்வேந்தர்பிரான் கொண்டிருந்த பேரன்பையும், பெருமதிப்பையும் நன்கு விளக்குவன அல்லவா ?

**மதுரைத் தமிழ்ச் சங்கம்**

1901-ஆம் ஆண்டு பாண்டித்துரைத்தேவர் நன்முயற்சியாலும், பாஸ்கர சேதுபதியின் ஒத்துழைப்பு நன்கொடைகளாலும் **மதுரையில் தமிழ்ச்**

**சங்கம்** தோற்றுவிக்கப்பட்டது முன்னரே ஈரிடங்களில் கூறப்பட்டதன்றோ? அதனில் ஏற்படுத்தப்பட்ட ஆராய்ச்சிப் பகுதிக்குத் தலைவராக, பாண்டித் துரைத்தேவர் விருப்பின்படி, பாஸ்கர சேதுபதி தம் ஆஸ்தான வித்துவானான இராகவனாரையே தமிழ்ச் சங்கத்தில் பணியாற்ற உதவினர். அப்பணியை நம் இராகவனார் உவப்புடன் ஏற்றதோடு, சங்கத்து வாயிலாக 1903-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்ற **செந்தமிழ்** என்னும் திங்கள் தாளுக்கும் முதல் ஆசிரியராயினர். செந்தமிழாசிரியராயிருந்த காலத்து இவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை வியந்து பாராட்டாத தமிழறிஞர் இல்லை என்றே சொல்லலாம். அக்காலத்தில் இவர் மதுரையில் வாழ்ந்தனராயினும், அடிக்கடி இராமநாதபுரம் சென்று சேதுபதி அவையையும் சிறப்பித்துவந்தனர்.

### வடநாட்டு யாத்திரை

தம்மைப் பேரன்புடன் பாதுகாத்து வளர்த்த அன்னையார் அயோத்தி, காசி, பிரயாகை முதலிய புண்ணியத்தலங்களைப் பார்க்க விரும்பினர் என்பதை நம் இராகவனார் பாஸ்கர சேதுபதியிடம் தெரிவித்தார். உடனே அவ்வேந்தரால் இவர்க்கு வேண்டிய பொருளுதவி அளிக்கப்பட்டது. ஐயங்காரும் அவ்வுதவி பெற்றுத் தம் அன்னையாரது வடநாட்டு யாத்திரையைக் கவலையின்றி முடித்து மீண்டார்.

### பாஸ்கரர் பரிசுகள்

நம் இராகவனாருக்கு பாஸ்கரர் அளித்த பரிசுகள் மிகப்பல. அவற்றுள் அரிய வேலைப்பாடமைந்த

பீரோ ஒன்று கண்ணைக் கவரத் தக்கது. அஃது இராமநாதபுரத்தில் இவர்தம் இல்லத்தில் இன்றும் "சரஸ்வதி பீடமாக" வனப்புடன் திகழ்கின்றது. சேது வேந்தர்கள் தம் திருப்பெயர் எழுதி அளித்த பல நூல்களும் பிற தொன்னூல்களும் அப்பீரோவை அணி செய்கின்றன. பாஸ்கரர் நம் இராகவனுர்க்கு அவ்வப்போது நல்கிய விலையுயர்ந்த பொன்னுடைகளும் சால்வைகளும் பிற அரும் பொருள்களும் எண்ணிலடங்கா.

## பாஸ்கரர் மறைவு

இங்ஙனம் தம்மை அடைந்தார்க்கெல்லாம் கற்பக தருவாய் விளங்கிய பாஸ்கரர் 1903-ஆம் ஆண்டு, புலவர் நிலைகலங்கத் தம் பருவுடலை நீத்தார். அதியமான் இறந்தபோது ஔவையார் துயருற்றதுபோலவும், பாரிவேள் மறைந்தபோது கபிலர் வாட்டமுற்றது போலவும், பாஸ்கரர் மறைவில் ஐயங்கார் அடைந்த மனவேதனை சொல்லுந்தரத்ததன்று. அவ்வமயம், அவர் மனம் வருந்திப் பாடிய பாக்கள் பல. அவற்றுள் ஒன்றைக் கீழே காண்க :

> "பாட்டும் உரையும் பயிலாப் பதடிகள்தம்
> ஓட்டைச் செவியுள் உகுப்பேனோ—நீட்டுகொடைச்
> செங்கையாய் பாற்கரனே செந்தமிழ்ப்பா வின்சுவையை
> எங்கையா சொல்வேன் இனி."

## தேவகோட்டை வாழ்க்கை

தமிழ் வள்ளலான பாஸ்கரர் மறைவுக்குப்பின் நம் இராகவனுர் அரசர் பிரிவாலுற்ற துயராலும் தம் உடல் நோயாலும் செந்தமிழ் என்னும் திங்கள் தாளின் ஆசிரியத் தலைமையை விட்டு விலகல்

நேர்ந்தது. பின்பு, உடல் நலம் பெற்ற சிறிது காலத்திற்கெல்லாம் தேவகோட்டையில் உள்ள அறிஞர்களும் கொடையாளர்களுமான நகர வணிக மக்கள் விருப்பிற் கிசைந்து, அங்கே சென்று, இராகவனுர் தம் வாழ்க்கையை நடத்தினுர். இவரை ஆதரித்த வணிக நன்மக்களுள் பெரிய மைனர் என்ற மெ. அரு. **இராமநாதன் செட்டியார்** தலை சிறந்தவராவர். நம் பெரும்புலவர் அவர்க்குத் தமிழாசிரியராயிருந்து அவரது தமிழறிவை வளப் படுத்தினர். கொடையில் சிறந்த செட்டியாரவர் களுக்கு நம் இராகவனுர் உசாத்துணையாக இருந் தும் வந்தார். அக்காலத்து, பேரறிவும் பெருங் கொடையும் ஒருங்கே அமைந்த செட்டியாரவர் களின் ஆதரவை நாடி வந்த தமிழ்ப் புலவரும், வட மொழிவாணரும் பலருண்டு. அவர்க்கெல்லாம் தக்கபடி வரிசைகள் வழங்கும்படி செய்வித்துதவி யவர் நம் பெரும்புலவரே. இவ்வாறே இவர் அந் நகரப் பிரமுகர்களான செல்வ வணிகர் பலர்க்கும் கல்வித்துறையோடு, இலெளகிக துறைகளிலும் உற்ற துணையாய் நின்று உதவிவந்தார் என்பது, செட்டிநாடெல்லாம் நன்கறிந்ததே. அக்காலத்தில் இவர் தேவகோட்டையில் அடைந்த பேறுகளுள் ஆண்மகப்பேறு சிறப்புடையதாகும்.*

## இராஜராஜேசுவர சேதுபதி

இம்மன்னர் பாஸ்கர சேதுபதியின் தவ மைந்தர்; கற்றவர்க்கெல்லாம் நற்றுணையானவர்; புலவர் பாடும் புகழாளர். இம்மன்னர் இளமையில்

* இம்மைந்தரே, இராமநாதபுரம் உயர்நிலைப் பள்ளியில் இப்போது தமிழாசிரியராயுள்ள **வித்துவான் இராமாநுஜை யங்கார்** ஆவர்.

நம் இராகவனூர் பால் தமிழ்க்கல்வி பயின்று கவி பாடும் ஆற்றலும் பெற்றிருந்தார். தேவகோட்டை யில் வாழ்ந்த தம் ஆசிரியராகிய நம் இராகவனூரை, இவ்வரசர் தாம் பட்டம் எய்துமுன்பே இராமநாத புரத்திற்கே வரவழைத்துக்கொண்டு தம்மிடமிருக் கச் செய்தனர். இவ்வேந்தர் 1910-ஆம் ஆண்டு சேது சமஸ்தானத் தலைமையை ஏற்ருர். இவர் நம் இராகவனூர்க்கு எழுதிய கடிதங்களில், "அடி யேன் இராஜ ராஜேசுவரன்" என்றும், "தங்கள் மாணுக்கன் இராஜ ராஜேசுவரன்" என்றும், வரைந்திருத்தலைக்கொண்டு, இவர் தம் ஆசிரியர் பால் வைத்திருந்த பெருமதிப்பை எளிதில் அறிய லாம். இவர் 1916-ஆம் ஆண்டு நாட் குறிப்பு (Dairy) ஒன்றை இராகவனூர்க்கு வழங்கினூர். அதன் முன் பக்கத்தில் பின்வரும் வெண்பா வொன்று அவரால் எழுதப்பட்டுள்ளது:

"வரும்வருடம் சென்ற வருட மதினும்
அரிய நலங்கள் அளிக்க—உரிமையுடன்
மந்தமிலாச் செந்தமிழ்தேர் மகாவித்து வானுக்குத்
தந்ததிந் தப்புத் தகம்."

இம்மன்னர்க்கு நம் இராகவர், அறிவுத்துறை களிலும், அரசியல் துறைகளிலும் ஓரமைச்சரைப் போல உடனிருந்து, அவரது பெருமதிப்புக்கும், ஆதரவுக்கும் உரியவராயிருந்தார். தம் தந்தை யாரைப் போலவே, நவராத்திரி முதலிய பெரு விழாக் காலங்களில், வடமொழியிலும் தென்மொழி யிலும் இசையிலும் வல்ல புலவர் பெருமக்களை வர வழைத்துப் பரிசுகள் உதவிச் சிறப்பிப்பது இவ் வேந்தரின் வழக்கமாகும். ஒருகால், மகா மகோ பாத்தியாய டாக்டர். உ. வே. சாமிநாதையர் அவர்

களைச் சிறப்பிக்க எண்ணிய இச்சேது வேந்தர், ஐயரவர்களை அரசாங்க அனுமதி பெற்று இராமநாதபுரத்திற்கு வரவழைத்து, நவராத்திரி விழாவில் கலைமகள் பூசையன்று, அவர்க்களித்த சீரும் சிறப்பும் யாவரும் கொண்டாடும்படி இருந்தன. இவ்வாறு ஐயரவர்களை அழைத்துச் சிறப்பித்தற்கு மூலகாரணமா யிருந்தவர் நம் மகா வித்துவானே ஆவர். அப்போது தமக்கு உரிமையாயிருந்த அரண்மனை முதல் மரியாதைகளை எல்லாம் ஐயரவர்களுக்கே அளிக்கும்படி செய்வித்து, தாமும் அவர்களைப் பெரிதும் சிறப்பித்தார் நம் இராகவனார். இவ்வாறே வடமொழிவாணர் பலரை அரசர் வருவித்தற்கும், அவர்கள் பெரும்பரிசு பெறுவதற்கும் காரணமாயிருந்தவர் நம் மகாவித்துவானே. இம்மன்னர் இவ்வுலக வாழ்வைத் துறந்த போது, நம் இராகவனார் பாடிய இரங்கற் பாக்கள் யாவர் உள்ளத்தையும் உருக்கவல்லன.

## ஸ்ரீ சண்முக ராஜேசுவர சேதுபதி

இவ்வேந்தர் இராஜ ராஜேசுவர சேதுபதியின் தவப்புதல்வர்; இன்று இராமநாதபுரம் அரசராக விளங்குபவர். இவ்வரசர் தம் தந்தையாரைப் போலவே இன்றளவும் மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவராக இருந்து வருகின்றார். இவர் இன்முகம், இன்சொற்களோடு ஈகையும் சிறக்க வாய்ந்தவர்; வரிசையறிந்து புலவர்கட்கு வழங்கிவருபவர். இம்மன்னரும் மூதாதைகள் போல நம் இராகவனாரிடம் அன்பும் மதிப்பும் வைத்து ஆதரித்தார்.

## அண்ணுமலை நகரில் பதவி ஏற்றது

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் 1935-ஆம் ஆண்டு தமிழாராய்ச்சிப் பகுதி ஒன்று திறக்கப் பட்டது. அப்பகுதிக்குத் தலைவராக நம் இராகவனர் சேது வேந்தர் அனுமதியோடு நியமிக்கப் பெற்றுத் தமிழ்த் தொண்டாற்றி வந்தனர். அக் காலத்தும் நம் பெரும் புலவர் பல நூல்கள் எழுதி வெளியிட்டார். தமிழ் கற்கும் அக்கழக மாணவர் களுக்கு, வகுப்பில் பாடங்கள் கற்பிப்பதன்மூலம் தமிழ் நூல் நயங்களை எடுத்துரைத்து, அக்கழகத் தினர் யாவரையும் இன்புறுத்தி வந்தனர். இங் ஙனம் ஆறு ஆண்டுகள் அந்நகர்க்கண் தங்கித் தமிழ்த் தொண்டு புரிந்த நம் இராகவனர், தம் முதுமைத் தளர்வால் இராமநாதபுரத்திற்கு மீண்டு வந்து, சேது வேந்தரது ஆதரவு பெற்று வாழ லாயினர்.

## சேது வேந்தரின் பேராதரவு

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் தொண்டாற்றி வந்த நம் பெரும்புலவரிடம், சண் முக ராஜேசுவர சேதுபதி முன்போலவே அன்பும் மரியாதையும் காட்டிப் போற்றி வரலாயினர். முது மையால் உடல் தளர்வுற்ற போதும் நாத்தளர் வுருத நம் இராகவனர் அரண்மனைக்குச் சென்று, அரசர்க்கு நூல்களின் நயங்களைக் கூறி மகிழ்வித்து வந்தார். இம்முதுமைக் காலத்தும் புதிய நூல் களை இயற்றுவதில் தளர்ச்சி கொள்ளவில்லை. தம் சமஸ்தான வித்துவானுன நம் இராகவனர் இவ் வுலகில் இருந்த நாளெல்லாம் அவர்தம் வாழ்க்கை

யில் குறைவின்றி உதவிக் காத்தவர், இவ்வேந்தரே யாவர்.

இவ்வாறு சேது வேந்தர் மூவர் காலங்களில் பெரும்புகழ் பெற்று விளங்கினர் நம் புலவர் திலகர். விக்ரமன், குலோத்துங்கன், இராஜராஜன் என்னும் சோழவேந்தர் மூவர் ஆட்சிக் காலங்களில், **கவிச்சக்கரவர்த்தியாக** விளங்கிய **கூத்தர்க்**கிருந்த சீரும் சிறப்பும் இத்தகையன என்பதை நாம் கேள்வி மூலமாகவே அறிவோம். இக்காலத்தில் அம்மதிப்பினை நம் மகா வித்துவானிடம் காட்டிவந்தவர்கள் மேற்கூறிய சேது வேந்தர் மூவரும் என்பது அறிஞர் பலரும் அறிந்ததேயாகும்.

## 4. தமிழ்த்தொண்டு

சேது சமஸ்தான வித்துவானாக ஐம்பது ஆண்டுகட்குமேல் விளங்கிய நம் இராகவனார் பல துறைகளிலும் தமிழ்த் தொண்டு செய்துள்ளார். இவர் பண்டைப் புலவர்க்கு ஒப்பாகச் செய்யுளியற்றும் திறமும், உரை எழுதும் வன்மையும் பெற்றவர்; ஆராய்ச்சியிலும் பெரிதும் வல்லவர். இவரியற்றிய நூல்களிற் பல இப்பொழுது தமிழகத்திலுள்ள பல்கலைக் கழகங்களிற் பாடங்களாக வைக்கப்படுகின்றன.

### (1) அச்சிட்டு வெளிவந்த நூல்கள்

**பாரிகாதை**

இந்நூல் 753 வெண்பாக்களை உடையது. இது பாரிவள்ளலின் வரலாற்றைக் கூறுவதாகும். இதற்கு இவர் சிறந்த விளக்கவுரையும் எழுதியுள்

ளார். இந்நூலின் அருமை பெருமையை அறிந்த இராஜா ஸர். அண்ணுமலை வள்ளலார், 1934-ஆம் ஆண்டு அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துத் தம் நாண் மங்கல விழாவில் தமிழ்ப் பேரவை கூட்டி இந்நூலை அரங்கேற்றுவித்து, நம் இராகவனுர்க்கு ஆயிரம் வெண்பொற் காசுகளையும் வழங்கினர். இந்நூலில் உள்ள ஒவ்வொரு வெண்பாவும், சொல்லழகும் பொருள் வளமும் உடையது. சான்ருக ஒன்று காண்க :

"முல்லை படர முழுத்தேரீத் துண்மகிழ்ந்து
கொல்லை படர்ந்தான் குரைகழலோன்—நல்லிசைதான்
மூவுலக முற்றும் முழங்கிப் படராதோ
பாவலர்செந் நாவிற் படர்ந்து."

(பாரி காதை—80)

## புவி எழுபது

கல்வியிற் பெரிய கம்பர் ஏரின் சிறப்பை எழுபது பாடல்களில் அமைத்துப் பாடியதுபோல, நம் மகா வித்துவானும், புவியின் பெருமையைப் புகழ்ந்து எழுபது பாடல்கள் பாடி, அதற்குப் **புவி எழுபது** என்ற பெயர் சூட்டினர். புவியினைத் தாயாகப் போற்றி வழிபடுவது நம் நாட்டு மரபாகும்.

## தொழிற் சிறப்பு

இந்நூல் நூறு செய்யுட்களை உடையது. நாட்டின் ஆக்கத்திற்குரிய தொழில்களில் மக்கள் நாட்டமுடையவராதல் வேண்டுமென்றும் கைத்தொழிலின் சிறப்பு இப்படிப்பட்டதென்றும் இந்நூலில் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

**திருவடிமாலை**

இது திருமாலின்மேல் துதியாகப் பாடப்பட்ட நூறு செய்யுட்களைக் கொண்டது. வைணவ சமய தத்துவங்கள் பல, சொல்நயம், பொருள்நயம் துலங்க இந் நூலகத்தே எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

## (2) அச்சிடப்பெறாத நூல்கள்

**பாரத நீதிவெண்பா**

வடமொழியில் வேதவியாசர் இயற்றிய மகா பாரதத்தை நம் இராகவனார் படித்துவந்தபோது, தாம் அந்நூலிற்கண்ட உயரிய நீதிகளை எல்லாம் தொகுத்து இருநூற்றைம்பது வெண்பாக்களில் இதனைப் பாடினர்.

**இராஜ ராஜேசுவர சேதுபதி ஒரு துறைக் கோவை**

இது பாஸ்கர சேதுபதியின் தவமைந்தரான இராஜ ராஜேசுவர சேதுபதிமீது பாடிய கோவையாகும். இரகுநாத சேதுபதி ஒரு துறைக்கோவை போலவே ஒவ்வொரு பாடலும் 'நாணிக் கண் புதைத்தல்' என்ற ஒரு துறைப்பொருள் அமையப் பாடப்பட்டது; புறம் அகம் என்னும் இரு பொருளுடன் விளங்கும் நானூறு செய்யுட்களை உடையது. இந்நூல் இவ்வேந்தர் காலத்து நவ ராத்திரி விழா ஒன்றில் பெரும்புலவர் பலர் கூடிய பெருஞ்சபையில் அரங்கேற்றப்பட்டது.

**புல்லை யமகவந்தாதி**

'புல்லை' என்பது 'திருப்புல்லாணி' என்று வழங்கும் புண்ணியஸ்தலத்தின் மரூஉவாகும். இத்

தலம் இராமநாதபுரத்திற்குத் தெற்கே ஆறுகல் தொலைவில் உள்ளது. இஃது இத்தலத்துக் கோயில் கொண்டுள்ள திருமால்மீது பாடப்பட்ட அந்தாதி யாகும். இந்நூலில் உள்ள ஒவ்வொரு கலித்துறைப் பாவும், யமகம் என்னும் சொல்லணி கொண்டு, அந்தாதித் தொடையாகப் பாடப்பெற்றதாதலின், 'யமகவந்தாதி' எனப் பெயர் பெற்றது. இது நூறு செய்யுட்களை யுடையது. இந்நூலுக்கு நம் இராகவனரே உரையும் வரைந்துள்ளார்.

**திருவேங்கடமாலை, கடவுள்மாலை** முதலிய வேறு பல நூல்களும் இவரால் இயற்றப்பட்டு அச் சேருதுள்ளன.

இந்நூல்கள் அல்லாமல், நம் இராகவனர் வெவ் வேறு சந்தர்ப்பங்களில் பாடிய பல பொருள் பற்றிய தனிப்பாடல்கள் பலவாகும்.

## அச்சிடப்பட்ட உரைநடை நூல்கள்

### தமிழ் வரலாறு

இது நம் இராகவனர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராய்ச் செயலாற்றியபோது எழுதப்பட்ட சிறந்த ஆராய்ச்சி நூல். இது 361 பக்கங்களைக் கொண் டது. அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ் வெளி யீடுகளுள் இஃது இரண்டாவதாகும். இந்நூல் நம் இராகவனரது ஆராய்ச்சித் திறமைக்கோர் எடுத் துக்காட்டாக விளங்குகின்றது. **வஞ்சிமாநகர், சேதுநாடும் தமிழும், நல்லிசைப்புலமை மெல் லியலார், அண்டகோள மெய்ப்பொருள்** முதலி யவை இவரால் எழுதப்பட்ட சீரிய ஆராய்ச்சி

நூல்களே. இவற்றின் அருமைப்பாடுகளைக் கற்றுரெல்லாரும் நன்கறிவர்.

**மொழிபெயர்ப்பாளர்**

இப்பேராசிரியர் சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவர் என்பது வடமொழியிலுள்ள பெருங்காப்பியங்களைத் தமிழில் பெயர்த்திருத்தல் கொண்டு அறியலாம். **பகவத் கீதையை** இப்பெரியார் தமிழில் அழகிய தாழிசைப்பாவில் மொழிபெயர்த்துள்ளார். அந்நூல் அச்சேறவில்லை. இவர் இத்தாழிசைப்பாவிலேயே, **வால்மீகி ராமாயணத்துள் சில பகுதிகளையும், இரகு வம்சத்துள் சில சருக்கங்களையும்** மொழி பெயர்த்துள்ளார்; மகாகவி **காளிதாசர்** இயற்றிய வடமொழி **அபிஜ்ஞான சாகுந்தலம்** என்னும் நாடக நூலைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார். மேல்நாட்டாரும் நம் நாட்டாரும் போற்றும் பேரறிஞரான மகாகனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார், இந்நூல் வெளி வருதற்குத் தம் கைப்பொருள் கொடுத்துதவியவராவர். இவரது வடமொழியில் ஊறிய அறிவையும், மொழிபெயர்ப்புத்திறனையும், கவித்துவத்தையும், நன்குணர்ந்து மயிலை சம்ஸ்கிருத சமிதியார் இவர்க்குப் **பாஷா கவிசேகரர்** என்ற பட்டம் சூட்டிப் போற்றினர்.

**பதிப்பாசிரியர்**

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களைப் போலவே நம் இராகவனாரும், தமிழ் நாட்டில் பண்டைப் புலவர்கள் வாழ்ந்த ஊர்களுக்கு எல்லாம் சென்று பழைய நூற்சுவடிகளைத் தேடிச் சேர்த்தவர்த; அங்ஙனம் சேர்த்த நூற் சுவடிகளை

ஆராய்ந்து அவற்றுட் சிலவற்றை மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடுகளாகப் பதிப்பித்தவர். அவற்றுள் **தொல்காப்பியச் செய்யுளியல்** நச்சினார்க்கினியருரை வேறு தனியாக இருப்பதைக் கண்டு வெளியிட்டு முதன்முதலில் தமிழ் உலகுக்கு அளித்தவர். இஃதன்றி, **நேமிநாதம், பன்னிரு பாட்டியல்** என்ற இலக்கண நூல்களும், **ஐந்திணை ஐம்பது, நான்மணிக்கடிகை, திருமாலை நூற்றைம்பது** என்ற சங்க நூல்களும், **திருநூற்றந்தாதி** என்ற ஜைனநூலும், **முத்தொள்ளாயிரம்** என்ற நூலும் இவரால் வெளிவரலாயின.

**அகநானூறு** என்ற அருந்தமிழ்ச் சங்க நூலை முதலில் ஏடுகளிலிருந்து எழுதிப் பரிசோதித்து அந்நூலை மயிலாப்பூர் கம்பர் விலாசம் இராஜகோபாலையங்கார் மூலம் வெளிப்படுத்தியவர் நம் மகாவித்துவானேயாவர்.

## ஆராய்ச்சியாளர்

நம் பெரும்புலவர் ஆங்கிலத்தில் வெளிவந்த பல அரிய ஆராய்ச்சி நூல்களையும், அரசாங்கத்தார் வெளியிட்ட கல்வெட்டுக்களையும், பல நாட்டு மொழி வளங்களையும், வரலாறுகளையும் நன்கு ஆராய்ந்த பேரறிஞர் ஆதலின் இவர் எழுதி வெளியிட்ட ஆராய்ச்சி நூல்களும், கட்டுரைகளும் அறிஞர் உலகிலே வியப்பும், உவப்பும் ஊட்டி வந்தன. இவர் செந்தமிழ் என்னும் திங்களிதழில் **திருவள்ளுவர், கம்பர்** முதலிய பெரும்புலவர்களின் சிறப்பியல்புகளை விளக்கிக் கட்டுரைகள் பல வரைந்துள்ளார். தொல்காப்பியப் பொருளதிகாரத்துள் மெய்ப்பாடு, உவமம், செய்யுள், மரபியல்களின்

உரைகளாக அச்சிடப்பட்டவை, நச்சினார்க்கினியர் இயற்றியன அல்ல, பேராசிரியர் உரையே என்றும், திருக்கோவையார்க்கு உரை வகுத்தவர் பேராசிரியரே என்றும், புறப்பொருள் வெண்பா மாலை உரையாசிரியர் மாகறல் **சாமுண்டி தேவ நாயகர்** என்றும், கம்பராமாயணத்திற்கு அவ்வாசிரியர் இட்டபெயர் **இராமாவதாரம்** என்றும், இவை போல்வன பலவும், ஆராய்ச்சியிற் கண்டு முதன்முதல் தமிழுலகிற்கு அறிவித்தவர் நம் இராகவனாரேயாவர்.

**பத்திராசிரியர்**

மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்றும் வெளிவரும் **செந்தமிழ்** என்னும் திங்கள் தாளுக்கு முதலாசிரியராய் இருந்து, அது பல துறைகளிலும் சிறந்து விளங்கப் பெரிதும் உழைத்தவர் நம் பெரும் புலவர். இவர் அவ்விதழில் மேற்காட்டிய கட்டுரைகள் எழுதியதோடு நூற்பதிப்பையும் மேற்கொண்டு பல நூல்களை வெளியிட்டார்.

**உரையாசிரியர்**

நம் இராகவனார் குறுந்தொகை என்னும் சங்க நூலுக்கு அரிய பெரிய விளக்க உரை ஒன்று எழுதினார். அவ்வுரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இவர் தமிழாராய்ச்சித் துறைத் தலைவராய் இருந்த காலத்தில் எழுதப்பட்டது. அந்நல்லுரையின் ஒரு பகுதி அப்பல்கலைக் கழகத்தில் வெளியிடப் பட்டுள்ளது. தாமியற்றிய பாரிகாதை, புல்லை யமகவந்தாதி முதலியவற்றுக்கு இவரே உரையும் வகுத்தவர் என்பது மேலே கூறப் பட்டது. இவரெழுதிய உரை நயம், அறிஞர்

களால் வியந்து பாராட்டும் சிறப்பினை உடையதாகும்.

### சிறந்த நாவலர்

நம் பெரியாரது பெரும் புலமைத் திறனைத் தமிழுலகம் போற்றும்படி செய்தது இவரது இணையற்ற நாவன்மையே. "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப" இனிதுரைக்கும் சொல் வன்மை பெரிதும் பெற்றவர் இவர்; அவையோர் விரும்பும் எப்பொருள் பற்றியும் அவகாசம் வேண்டாது யாவரும் வியப்பும் உவப்பும் எய்த விரிவுரை வழங்கும் ஆற்றல் மிக்கவர். எத்துணைப் பொழுதாயினும் சலிப்பின்றி இலக்கிய நயங்களைப் பரக்கப் பேசி அவையோரைத் தம்வயப்படுத்தி மகிழ்வித்தலிலும், தமிழ் நூல்களிற் கண்ட நுட்பங்களை வடமொழி ஆங்கிலக் கருத்துக்களோடியைத்து, அறிஞர் வியக்கக் கூறுவதிலும், இவர்க்கிருந்த ஆற்றலும் நாவன்மையும் போற்றற்குரியன.

'ஆரேஷன்' (Oration) என்பது ஆங்கிலம் வல்ல பேச்சாளரிடம்தான் அமையக்கூடியதென்று சொல்லப்படுவதுண்டு. தமிழிலும் அது சிறக்க அமையக்கூடும் என்ற உண்மையைத் தமிழுலகுக்கு மெய்ப்பித்தவர் **சொல்லின் செல்வரான** நம் இராகவனுரேயாவர். இவர் தாம் கண்டறிந்த உண்மைகளை, அறிஞர் பலர்க்கும் எடுத்துரைக்கும்போது அவரெல்லாம் பரவசப்படுவர். இவரது மிடற்றொலி இன்னோசை கொண்டு சொற்பொழிவுக்கென்றே அமைந்ததாகும். ஒரு பொருள்பற்றி அறிஞர் குழுவில் ஆராய நேருங்கால், அவ்

வாராய்ச்சியின் நுணுக்கமான முடிவுகளை யாவர்க்கும் முற்பட எடுத்துரைப்பதில் இவர் வல்லவர்.

சென்னை, அண்ணுமலைப் பல்கலைக் கழகங்களிலும் மதுரைத் தமிழ்ச் சங்கம், கரந்தைத் தமிழ்ச் சங்கம், வைஷ்ணவ சபைகள், மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை போன்ற சங்கங்களிலும் இவர் ஆற்றிய சொற்பொழிவுகள் எண்ணில. மன்னுர்குடி வித்வத் சபையில் ஆண்டுதோறும் இவர் நிகழ்த்திவந்த சமயச் சொற்பொழிவுகளைச் சோணுட்டறிஞர் இன்றளவும் பாராட்டிவருகின்றனர்.

இவர் மயிலாப்பூர் சம்ஸ்கிருத சமிதியில், வால்மீகி, காளிதாஸர்களின் திருநாள்களிலே வால்மீகம், சாகுந்தலம் முதலிய வடநூல் நயங்களை எடுத்துரைத்து வடமொழிப் பேரறிஞர்களையும் உவகைக் கடலில் திளைக்கச் செய்ததுண்டு. இப்பெரியார் இத்தகைய நாவன்மை பெற்றிருந்த காரணத்தால், மகா கனம் ஸ்ரீ நிவாஸ சாஸ்திரியார், மகாமகோபாத்தியாய குப்புசாமி சாஸ்திரியார் போன்ற பேரறிஞர்கள், இவரைச் 'சொல்லின் செல்வர்' என்றே பாராட்டலாயினர். இவரது சொற்பொழிவிற்குச் சென்னை உயர்மன்ற நீதிபதிகளும் பெரிய வழக்கறிஞர்களும் அரசியல் தலைவர்களும் திரள் திரளாக வந்து கேட்டு மகிழ்வரெனின், இவரது நாமாண்பு பற்றி நாம் யாது கூறவல்லேம் !

**பிற பதவிகள்**

நம் இராகவனுர் சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்க் குழுவிலும், பெரும் பட்டங்கள் வழங்கும் தேர்ச்சிக் குழுவிலும் பல்லாண்டுகள்

உறுப்பினராய் இருந்து தமிழ்த் தொண்டு செய்தார்.

## புலமைக்கேற்ற மதிப்பு

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கட்கு நம் இராகவனுரை, அவர்தம் ஆற்றற்கேற்றபடி, தாமும் சிறப்பிக்க வேண்டுமென்ற அவா நெடுக இருந்து வந்தது. அதற்கோர் சமயமும் வாய்த்தது. மேலைச் சிவபுரி சன்மார்க்க சங்கத்தார் இப்பெரியார் இருவரையும் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் விருப்பிற்கிணங்கித் தம் சங்க ஆண்டு விழா ஒன்றிற்கு அழைத்தனர். அங்கு அவ்விருவரும் சென்றிருந்தனர். அவ்விழாவில் அறிஞர்களும் செல்வர்களும் நிரம்பிய பேரவையில் டாக்டர் ஐயரவர்கள் தலைமை தாங்க, நம் இராகவனுர் அரிய சொற்பொழிவு ஒன்று ஆற்றி யாவரையும் உவப்பூட்டினர். அச் சொற்பொழிவின் முடிவில், டாக்டர் ஐயரவர்கள் எழுந்து நின்று நம் இராகவனுர்க்கு **மகா வித்துவான்** என்ற பெரும்பட்டம் சூட்டினர் ; "இப்பட்டம் என் ஆசிரியரான பிள்ளை அவர்கள் ஒருவர்க்கன்றி வேறு எவர்க்கும் என் வாயால் வழங்காதது ; அவர்களுக்குப் பின் அப்பட்டத்திற்குத் தகுதியுடையவராய் விளங்குபவர் நம் ஐயங்காரவர்களே," என்றும் கூறினர். அச் சபையார் நல்கிய விலையுயர்ந்த காசுமீர சால்வை ஒன்றைத் தம் திருக்கரத்தால் நம் இராகவனுர்மேல் போர்த்தினர் ; அவையோர் கைதட்டலுக்கிடையே புகழ்ந்து வாழ்த்தினர். முன்னமே சேதுநாட்டு **மகாவித்துவான்** என்ற பட்டத்துடன் விளங்கிய நம் ஐயங்கார், இது முதல் செந்தமிழ் நாட்டின்

**மகாவித்துவான்** என்று யாவராலும் அழைத்துப் போற்றப்பட்டனர்.

**மறைவு**

இவ்வாறெல்லாம் தென்னாட்டுத் தமிழர் திலகமாய் விளங்கிய இப்பெருநாவலர், தம் முதுமைத் தளர்ச்சியால் உடல்நலங் குன்றி, 1946-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11-ஆம் நாள் தமது 77-ஆம் வயதில் புலவர் பெருமக்கள் யாவரும் இரங்கப் பரமபதம் எய்தினர்.

## 5. குண நலன்கள்

பண்டைக்காலப் பைந்தமிழ்ப் பெரும் புலவர்கள் கொண்டிருந்த பெருங் குணங்களைச் சங்க நூல்களாலும், பிற நூல்களாலும் நாம் நன்கறிந்துள்ளோம். அத்தகைய குணங்கள் யாவும் ஒருசேரக் காணும்படி விளங்கியவர் நம் மகா வித்துவான். நிறைந்த கல்வியும், வாய்மையும், அன்பும், ஆதரவும், செய்ந்நன்றி யறிதலும் இவரிடம் நிலை கொண்டிருந்தன. வள்ளுவனாரது திருக்குறளில் அறநெறிகளாகக் கூறிய அனைத்தையும், தம் ஒழுக்கமாகக் கடைப்பிடித்தவர் இவர். தேவகோட்டையில் வித்வத் சிகாமணியாகவும் பிரபுவாகவும் விளங்கிய **சின்னைய செட்டியார்** இவரது உத்தம ஒழுக்கங்களைக்கண்டு மேற்கூறியவாறே கடிதமூலம் எழுதியும் புகழ்ந்துள்ளார்.

**தாயன்பு**

நம் இராகவனார் ஐந்து வயதில் தம் தந்தையாரை இழந்தனர். அதுமுதல் இவர் தம்மை அருமையாய் வளர்த்த தாயாரிடம் அளவற்ற அன்

பும் மரியாதையும் கொண்டிருந்தனர். தாயார் வடநாடு செல்ல விரும்பியபோது, இவர் சேதுவேந்தர் உதவிகொண்டு அவ்வம்மையாரது ஆவலை நிறைவேற்றினர். நீண்ட ஆயுளைப் பெற்ற அவ்வம்மையார், "இராகவன் எனக்கொரு குறையும் வைக்கவில்லை," என்று தமது இறுதிக்காலத்தில் அகம் மலர முகம் மலர்ந்து கூறினர் எனின், நம் இராகவர் தம் அன்னையாரிடம் எத்தகைய நன்முறையில் நடந்துவந்தார் என்பதை நன்குணரலாம்.

**அறிஞரை உபசரித்தல்**

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரைக் "காரணக் கொடையான்" என்றும், கவி வீரராகவனை "ஏற்றாலும் கன்னுவதாரன் கவி வீரராகவன்" என்றும் புகழ்ந்த புலவர்கள் உண்டு. அம்முறையில் நம் மகா வித்துவானும் விளங்கினர்; தம் இல்லத்து வந்த புலவர்களுக்குச் செவியமுதமும் அவியமுதமும் ஊட்டிப் பொருளுதவியும் செய்து வந்தார். இவர்களுள் இவரளித்த பொன்னுடைகளால் அலங்கரிக்கப் பெற்றுச் சென்ற பெரியார் சிலருண்டு. பிற புலவர்பால் அன்பு செலுத்துவதும், இளம்புலவர்களை ஊக்குவதும் இவரியல்புகள். சேது வேந்தரை நாடிவரும் சாதாரணப் புலவரும் இவரது பாராட்டால் அவ்வேந்தரிடம் பரிசுபெற்றுச் செல்வர்.

**சமரச சமய உணர்ச்சி**

இவர் வைணவ சமய நூல்களையும், சைவம், சமணம், பௌத்தம், கிறித்தவம், இசுலாம் முதலிய சமய நூல்களையும் நன்கு கற்றவர். அதனல் இப்பெரும் புலவரைப் பல சமய அறிஞர்களும், தமிழ்ப்

புலமை ஒன்றே உடைய புலவராகக் கருதாமல், எத்துறையிலும் நன்கு பயின்று ஊறிய பல்கலைத் துறைவாணராகவே சிறப்பித்துப் புகழலாயினர். திருவாவடுதுறை ஆதீன கர்த்தராயிருந்த அம்பல வாண தேசிகர் முதலான மடாதிபதிகளும் தம் ஆதீனத்திற்குப் பலமுறை வரவழைத்து நம் இராகவனுரைப் பாராட்டிப் பெரும் பரிசுகளை அளித்துச் சிறப்பித்தனர்.

**மனப் பண்பாடு**

நம் மகாவித்துவான் கல்வித்துறைகளில் நேர் வழியின்றிக் குறுக்கு வழிகளையோ, கோணல் வாதங்களையோ மேற்கொண்டதில்லை. இவர் பல முறை தக்கார் பலருடன் வாதங்கள் நடத்திய துண்டு. அவற்றில் எல்லாம் வெற்றி வீரராகவே விளங்கியதற்கு, இவர் தம் மனப் பண்பாடு நேர்மை பெற்றுத் திகழ்ந்ததே காரணமாகும். அதனுல் நெறிதவறிய எதிர்வாதிகள் திறத்தில் இவர் கடுமை யாக நடந்துகொள்பவர் போலத் தோன்றிய துண்டாயினும், பின்பு இவரது நேர்வழியை அறிந்து அவரெல்லாம் இவரிடம் அன்பும் மதிப்பும் உடையவராய் இருந்தனர். இராமநாதபுரத்தில் நவராத்திரி விழாக் காலங்களில் பேரறிஞர்களின் வாதங்கள் அரசர்முன்பு நிகழும். அப்போது நம் இராகவனுர் நடுவுநிலைமை தாங்கிச் சீர்தூக்கி உரை ஆற்றுவது உண்டு.

**நல்லியல்புகள்**

நம் பெருநாவலர் சுதந்தரமான சிந்தனை யாளர்; வியக்கத்தக்க நினைவாற்றலைப் பெற்றவர்; கற்பனு சக்தியும் நிறைந்தவர்; நுண்பொருள்கள்

அனைத்தையும் தாமே சிந்தித்து அவற்றின் உண்மையைக் காண வல்லவர்; உண்மை காண்பதில் உழைப்பும் ஊக்கமும் உறுதியும் உடையவர்; முன்பு எவரும் கூருதனவும், பொருட் பொருத்தமுள்ளனவுமான நல்ல கருத்துக்களையும், நயங்களையும் எடுத்துரைக்கும் பண்பினர்; தாம் ஆய்ந்து எழுதியுள்ள அரிய நூற் பிரதிகளை, அச்சிட விரும்பும் அறிஞர்களுக்கு அவற்றை அன்புடனளிக்கும் வண்மையாளர்; கற்ற பேரறிவாளர்களைச் சுற்றமாகக் கொள்பவர். புலவர் பெருமக்களின் பொருள்நயங்களைக் கேட்டு உவந்து போற்றும் பண்பினர்; தாம் பெற்ற தமிழின்பத்தை யாவரும் பெறவேண்டுமென்ற பெருநோக்கத்தால், தமிழ்வாணரைச் சந்திக்கும்போதெல்லாம், இலக்கிய மணம் கமழச் சலிப்பின்றிப் பேசி மகிழ்விக்கும் இயல்பினர்; பொருள்கொடுத்துப் பல புத்தகங்களைப் பெற்று, அவற்றைப் படித்துப் பொழுது போக்குபவர்; நூலறிவோடு உலகியலறிவும் நிறைந்தவர்; அழகிய தோற்றமுடையவர்; பன்மொழிப் புலவர்; இன்மொழியாளர்; அரசர்களாலும் செல்வர்களாலும் பிறநாட்டறிஞர்களாலும் பிறமொழியாளராலும் பாராட்டப்பெற்ற பெருங் குணக் குரிசில்.

பரிமேலழகரை, “ஈசனதருளால் உய்த்துணர்வுடையவோர் உண்மையாளன்” என்று முன்னோர் சிறப்பித்ததுண்டு. அத்தகைய ‘அநுக்ரக சக்தி’ நம் மகா வித்துவானிடமும் உண்டென்பது அறிஞர் கண்ட உண்மையாகும்.



திரு. நாராயணையங்கார்

# IV. திரு. நாராயணையங்கார் *

(கி. பி. 1861 – 1947)

## 1. பாண்டிய நாடும் தமிழும்

**பாண்டிய நாடு**

இன்றைய பாண்டிய நாடு என்பது இன்றுள்ள மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி என்னும் பகுதிகளும் கீழ்க் கடற்கரை வெளியும் சேர்ந்த நிலப்பகுதியாகும். இதன் வடஎல்லை சோழநாடு; மேற்கு எல்லை மேற்குத்தொடர்ச்சி மலை; தெற்கு எல்லை நாஞ்சில் நாடு; கிழக்கு எல்லை வங்கக் கடல். பாண்டிய நாடு மலைவளம் செறிந்தது. இம்மலைகளில் பலவகை வாழைகள் வளமுறப் பயிராகின்றன. சிறுமலைப்பழத்தை விரும்பாதார் யாவர்? செவ்வாழை, தேன்வாழை, நெய்வாழை, நமரன் வாழை, மலைவாழை என்னும் பெயர்களைச் சொல்லும்போது நாவில் இனிமை தோன்றும் அன்றோ? மலைப்பகுதிகளில் ஏலக்காய் மிகுதியாய்ப் பயிராகின்றது. ஆங்காங்குத் தென்னை மரங்களும் கமுக மரங்களும் காட்சியளிக்கும் மாட்சியை என்னென்பது!

**பொதிய மலை**

பாண்டி நாட்டிற்கே சிறப்பிடமாகக் கூறத்தக்க பொதிய மலை திருக்குற்றாலத்தை அடுத்து இருக்கிறது. குற்றால நீர்வீழ்ச்சி தென்னிந்தியப் புகழுடையதன்றோ? அங்கு நாள்தோறும் நூற்றுக்

---

* இவ்வரலாற்றுக்குரிய குறிப்புக்கள் அனைத்தும் தந்துதவிய அறிஞர், திரு. நாராயணையங்கார் அவர்களுடைய செல்வத் திருமகனாரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பேராசிரியருமாகிய **திரு. அப்பனையங்கார்** ஆவர்.

கணக்கான மக்கள் சென்று, மலைப்பகுதிகளி லிருந்து பலவகை மூலிகைகளிற் பாய்ந்து அருவி யாகக் கீழே விழும் குற்றால நீர்வீழ்ச்சியில் மனங் களிக்க நீராடித் தம் உடலைத் தேற்றுகின்றனர். மலைமீதுள்ள ஐந்தருவி, தேனருவி முதலிய அருவி கள் நன்மருந்துக்குரிய நலங்களைப் பெற்றவை. இங்ஙனம் அருவியாலும் சிறந்த மூலிகைகளினலும் பலவகை மரங்களாலும் சிறப்புற்றது பொதிய மலைப் பகுதி. இப்பகுதியைத் தன்னகத்தே கொண்ட பாண்டிய நாட்டின் சிறப்பை என் னென்று கூறுவது!

## தமிழ் வளர்த்த பாண்டியர்

சங்ககாலத்துப் பாண்டியர் முடியுடைய நெடு நில மன்னராக வாழ்ந்தனர். அக்காலத்தில் 'கோடைப் பொருநனும்*, பழனிமலைப் பகுதியை ஆண்ட வேள் ஆவியும், பொதியமலைப் பகுதியை ஆண்ட வேள் ஆயும், மோகூர்ப் பகுதியை ஆண்ட பழையனும் பிறரும் குறுநில மன்னராக இருந்த னர். பாண்டிய நாட்டு நெடுநில மன்னருள் பலர் தமிழின் இயல், இசை நாடகம் என்னும் முப்பகுதி களையும் வளமுற வளர்த்தனர்; அத்துடன் தாமே கவிபாடும் ஆற்றலும் பெற்றிருந்தனர்; சங்கத்தி லிருந்து தமிழாராய்ந்தனர். அவர்தம் கோப்பெருந் தேவியரும் கவிபுனையும் திறன் படைத்திருந்தனர்; தாய்மொழியைத் தம் உயிரெனப் போற்றினர். தாய்மொழியில் வல்ல புலவர், பாணர், கூத்தர் என்னும் முத்திறத்தார்க்கும் வேண்டியன வேண்டி

---

* இன்றைய கோடைக்கானல் மலையும் அதனைச் சுற்றி யுள்ள பகுதியும்.

யாங்கு அளித்தனர். இவர்களைப் பின்பற்றிக் குறுநில மன்னரும் முத்தமிழ் வல்லாரை முதன்மை யாகப் போற்றினர். இங்ஙனம் நெடுநில மன்னரும் குறுநில மன்னரும் பைந்தமிழைப் பாங்குற வளர்த்தமையால், நாட்டில் இயற்றமிழில் வல்ல புல வரும், இசைத் தமிழில் வல்ல பாணரும், நாடகத் தமிழில் வல்ல கூத்தரும் வறுமையின்றித் தமிழை நன்கு வளர்த்தனர். இக்காரணத்தாற்றான் தமிழ் வளர்த்த பெருமை பாண்டிய நாட்டுக்கு உரியதா யிற்று.

## குறுநில மன்னரும் தமிழும்

உலகில் காலம் மாறுதல் இயல்பன்றோ? சங்க காலத்திற்குப் பிறகு சமயப் பூசல்களாலும் வேற் றரசர் படையெடுப்பாலும், அயல்மொழியார் ஆட்சி யாலும் சங்கத் தமிழ் சிறப்பிழந்தது. விஜயநகர ஆட்சியில் தோன்றிய ஜமீன்கள் பாண்டிய நாட் டில் பலவாயின. அவை புலவர் பலரைக்கொண்டு, சங்ககாலம்போலவே தமிழை வளர்க்கத் தொடங் கின. இவ்வருட் செயலால் தமிழ்நூல்கள் பல பதி னெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் பெரு கின. இங்ஙனம் செந்தமிழ் வளர்த்துச் சிறப் படைந்த பாண்டிய நாட்டில் நெடுங்காலமாகச் சிற்றரசராக இருந்துவந்த சேதுபதிகள் தமிழை வளமுற வளர்த்த பெரியோராவர். அவர் மரபில் வந்தவரே பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் தோன்றிய **பாண்டித்துரைத் தேவர்** என்பவர். தாய்மொழியிற் சிறந்த பற்று மிகுந்த அப்பெருமகனார், தம் பெயருக்கு ஏற்ப, மதுரை யில் **தமிழ்ச் சங்கம்** ஒன்றைத் தோற்றுவித்தார்.

அத்தமிழ்ச் சங்கப் புலவர் பலர் ஆவர். அவர்கள் சேது அரசவைப் பெரும் புலவரான ரா. **இராகவையங்கார், திரு. நாராயணையங்கார், அரசஞ் சண்முகனுர்,** சுப்பிரமணியக் கவிராயர், எனப் பலராவர். இப்புலவர் பெருமக்களுள் ஒரு வரே நாம் இங்கு அறியப்புகும் வரலாற்றுக்குத் தலைவரான **திரு. நாராயணையங்கார்** என்பவர்.

## 2. பிறப்பும் வளர்ப்பும்

### ஸ்ரீவில்லிபுத்தூர்

சங்க காலத்திற்குப் பிறகு பாண்டிய நாட்டில் சமணமும் பௌத்தமும் ஏறத்தாழக் கி. பி. 7-ஆம் நூற்றுண்டின் இடைப்பகுதி வரையில் செல்வாக்குப் பெற்றிருந்தன. அதன் பின்னர்ச் சைவமும் வைணவமும் சிறப்புற்றன. நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் என்னும் ஆழ்வார்களால் பாண்டிய நாட்டில் வைணவம் நன்கு பரவியது. பாண்டிய மன்னர்கள் சைவத்தையும் வைணவத்தையும் தம் இரு கண்கள் எனப் போற்றி வளர்த்தனர். குடிமக்களும் அங்ஙனமே வளர்த்தனர். ஆழ்வார்களுடைய அருட் பாடல்கள் எல்லாம் திருமால் கோவில்கள் எல்லாவற்றினும் பாடப்பெற்றன. ஆழ்வார்திருநகரி, ஸ்ரீவைகுண்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் என்பன பாண்டிய நாட்டு வைணவத் திருப்பதிகளுள் குறிக்கத்தக்கவை.

ஸ்ரீவில்லிபுத்தூர் பெரியாழ்வார் வாழ்ந்த திருப்பதி; ஆண்டாள் அம்மையார் பிறந்து வளர்ந்த பெருமையுடையது. அது வில்லி என்னும் வேடனல் ஏற்படுத்தப்பட்ட புது ஊராகலின் **வில்லிபுத்**

**தூர்** எனப் பெயர் பெற்றது என்று பெரியோர் கூறுவர். ஸ்ரீ என்பது அடைமொழி. ஏறத்தாழக் கி. பி. 8-ஆம் நூற்றுண்டிலிருந்து ஸ்ரீ வில்லிபுத்தூர் வைணவ வரலாற்றில் இடம் பெற்றுவிட்டது. ஸ்ரீவில்லிபுத்தூரின் நடுநாயகமாக விளங்குவது திருமாலின் திருப்பெருங் கோவில். அங்குப் பெரியாழ்வார் உருவச் சிலையும், காண்போர் வியப்புறத் தக்க பெரிய அளவில் ஆண்டாள் அம்மையாரது உருவச்சிலையும் அமைந்துள்ளன. அம்மையார் பெரியாழ்வாருக்கு மகளாய் வளர்ந்து, அருட்பாடல் களைப் பாடி, முடிவில் திரு மாலையே மணந்து கொண்டு அவனேடு இரண்டறக் கலந்த வரலாற்று நிகழ்ச்சிகள் அன்று முதல் இன்றுவரை ஆண்டு தோறும் விழாக்கள் வாயிலாக மக்களுக்கு உணர்த் தப்படுகின்றன. உள்ளத்தை உருக்கி, உணர்ச் சியை இறைவன்பால் தூண்டும் அம்மையாருடைய அருட்பாடல்கள் ஸ்ரீவில்லிபுத்தூரை அடுத்த சிற்றூர்களிலும் பேரூர்களிலும் மக்களால் நாளும் படிக்கப்படுதல் உண்டு.

**எதிர்க்கோட்டை**

இங்ஙனம் அம்மையாருடைய அருட் பாடல் கள் பாடிவரும் சிற்றூர்களுள் **எதிர்க்கோட்டை** என்பது ஒன்று. அது ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் தென் கிழக்கே பத்துக் கல் தொலைவில் உள்ளது. இச் சிற்றூர் மிக்க வளப்பமுடையது. வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்த மரங்கள் ஊரை அழகு செய்கின்றன. ஊர்வாழ் மக்கள் உழுதல் தொழிலிலும், பிற கைத்தொழில்களிலும் ஊக்கமுடையவர்; ‘‘ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு’’ என்னும் அறி

வுரையை உணர்ந்தார் போலத் தம்முள் கருத்து ஒருமித்துப் பொதுப் பணிகளில் ஈடுபட்டுவந்தனர்.

**பெற்ருேர்**

ஒற்றுமை மிக்க இச்சிற்றூரில் கிராம அதிகாரியாய் இருந்தவர் **திரு. அப்பனையங்கார்** என்பவர். அவர் ஊராட்சி முறையில் போதிய அனுபவம் வாய்ந்தவர்; தமது இனிமையான பேச்சால் பொது மக்களைத் தம்பால் இழுக்கும் ஆற்றல் பெற்றவர்; தமிழிலும் வடமொழியிலும் சமய நூல்களிலும் நிரம்பிய புலமை பெற்றவர். அவருக்கு எல்லோரும் நண்பரே; பகைவரையும் நண்பராக்கும் தனிப்பண்பு அவரிடம் மிக்கிருந்தது. இப்பண்புகளால் அவர் தமது சிற்றூரில் மக்கள் மதிக்கும் சிறந்த தலைவராக விளங்கினர்.

அவரது ஆருயிர் மனைவியார் கணவர் சொல் கடவாத காரிகையார்; தம் கணவரை இன்புறுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தவர். பசியால் வாடி, வெயிலால் களைத்து வந்தோரை இன்முகம் காட்டி உபசரிப்பதில் இணையற்று விளங்கியவர். அவர் என்றும் சினத்தை அறியாதவர்; நன்முகத்துடனே அனைவருடனும் பேசிப் பழகும் பண்புடையவர். அவருடைய சீரிய குணங்கள் ஊராரை மகிழ்வித்தன; பலர் பாராட்டுக்கு ஊரியவை ஆயின.

**பிள்ளைகள் ஐவர்**

அப்பனையங்காருக்கு ஆண் மக்கள் ஐவர். அவருள் நம். திரு. நாராயணையங்கார் இரண்டாம் மகனுர் ஆவர். இவர் 1861-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ஆம் நாள் தமிழன்னை மகிழ இத்தமிழ

கத்திற் பிறந்தார். தாய் தந்தையர் தம் மக்கள் ஐவரையும் தம்முயிரினும் மேலாகப் பாதுகாத்தனர்; பிள்ளைகள் பேசும் மழலைச் சொற்களைக் கேட்டு மகிழ்ந்தனர்; பிள்ளைகள் இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும் உணவை உண்ணுதலைக் கண்டு களிப்படைந்தனர். சுருங்கக் கூறின், பிள்ளைகள் பெற்ரேரால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்கப் பெற்றனர்.

## 3. கல்விப் பயிற்சி

**கல்வியின் சிறப்பு**

மக்களாய்ப் பிறந்தவர்க்கு உலக அறிவையும் அதன் வாயிலாகக் கடவுள் உணர்ச்சியையும் ஊட்ட வல்லது கல்வியே. கல்வி வெந்தழலில் வேகாதது; வேந்தர் விரும்பினும் கொள்ள முடியாதது; கள்வராலும் கவர இயலாதது; மக்களது பகுத்தறிவை நன்கு வளர்க்க வல்லது; 'இதன் நலம் இது; இதன் தீமை இது' என்பதை எளிதில் உணர்த்தவல்லது. இத்தகைய சிறப்புடைக் கல்வி கற்றவனே மன்னராலும் மதிக்கப்படுவான். மன்னனுக்குத் தன் நாட்டில் மட்டுமே செல்வாக்கு உண்டு. ஆயின், கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு உண்டாகும். இந்த உண்மையை உணர்ந்தன்ரே,

> "மன்னனும் மாசறக் கற்ரேனும் சீர்தூக்கின்
> மன்னனிற் கற்ரேன் சிறப்புடையன்—மன்னற்குத்
> தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்ரேர்க்குச்
> சென்றஇட மெல்லாம் சிறப்பு."

என்னும் மூதுரை எழுந்தது. கல்வியின் சிறப்பை நன்குணர்ந்தே திருவள்ளுவனர், "கற்றவரே

கண்ணுடையவர்; கல்லாதவர் கண்களிருந்தும் புண்ணுடையவர் என்றே கூறப்படுவர். ஆதலால் செல்வர் முன் வறியவர் தாழ்ந்து நிற்பது போல ஒவ்வொருவரும் ஆசிரியர் முன் கல்வி கற்க வேண்டும் என்னும் ஆசையால் தாழ்ந்து நின்று கற்கக் கடவர். இங்ஙனம் தாழ்ந்து கல்லாதார் இழிந்தாரே ஆவர். இக்கல்விச் செல்வமே அழி வில்லாத சீரிய செல்வம். மணியும் பொன்னும், நிலமும், பிறவும் அழிவில்லாத செல்வம் ஆகா. ஒருவன் ஒரு பிறப்பில் கற்ற கல்வி, அவனது எழுபிறப்பிலும் சென்று உதவவல்லது. மேலும் மணலின்கண் கேணியைத் தோண்டத் தோண்ட நீர் ஊறும். அதுபோலக் கற்க கற்க அறிவு பெருகும். இங்ஙனம் நாளும் வளர்பிறை போல வளரும் கல்வியறிவைப் பெருத ஒருவன் கண் ணிருந்தும் குருடனுவான்,'' என்று தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

## ஆசிரியர் கல்விப் பயிற்சி

இங்ஙனம் திருவள்ளுவர் போன்ற பெரு மக்க ளின் நல்லுரைகளை நன்கு அறிந்திருந்த காரணத் தாலும், தமது நுண்ணறிவாலும் கல்வியின் சிறப் பைக் கசடற அறிந்த அப்பனையங்கார் தம் மக்க ளைக் கல்வி பயில விட்டனர். திரு. நாராயணை யங்கார் குழந்தைப் பருவத்திலிருந்தே, கூரிய மதி வன்மை உடையவராகக் காணப்பட்டார். பேசத் தொடங்கிய நாள் முதல் தாம் காணும் பொருள் களைப் பற்றிய—மக்களைப் பற்றிய—பல விவரங் களைத் தம் அன்னையாரிடமும் தந்தையாரிடமும் கேட்டறியும் உள்ளக் கிளர்ச்சி உடையவராய்

இருந்தார். இத்தகைய இளம் பிள்ளைகள் கல்வியை ஐயம் திரிபறக் கற்பர் என்பது ஆன்ரோர் அநுபவ உரை. அவ்வுரைக்கேற்பவே நமது ஆசிரியர் தமக்கு நூல் பல கற்பித்த நல்லாசிரியர்களிடம் தமக்கு அவ்வப்போது நேர்ந்த ஐயங்களைக் கேட்டுத் தெளிந்தார். இவர் தாம் பிறந்த சிற்றூரில் சிறப்புற்றிருந்த தமிழ்ப் புலவரிடத்தும் வடமொழிப் புலவரிடத்தும் சில நூல்களைப் பயின்ருர். ஆசிரியர் கூறும் தெளிவுரைகள் மாணவர் மனத்தில் நன்கு பதியும். அப்பொருள் தமக்கு விளங்காவிடில், இவர் மிக்க மரியாதையோடு ஆசிரியரை மறு முறை கூறச் சொல்லித் தெரிந்துகொள்ளுவது வழக்கம். இவருடைய பணிவு, அடக்கம், உண்மை பேசுதல் முதலிய நற்பண்புகள் நாளும் வளர்ந்து வருதலைக்கண்ட ஆசிரியன்மார் இவர்மீது பேரன்பு கொண்டு மிக்க மகிழ்ச்சியுடன் பாடம் கற்பிப்பா ராயினர்.

## இராமநாதபுரத்தில்

நம் ஆசிரியர் சொந்த ஊரில் கல்வி கற்ற பின்னர், இராமநாதபுரம் சென்ருர். அக்காலத்தில் இராமநாதபுர ஆட்சியைக் கவனித்து மறைந்த பொன்னுச்சாமித் தேவரின் புகழ் தமிழ் நாடெங் கணும் பரவியிருந்தது. அப்பெரியார் தமிழறிவு சான்றவர்; கவி பாடும் ஆற்றல் பெற்றவர்; புலவர் தம் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்து, அவரவர் தகுதிக்கேற்பப் பரிசில்களை வழங்கி வந்தவர்; அவர் அக்காலத்திருந்த வடமொழிப் புலவர்களையும் நன்கு ஆதரித்து வந்தார்; தமிழகத்து இசை வாணர்களையும் ஏற்றிப் போற்றினர். அவரால்

ஆதரிக்கப்பெற்ற வடமொழிப்புலவருள் சாமாசாரியார், பந்தல்குடி வேங்கடாசாரியார் என்னும் இருவரும் இராமநாதபுரத்தில் வாழ்ந்தவர். சாமாசாரியார் இராமநாதபுரத்திலிருந்த வடமொழிக் கல்லூரியில் தருக்க ஆசிரியராக இருந்தார். உபய வேதாந்த வித்துவான் பந்தல்குடி வேங்கடாசாரியார் சிறந்த இலக்கணப் புலவர். நமது ஆசிரியர் இவ்விரு பெரும் புலவரிடமும் வடமொழித் தருக்க நூல்களையும் இலக்கண நூல்களையும் ஐயம் திரிபு அறக் கற்ருர். நாராயணையங்கார் இவ்வாறு வடமொழி நூல்களைப் பயின்று வந்தபொழுது, இராமநாதபுரத்தில் **சதாவதானம் முத்து சுவாமி ஐயங்கார்** என்பவர் சேதுபதி அரசவைப் புலவராக விளங்கினர். அப்புலவர் அக்காலத்தில் விளங்கிய பாண்டி நாட்டுப் பெரும் புலவருள் மதிக்கத் தக்க ஒருவராவர்.

ஆசிரியர் திரு. நாராயணையங்கார் முத்து சுவாமி ஐயங்காரிடம் எழுத்தையும் சொல்லையும் பற்றிப் பேசும் நன்னூலையும், செய்யுள் இலக்கணத்தைப் பற்றிக் கூறும் யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலவிருத்தி என்னும் நூல்களையும்; நம்பி அகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை என்னும் பொருள் பற்றிய நூல்களையும்; தண்டியலங்காரம், மாறன் அலங்காரம் என்னும் அணி இலக்கண நூல்களையும், அஷ்டப் பிரபந்தம், நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய வைணவப் பிரபந்த நூல்களையும் கற்ருர்; பின்னர்த் தொல்காப்பியம், வீர சோழியம் முதலிய இலக்கணங்களையும்; புறநானூறு போன்ற தொகை நூல்களையும்; திருக்குறள் நாலடியார் போன்ற நீதி நூல்

களையும்; சிலப்பதிகாரம் மணிமேகலை போன்ற காவிய நூல்களையும் பல ஆண்டுகள் கற்றுத் தேர்ந்தார். இப்பயிற்சியில் இவருக்கு ஆசிரியராக இருந்தவர் முதலிற் கூறப்பெற்ற முத்துசாமி ஐயங்காரும், திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த பழனிக் குமாரத் தம்பிரான் என்பவரும் ஆவர்.

உயர்ந்த நூல்களைக் கற்றதனுலும், முத்து சுவாமி ஐயங்கார் போன்ற ஆசிரியப் பெருமக்களிடம் நெருங்கிப் பழகியதனுலும் இயல்பாகவே திரு. நாராயணையங்காரிடமிருந்த நற்பண்புகள் மேலும் நன்கு வளரத் தலைப்பட்டன.

## 4. தமிழ்ப்பணி

### மதுரைத் தமிழ்ச் சங்கம்

திரு. நாராயணையங்கார் சதாவதானம் முத்து சுவாமி ஐயங்காரிடம் கல்வி கற்றவர் ஆதலின், அவ்வாசிரியரிடம் கல்வி கற்ற பாண்டித்துரை, பாஸ்கர சேதுபதி இவர்களது நட்பு இவருக்கு ஏற்பட்டது. இவருடைய பெரும்புலமையிலும் நல்லியல்புகளிலும் ஈடுபட்ட அப்பெருமக்கள் இருவரும் இவரைத் தம் அவைகளிலேயே வைத்து ஆதரித்து வரலாயினர். 1901-ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கம் உண்டான பின்பு திரு. நாராயணையங்கார் தமிழ்ச் சங்கத்திற் படித்துவந்த மாணவர்க்குத் தமிழ் கற்பிக்கும் தலைமையாசிரியரானுர்.

### கலாசாலை ஆசிரியர்

திரு நாராயணையங்கார் வடமொழி, தென் மொழி நூல்களில் வல்லவர்; மந்திரம், மருத்துவம்,

சோதிடம், தருக்கம் முதலிய பிற கலைகளிலும் தேர்ச்சி பெற்றவர்; இவற்றோடு ஒழுக்கம், அடக்கம் முதலிய உயர்குணங்களும் சிறக்கப் பெற்றவர். ஆதலின் இவரைச் சேதுவேந்தர் முதல் அனைவரும் மதித்துப் போற்றினர். இப்பெரியார் தாம் ஐயமறப் படித்தது போலவே தம்மிடம் தமிழ்க் கல்வி பயின்ற மாணவர்க்கும் ஐயமறக் கல்வி புகட்டினர்; மந்த புத்தியுள்ள மாணவர்கட்கும் எளிதில் விளங்குமாறு உலக நடைமுறைகளை எடுத்துக் காட்டிப் பொருள் விளங்க வைக்கும் திறம் இவர்பால் சிறந்து காணப்பட்டது. இவரிடம் கல்வி பயின்ற அனைவரும் இதனையே சொல்லிச் சொல்லி மகிழ்வது வழக்கம். பல கலைகளிலும் வல்லவராய் இருந்த காரணத்தால் இவர் பெருநூல்களில் வரும் சோதிடம், மருத்துவம், இசை, நடனம் முதலிய பிற கலைச்செய்திகளை மிகத் தெளிவாக விளக்கி மாணவர்க்கு வியப்பையும் தம்பால் மதிப்பையும் உண்டாக்கிவந்தனர். ஆசிரியர் இங்ஙனம் தாம் ஏற்றுக் கொண்ட ஆசிரியப் பணியைத் தம் இறுதி நாள் வரை-சற்றேறத்தாழ நாற்பத்தாறு ஆண்டுகள் மிக்க பொறுமையுடனும் புகழுடனும் ஆற்றி வந்தார்.

### ''செந்தமிழ்'' ஆசிரியர்

நம் ஆசிரியர் 1910-ஆம் ஆண்டு முதல் ''செந்தமிழ்''த்தாளுக்கும் ஆசிரியரானர்; அதுமுதல் தம் மறைவுவரை - ஏறத்தாழ முப்பத்தாறு ஆண்டுகள் அதன் ஆசிரியராயிருந்து, அதனைச் சிறந்த முறையில் நடத்திவந்தார். இவர் அத் திங்கள் இதழில் தமிழ் மொழியின் இயல்பு, இலக்கணம், இலக்கியம்,

தருக்கம், சோதிடம், பண்டை வரலாறு முதலிய பல பொருள் பற்றிப் பல அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். அவை இவருடைய பல கலை அறிவையும், படிப்பவர் உள்ளத்திற் பதிய வைக்கும் முறையில் செய்திகளை எழுதும் ஆற்றலையும், ஒன்றை எடுத்துக்கொண்டு வாதிக்கும் திறனையும், உண்மையை அஞ்சாது எடுத்துக் கூறும் மனத்திண்மையையும் நன்குணர்த்துவனவாகும். "வான்மீகரும் தமிழும்" என்ற தலைப்பில் இவ்வாசிரியர் "செந்தமிழ்" இதழ்களில் வெளியிட்டுள்ள ஆராய்ச்சி, இவரது ஆழ்ந்த புலமையை வெளியிடுவதாகும். இதனை ஒவ்வொரு தமிழரும் ஊன்றிப் படித்தல் நல்லது.

### பதிப்பாசிரியர்

கலாசாலைப் பேராசிரியராகவும், "செந்தமிழ்" இதழாசிரியராகவும் வேலை பார்த்துக்கொண்டு நாராயணையங்கார் பல அரிய தமிழ் நூல்களைப் பதித்து வெளியிடுவித்தனர். அவற்றுள் அனுமான விளக்கம், பாண்டியம், மாறனலங்காரம், பழமொழி, அண்டகோள விருத்தி, அமிருத ரஞ்சனி என்பன குறிக்கத் தக்கவை. அனுமான விளக்கம் என்பது மணிமேகலை காவியத்தில் உள்ள 29-ஆம் காதையின் விளக்கமாகும். பாண்டியம் என்பது தமிழ்ச் சுருக்கெழுத்து முறை. மாறனலங்காரம் என்பது சிறந்த அணியிலக்கண நூல்; பழமொழி என்பது பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று.

**உரையாசிரியர்**

பழமொழிப் பாக்களுக்குக் குறிப்புரையும், அண்டகோள விருத்தியுரையும், அமிருத ரஞ்சனிக்கு உரையும் நம் ஆசிரியரால் எழுதப்பட்டன. இந்நூல்களுக்கு ஆசிரியர் வரைந்த உரை விளக்கத்தைப் படித்தறிந்த புலவர் பெருமக்கள் இவரைச் ‘சிறந்த உரையாசிரியர்’ என்று பாராட்டினர்.

**மொழிபெயர்ப்பாளர்**

தேவர் பதிப்பித்த நூல்களுக்கெல்லாம் திரு. நாராயணையங்கார் தம்மால் இயன்ற உதவி புரிந்தார்; தேவரது தூண்டுதலால் உந்தப்பட்டு, வடமொழியில் அமைந்த **சாதக சந்திரிகை** என்னும் சோதிட நூலை அழகிய வெண்பாக்களில் மொழி பெயர்த்தார்; அப்பாக்களுக்கு உரையும் எழுதி முடித்தார். அந்நூல் தேவர் அவையில் அரங்கேற்றம் பெற்றது; தேவரது பொருளுதவியால் 1897-ஆம் ஆண்டில் அச்சிடப்பெற்றது. திரு. நாராயணையங்கார் வெளியிட்ட முதல் நூல் இதுவேயாகும். இவர் பாக்களைப் பாராட்டிப் பாஸ்கர சேதுபதியும் தேவரும் பிற புலவரும் இவருக்கு வாழ்த்துக் கூறினர்.

**தேர்வாளர்**

நமது ஆசிரியர் மதுரைத் தமிழ்ச் சங்கத் தனித் தமிழ்த் தேர்வுகளுக்குத் தேர்வாளராகப் பல ஆண்டுகள் இருந்து தொண்டாற்றினர்; யாழ்ப்பாணத்து ஆரிய-திராவிட பாஷாபிவிருத்தி சங்கத் தேர்வுகளுக்கும் தேர்வாளராக இருந்தார். சென்னைப் பல்கலைக் கழகமும் அண்ணுமலைப் பல்கலைக்

கழகமும் தாம் நடத்திய புலவர் தேர்வுகளுக்கு இவரைத் தேர்வாளராக நியமித்துப் பெருமை பெற்றன.

### தமிழே உயிர்

ஆசிரியர் தமிழைத் தம் உயிராகக் கருதியவர். கலாசாலையில் அன்றித் தனித்த முறையில் தம் மிடம் படிக்க விரும்பிய மக்களுக்கும் இவர் தமது அரிய நேரத்தையும் பொருட்படுத்தாமல் மிகுந்த உணர்ச்சியுடன் பாடம் கற்பித்துவந்தார். எவர் எந்நேரத்தில் ஐயம் கேட்க வரினும், அவரை அன் புடன் இருத்தி, அவர்தம் ஐயத்தைப் போக்கி அக மகிழச் செய்வது இவர் வழக்கமாக இருந்தது.

## 5. குண நலன்கள்

### பல்லோர் பாராட்டு

தமிழ்ப் பேராசிரியர் திரு. நாராயணையங்கா ருடைய பெரும் புலமையைப் பாராட்டி அவ்வப் போது, தேவர் உள்ளிட்ட பெருமக்கள் பலர் பரி சளித்துப் பெருமைப்படுத்தினர். 1922-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 13-ஆம் நாள் வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வந்தார். அந் நன்னாளில் சென்னை அரசாங்கம் அந்த இளவரசர் கைகளால் இவருக்கு ஒரு ஜோடி சால்வையும், சிங்கமுகத் தோடாவும், பதக்கமும் பரிசளிக்கச் செய்தது. பின்னர் மது ரைத் தமிழ்ச் சங்கத்தார், சங்கத்தின் 33-ஆம் ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கிய சென்னை மாநில ஆளுநர் சர். முகமது உஸ்மான் சாகிப் பகதூர் அவர்கள் கையால் பொன் முடிப்பும் சால்வையும் கொடுத்துச் சிறப்பித்தனர். மதுரைத்

தமிழ்ச் சங்கத் தலைவரும் சேதுவேந்தருமாக உள்ள ஷண்முக ராஜேசுவர நாகநாத சேதுபதி அவர்கள் தமது 37-ஆம் ஆண்டு நிறைவு விழாவில் நம் ஆசிரியர்க்குப் பொற் பதக்கமும் பட்டாடையும் அளித்துச் சிறப்பித்தனர். பாலையம்பட்டி ஜமீன்தாரும் பாண்டித்துரை அவர்களின் சகோதரர் மகனும் ஆகிய இராமசந்திரத் தேவர் அவர்கள் ஒருமுறை ஒரு ஜோடி சால்வை பரிசளித்து மகிழ்ந்தனர். இவ்வாறு நம் ஆசிரியர்க்குத் தமிழகத்து மடாதிபதிகளும் செல்வர் பலரும் அவ்வப்போது பரிசளித்துச் சிறப்பித்தது உண்டு.

### அரிய செயல்

சங்க காலத்தில் மோசிகீரனர் என்ற புலவரும் சேரவேந்தனை பெருஞ்சேரலிரும்பொறையும் சிறந்த நண்பர்களாய் இருந்தார்கள். ஒருநாள் சேரனது அரண்மனையில் இருந்த முரசு, அது வைக்கப்பெற்றிருந்த கட்டிலிலிருந்து தூய்மை செய்தற்பொருட்டு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. நடந்து சென்ற களைப்பால் புலவர், அக்கட்டிலில் எவரும் படுத்தலாகாது என்பதை மறந்து, படுத்து உறங்கினர். அங்கு வந்த சேரன் புலவர் செய்த தவற்றுக்குச் சினம் கொள்ளாது, அவரைத் தண்டியாது, அவரது களைப்பைப் போக்கக் கவரி வீசினன். புலவர் விழித்தெழுந்து, அரசனது செயற்கரிய செயலைப் பாராட்டி மகிழ்ச்சிக் கண்ணீர் உகுத்தார்.

இத்தகைய நிகழ்ச்சி ஒன்று பாண்டித்துரைத் தேவர் மாளிகையில் நடைபெற்றது. மாளிகை மண்டபத்தில் தேவர் படுத்துறங்கக் கட்டிலொன்று

இடப்பெற்றிருந்தது. அதன்மீது அவரைத் தவிர வேறு எவரும் படுத்தறியார். ஒரு முறை நம் ஆசிரியர் மிகுந்த களைப்பால் தம்மையும் மறந்து அக்கட்டிலிற் படுத்து உறங்கினூர்.

தம் அறையுள்ளிருந்து வெளிவந்த தேவர், தமது கட்டில்மீது ஐயங்கார் படுத்துறங்குவதைக் கண்டார். உடனே அவர் சீற்றம் கொள்ளவில்லை; புன்முறுவல் கொண்டார்; ஐயங்காரை அணுகி உற்று நோக்கினூர்; ஆழ்ந்த உறக்கத்திலிருந்த அவரது முகத்தில் வியர்வைத் துளிகள் காணப் பட்டன. உடனே தேவர் உள்ளே சென்று விசி றியை எடுத்துவந்து, தம் உள்ளம் மகிழ விசிறினூர். மோசிகீரனூரைப் போலவே, குளிர்ந்த காற்றுப்பட் டும் கண் விழித்த ஆசிரியர், சொல்லொணு வியப் படைந்தார்; கட்டிலிலிருந்து இறங்கித் தேவரின் இரு கைகளையும் பற்றிக்கொண்டார். தேவரது அருட்செயலைத் தம் மகிழ்ச்சிக் கண்ணீரால் பாராட் டினூர். தேவரது செயற்கரிய இச்செயல், ஆசிரிய ருடைய பெரும் புலமைக்கும் அருங்குணங்கட்கும் சிறந்த எடுத்துக்காட்டன்றோ?

## குணக்குன்று

நம் ஆசிரியர் சீற்றம் இன்னது என்பதை அறியாதவர்; சீற்றங் கொண்டாரையும் அமைதி யுறச் செய்யும் சாந்த முகத்தைக் கொண்டவர். எப்பொழுதும் புன்முறுவல் பூத்த முகத்தினராய் அனைவருடனும் இவர் பேசிவந்த காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும். இவரது பெரும் புலமை யைக் கேள்வியுற்று, “அவர் இப்படியிருப்பார், அப்படியிருப்பார்” என்று தம் மனத்தில் தாமே

ஓவியம் தீட்டிக்கொண்டு வந்து, இவரை நேரிற் கண்டு, இவருடைய மெல்லிய உடலையும், அடக்க மான தன்மையினையும் பார்த்து ஏமாற்றம் உற்றவர் பலராவர்.

நம் ஆசிரியர்,

“ அடக்கம் அமரருள் உய்க்கும் ; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.”

என்ற கொள்கையுடையவர் ; நாடெங்கும் இருந்த தமிழறிஞர்கள் தம் ஐயங்களைக் கடித மூலமாக எழுதி அனுப்பிக்கொண்டே யிருந்தனர். ஆசிரியர் சிறிதும் மனச்சோர்வு கொள்ளாமல் அவற்றிற் கெல்லாம் தக்க பதில் எழுதி விடுத்தது இவரது பொறுமையை விளக்கும் சான்றாகும். அதிகம் அறைவதேன் ? இப்பெரியார் கல்விக்கடல் ; பல் கலைக்குரிசில் ; குணக்குன்று. இப்பெரியாருடைய தமிழ் வாழ்க்கை உங்கள் தமிழ் வாழ்க்கைக்குச் சிறந்த வழிகாட்டியாகும்.*

---

*இப்பேராசிரியர் 1947-ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 29-ஆம் நாள் தமிழன்னை துயர்கூர இம்மண்ணக வாழ்வை நீத்தார்.